விலை : 20.00
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 பங்குனி 24 புதன்கிழமை (06.04.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 109

## வடக்கு ஆளுநர் மன்னார் விஜயம்

(மல்லாவி)

மன்னார் மாவட்டம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசமாகையால் சகல விடயங்களிலும் அதனை முன்னுரிமைப்படுத்த வேண்டும் என மன்னார் ஆயர் இல்லம் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....

## ஆணைக்குழுவில் மகிந்த யாப்பா ஆஜர்

(கொழும்பு)

பாரிய இலஞ்ச ஊழல் மோசடி எதிர்ப்பு ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னாள் விவசாயத்துறை அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த யாப்பா அபேவர்தன நேற்று ஆஜராகியுள்ளார்.

ஹெக்டர் கொப்பேகடுவ விவ

24ஆம் பக்கம் பார்க்க....

# ஒவ்வொருவர் தலையிலும் ரூ.4 இலட்சத்து 50 ஆயிரம்

## கடன் சுமை உண்டு என்கிறார் கீர்த்தி தென்னக்கோன்




(கொழும்பு)

நாடு பாரிய பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ள நிலையில் நாட்டின் கடன் தொகையை ஒவ்வொரு குடிமகனுக்குமாக பகிர்ந்து கொடுத்தால் ஒருவர் செலுத்த வேண்டிய கடன் தொகை ரூபாய் 4 இலட்சத்து 50 ஆயிரம் ஆக காணப்படுகின்றது என ஊழலுக்கெதிரான முன்னணி அமைப்பின் ஏற்பாட்டாளரும் கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான கீர்த்தி தொன்னக்கோன் சுட்டிக்காட்டியுள்ளார். (23-ம் பக்கம்)

3 மாதங்களாக தடுப்பிலிருந்த

## இந்திய மீனவர்கள் 99 பேர் விடுதலை

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றத்திற்காக இலங்கை சிறைச்சாலைகளில் 3 மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த 99 இந்திய மீனவர்களையும் விடுதலை செய்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தால் நேற்றைய தினம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 15 ஆம் திகதிக்கு பின்னரான நாட்களில் இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டதாக 99 இந்திய மீனவர்கள் இலங்கைக

23ஆம் பக்கம் பார்க்க....

## முற்றுகை

(கொழும்பு)


ஐம்பதுக்கு மேற்பட்ட படகுகளில் முல்லைத்தீவின் சாலை கரையோரப்

23ஆம் பக்கம் பார்க்க....

## தரம் - 5




## பள்ளிவாசலை தகர்க்க முயன்ற ராவணா பலயவின் முயற்சி தோல்வி




(கொழும்பு)

பலாங்கொடை, கூரகல பள்ளி வாசலை இடித்துத் தகர்க்கும் நோக்

23ஆம் பக்கம் பார்க்க....

## சோபித தேரரை கொல்வதற்கு மகிந்த அரசு முயற்சித்தது!

### சுமங்கள தேரர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

உடுவே தம்மாலோக்க தேரர் தனது சுய நலத்திற்காகவும், இழிவான செயற்பாடுகளுக்காகவும் சோபித தேரரின் பெயரை பயன்படுத்தி வருகின்றார் என ஊழலுக்கு எதிரான முன்னணியின் தலைவர் உலப்பனே சுமங்கள தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற

23ஆம் பக்கம் பார்க்க....

## அரசியலமைப்பு நிர்ணய சபையாக நாடாளுமன்றம் நேற்று மாற்றம்

### சபை உறுப்பினர்களும் எதிர்ப்பின்றி நியமனம்

(கொழும்பு)

நாட்டில் புதிய அரசியலமைப்புச் சட்டத்தை ஏற்படுத்துவதற்காக முழு நாடாளுமன்றமும் நேற்று அரசியலமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்டது.

அரசியலமைப்பு நிர்ணய சபையாக மாற்றியமைக்கப்பட்ட நாடாளுமன்றம் நேற்று முதல் தடவையாக கூடியது. இந்த பேரவைக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைவராக செயற்படவிருக்கிறார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் தலைமைத்துவத்தில் அனைத்து கட்சி உறுப்பினர்களையும் உள்ளிடக்கிய 21 பேர் கொண்ட வழி நடத்தல் குழுவொன்றும் நேற்று ஏற்படுத்தப்பட்டது.

நாட்டுக்கு ஏற்ற அரசியலமைப்பை ஏற்படுத்துவதற்காகவே நாடாளு

23ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தல்களை பிற்போடுவது ஜனநாயகத்துக்கு எதிரானது

### பெப்ரல் அமைப்பு கண்டனம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை பிற்போடுவது ஜனநாயகத்துக்கு விரோதமானது என நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தல் கண்காணிப்புக்கான மக்கள் இயக்கம் (பெப்ரல்) கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்துள்ள அவர்,

தேர்தல் தொகுதி எல்லை மறு

24ஆம் பக்கம் பார்க்க....

## மின்னல் தாக்கி சிறுவன் பலி

(வவுனியா)

வவுனியா, கத்தார்சின்னக்குளம் பகுதியில் நேற்று மாலை மின்னல் தாக்கியதில் சிறுவன் ஒருவன் மரணமடைந்துள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

24ஆம் பக்கம் பார்க்க....

## கூட்டணியிலிருந்து விலகியுள்ளோம் தனிக்கட்சியாக அங்கீகரியுங்கள்

### சபாநாயகரிடம் விமல் கோரிக்கை

(கொழும்பு)



தேசிய அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடாளுமன்றில் சுயாதீன குழுவாக செயற்படும் தமது கட்சிக்கு நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சியொன்றுக்கு வழங்கப்படும் சிறப்புரிமைகளை வழங்க வேண்டும என

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வாகன விபத்து யுவதி காயம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை விநாயக முதலியார் வீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணியளவில் கார் ஒன்றும் துவிச்சக்கர வண்டி ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் யுவதி ஒருவர் படுகாயமடைந்தார்.

நாத்தியம்மன் கோவிலடி திக்கத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் வனஜா (வயது 22) என்ற யுவதியே படுகாயமடைந்தவராவார். வீதியில் சைக்கிளில் சென்ற யுவதியை கார் மோதியதாகத் தெரிவிக்கப் படுகிறது. மேலதிக விசாரணைகளைப் பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (செ-60)

## இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் சமூக விஞ்ஞானத் துறையினால் பின்வரும் கற்கை நெறிகளிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

சமூகவியல் சான்றிதழ் கற்கை நெறி **(Certificate in Social Sciences)**, சமூக விஞ்ஞானத்தில் கலைமாணி **(BA Degree in Social Sciences)**, இளைஞர் அபிவிருத்தியில் டிப்ளோமா **(Diploma in Youth Development)**, ஆகிய கற்கை நெறிகளிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் பிறவுண் வீதி கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்திலும் 155ஆம் மைல்கல், கண்டிவீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள கிளிநொச்சி கற்கை நிலையத்திலும், ஒட்டுசுட்டான்வீதி, புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள முல்லைத்தீவு கற்கை நிலையத்திலும் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்க முடியுமென யாழ் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

* * * * * *

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட மேலாண்மைக் குழுவின் தீர்மானத்திற்கமைவாக மன்னார் மாவட்டத்தில் புதிய கற்கை நிலையமொன்றை மிக விரைவில் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் சமூக விஞ்ஞானத் துறையினால் பின்வரும் கற்கை நெறிகளிற்கான புதிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

சமூகவியலில் சான்றிதழ் கற்கை நெறி **(Certificate in Social Sciences)**, இளைஞர் அபிவிருத்தியில் டிப்ளோமா **(Diploma in Youth Development)**, சமூக விஞ்ஞானத்தில் கலைமாணி **(BA Degree in Social Sciences)**, தமிழ் மாணவர்களிற்கான சிங்கள மொழிப் பாட நெறி, சிங்கள மாணவர்களிற்கான தமிழ் மொழிப் பாட நெறி ஆகிய கற்கை நெறிகளிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி கற்கை நெறிகளை கற்க விரும்பும் மாணவர்கள் 077 562 5352 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு இக கற்கை நெறிகள் தொடர்பான விபரத்தைப் பெற்றுக் கொள்ளலா மென யாழ் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

* * * * * *

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மொழிக் கற்கைத் துறையினால் சிங்கள மற்றும் தமிழ் பாடநெறிகளிற்கான மொழிசார் சான்றிதழ் கற்கை நெறிகளிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இப் பாடநெறிக்கு விண்ணப்பிப்பதற்கு எந்தவித கல்வித் தகைமையும் அவசியமில்லை. ஆயினும் விண்ணப்பதாரி பதினெட்டு வயதைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்திலும், 155ஆம் மைல்கல், கண்டிவீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள கிளிநொச்சி கற்கை நிலையத்திலும் ஒட்டுசுட்டான் வீதி, புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள முல்லைத்தீவு கற்கை நிலையத்திலும் மற்றும் மன்னார் கற்கை நிலையத்திலும் இணையத்தளம் மூலம் விண்ணப்பிக்க முடியும்.

அவ்வாறின்றி தனியாக விண்ணப்பிக்க விரும்புபவர்கள் www.ou.ac.lk என்ற இணையத்தளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் விண்ணப்பிக்கலாமென யாழ் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (செ)

## ஓய்வுபெற்ற படை அதிகாரிகள் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஓய்வுபெற்ற முப்படையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் எதிர்கால அபிவிருத்தி தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் மாதங்களில் யாழ்.பாதுகாப்பு படைத்தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

எனவே யாழ்.மாவட்டத்தில் உள்ள ஓய்வு பெற்ற முப்படையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் இக் கலந்துரையாடல் தொடர்பான மேலதிக விபரங்களை 021 222 2001, 021 222 9899, 077 690 7218 என்ற தொலைபேசி இலங்கங்கள் ஊடாக இம்மாத முடிவிற்குள் தொடர்பினை ஏற்படுத்தி விபரங்களினை பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.பாதுகாப்பு படைத்தலைமையகம் அறிவித்துள்ளது. (செ-9)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 9.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

கொடியேற்றத்திற்கான கொடிச்சீலை பாரம்பரிய முறைப்படி இலங்கை நாயகி அம்மன் ஆலயத்தில் இருந்து நேற்றையதினம் மாலை எடுத்துவரப்பட்டது.

பத்து நாட்கள் நடைபெறவுள்ள இத் திருவிழாவில் எதிர்வரும் 15ஆம் திகதி தேர் திருவிழா நடைபெறவுள்ளது. (செ-9)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை வேளாதோப்பு ஸ்ரீ மதுரை மகா முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடை பெறவுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு தேர்த்திருவிழாவும் 21ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (இ-5)

## பகுப்பாய்வில் தற்கொலை அங்கி

(சாவகச்சேரி)

அண்மையில் யாழ். சாவகச்சேரி பிரதேசத்தில் மீட்கப்பட்ட தற்கொலை அங்கி மற்றும் வெடிபொருட்கள் தொடர்பில் அரச இரசாயன பகுப்பாய்விற்கு உட்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதவான் அருனி ஆடிகல உத்தரவிட்டுள்ளார்.

தற்கொலை அங்கி, கிளைமோர் குண்டு உட்பட வெடிபொருட்கள் உள்ளிட்ட பல பொருட்கள் மீட்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் மீட்கப்பட்ட பொருட்களை அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களத்திற்கு சமர்ப்பித்து அறிக்கையை பெற்றுக்கொள்ளுமாறு பயங்கரவாத விசாரணைப் பிரிவினருக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (செ-12)


## தேவை

உடைகளை சந்தைப்படுத்தி விற்பனை செய்வதற்கு ஆண்கள், பெண்கள் உடனடியாகத் தேவை.

தொடர்பு : 077 931 9684

(4117)



## இரணைமடு திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில்



வருடாந்த பெருந் திருவிழா

12.04.2016 செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் விழாக்கள் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

- தேர்த் திருவிழா 20.04.2016
- தீர்த்தத் திருவிழா 21.04.2016
- பூங்காவனத் திருவிழா 22.04.2016

குறிப்பு: விழாக் காலங்களில் ஆலய வீதியில் வியாபாரம் செய்ய விரும்புவோர் 10.04.2016 ஞாயிற்றுக்கிழமை 10.00 மணியளவில் அறங்காவலர் சபையினரிடம் தொடர்பு கொண்டு பற்றுச்சீட்டினை செலுத்தி வியாபார நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

தொடர்பு : 021 320 0261 அறங்காவலர் சபையினர்

இரணைமடு திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில்

(C-4227)



## ஆறுதல் நடத்தும் ஆய்வுக் கட்டுரைப் போட்டி

வடக்கு, கிழக்கு, மத்திய மாகாணத்தின் தமிழ் பேசும் மாணவர்களின் கல்விப் பெறுபேறுகளின் தற்போதைய நிலை தொடர்பான கட்டுரைப்போட்டி ஆறுதல் நிறுவனத்தினால் நடத்தப்படவுள்ளது. இக்கட்டுரைப் போட்டியில் இப்பிரதேசங்களைச் சார்ந்த மாணவர்கள், கல்வியியலாளர்கள் மற்றும் ஆர்வமுடையவர்கள் எவரும் வயதுக் கட்டுப்பாடின்றி பங்குபற்றலாம்.

விடயம் :- "வடக்கு, கிழக்கு, மத்திய மாகாணத்தின் தமிழ் மொழிமூல மாணவர்களின் 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. (சா/த), க.பொ.த (உயர்தர) பரீட்சைப் பெறுபேறுகளின் தற்போதைய நிலையும், அவற்றிற்கான பரிகார நடவடிக்கைகளும்" தெரிவு செய்யப்படும், மிகச்சிறந்த கருத்துக்களை வெளிப்படுத்தும் கட்டுரைகளுக்குப் பரிசுகள் வழங்கப்படும். வட மாகாணம், கிழக்கு மாகாணம், மலையகம் ஆகியவற்றில் ஒன்றினை ஆய்வுக்களமாகக் கொள்ள வேண்டும்.

முதல் பரிசு :- ரூபா 25,000
இரண்டாம் பரிசு :- ரூபா 15,000
மூன்றாம் பரிசு :- ரூபா 10,000
மேலும் தலா ரூபா 5000.00 கொண்ட பத்து ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

கட்டுரைகள் எதிர்வரும் 29.04.2016 வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பிரதம நிறைவேற்று அதிகாரி
ஆறுதல் நிறுவனம்
இல.51, வைமன் றோட், நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(C-4224)



## கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் வருடாந்த பொதுக்கூட்டம்

காலம் :- 24.04.2016
நேரம் :- காலை 10 மணி
இடம் :- பஞ்சலிங்கம் கேட்போர்கூடம்

மேற்படி வருடாந்த பொதுக்கூட்டம் பழைய மாணவர் சங்க தலைவர் திரு.மு.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளமையால் அத்தினம் பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பிரேரணைகள் ஏதும் இருப்பின் எதிர்வரும் 18.04.2016ஆம் திகதிக்கு முன்னராக "செயலாளர், பழைய மாணவர் சங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி" என்னும் முகவரிக்கு அல்லது நேரில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(C-4225)



## ஜீவகவாத ஒத்தட பத்து

முதுகுத்தண்டு,கழுத்து, கணுக்கால், முழங்கால், இடுப்பு மணிக்கட்டு, முழங்கை, தோள்பட்டை ஆகிய இடங்களிலும் கார்ட்டிலேஜ் எனப்படும் எலும்பு திசுக்கள் குறைதல், திசுக்கள் கடினமடைதல் அல்லது தேய்மானம் ஆகியன காரணமாக ஏற்படும் வலிகளுக்கு ஜீவகவாத ஒத்தட பத்து மருந்தை பயன்படுத்துவதன் மூலம் நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.
இதனைப் பயன்படுத்துவதன் மூலம் எலும்பு மூட்டுக்களில் திசுக்களின் வளர்ச்சி அதிகரிக்கும்.

Manufactured by:
Jeewaka Herbal Products (pvt) Ltd
Yakkala

அனைத்து பாமசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்

சந்தைப்படுத்துவோர்
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(சத்திரச்சந்தி சிக்னல் லைற்றுக்கு அருகாமையில்)
தொ.பே - 021 - 222 2567

(C-4220)



## உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப

நாட வேண்டிய ஒரே இடம்

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392

(C-4217)

# நாட்டின் பாரிய கடன் தொகைக்கு மகிந்த அரசாங்கமே பொறுப்பு

## மரிக்கார் எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

இந்த நாட்டின் பாரிய கடன் தொகைக்கு மகிந்த அரசாங்கமே பொறுப்பு. அந்த அரசாங்கமே அதற்காக பதில சொல்லியாகவேண்டும் என கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கொலன்னாவைத் தொகுதி ஐ.தே.க. அமைப்பாளருமான எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

கொலன்னாவையில் நேறறு இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டின் பொருளாதாரத்தினை நாசமாக்கியது மகந்த அரசா அல்லது மைத்திரி ரணிலின் நல்லாட்சி அரசா என்பதை மக்கள் மனதால் அல்ல, தலையால் சிந்திக்க வேண்டும். கடன் தொகை அதிகரித்துள்ளதாக பொது எதிரணியினர் குற்றம் சுமத்துகின்றனர். இக்கடன் தொகைக்கு பொறுப்பு சொலல வேண்டியது இந்த அரசு அல்ல. மகிந்த ஆட்சியே இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

இந்த நாட்டின் பொருளாதாரத்தினை எமக்குப் பொறுப்புத் தந்தபோது 19வீதமாக இருந்த நாட்டின் வரி வருமானம் 10.2 வீதமாக குறைவடைந்துள்ளது. 2013ஆம் ஆண்டு நாட்டின் மொத்த வருமானம் 1153 பில்லியன்களாகும். எனினும் 1162 பில்லியன் ரூபா கடன் வட்டி தவணைக் கொடுப்பனவுக்காக செலவிடப்பட்டுள்ளது. அதுபோன்று 2014 வருட இறுதியில் அரசாங்கத்தின் கடன் 7373 பில்லியன்களாகும். இதனடிப்படையில் தனியார் கடன் 357,233 ரூபாவாகும். உண்மையில் கடந்த அரசின் கடன் தொகை 8817 பில்லியன்களாகும். இறுதியில் இந்தச் சுமை எமது அரசின் தலையிலேயே விழுந்துள்ளது. என்றாலும் இந்தத் தடைகளையெல்லாம் உடைத்தெறிந்துவிட்டு எமது அரசாங்க காலத்தில் பொருளாதாரத்தினை கட்டியெழுப்ப நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

நாட்டின் பொருளாதாரத்தினை உயர்த்த வேண்டுமாயின் ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும். 2015 ஏற்றுமதி வருமானம் 9 மில்லியன் டொலர்களை 2020 ஆகும் போது 20 மில்லியன் டொலர்களாக அதிகரிக்க வேண்டும்.

இந்த இலக்கினை அடைய 4 ஆண்டு காலத்துக்குள் எமது ஏற்றுமதியை இரு மடங்காக அதிகரிக்க வேண்டியுள்ளது என் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# மகிந்தவின் இராணுவப் பாதுகாப்பு நீக்கம்

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு பாதுகாப்பு வழங்கி வந்த இராணுவத்தினரை அந்தப் பணியில் இருந்து விலக இராணுவத் தளபதி உத்தரவிட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

போர்க்காலத்தில் இருந்து மகிந்த ராஜபக்ஷவுக்கு இராணுவ கொமாண்டோக்களால் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகின்றது.

கேணல் மகேந்திர பெர்ணாண்டோ, இந்த இராணுவ அணிக்குப் பொறுப்பாக இருக்கின்றார்.

89 பேரைக் கொண்ட இந்த அணியையே மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புப் பணியில் இருந்து விலக உத்தரவிடப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. (இ-5)


### ஒன்பது கடைகளில் திருட்டு

அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஒன்பது வர்த்தக நிலையங்கள் இனந்தெரியாத நபர்களால்உடைக்கப்பட்டுபணம்உள்ளிட்ட பொருட்கள் களவா டப்பட்ட சம்பவம் மக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படு த்தியுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம் பெற்றுள்ளது. அக்கரைப்பற்று- அம் பாறை பிரதான வீதியில் உள்ள அரசயடிப் பிரதேசத்தில் ஏழு வர்த்தக நிலையங்களும் அக்கரைப்பற்று ஏ.வீ.வ் வீதியில் உள்ள ஒரு வர்த்தக நிலையமும், அக்கரைப் பற்று மணிக்கூட்டுக் கோபுர சுற்றுவட்டாரத்தினை அண்டிய பிரதேசத்திலுள்ள ஒரு வர்த்தக நிலையமுமே இவ் வாறு உடைக்கப்பட்டு அங்கி ருந்த பணம் உள்ளிட்ட பொருட்கள் களவாடப்பட்டுள்ளன. அக்கரைப்பற்று அரசயடியில் உள்ள வர்த்தக நிலையத்தில் இருந்த ஒரு இலட்சத்து 72 ஆயிரம் ரூபா பணம் இதன் போது களவாட ப்பட்டுள்ளதாக அதன் உரி மையாளர் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் முறை ப்பாடொன்றினைப் பதிவு செய்து ள்ளார். மேலதிக விசாரணைகளை அக்கரை ப்பற்று பொலிஸார் மேற் கொண டுவருகின்றனர். (இ-5)

# திருகோணமலைத் துறைமுகத்தை அமெரிக்காவுக்கு வழங்கத் திட்டம்

## அரசு மீது திஸ்ஸ எம்.பி.விசனம்



(கொழும்பு)

திருகோணமலை துறைமுகத்தை அமெரிக்காவுக்கு வழங்கும் ஒரு திட்டத்தை அரசாங்கம் திரைமறைவில் அரங்கேற்றப் போகிறது என முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண எம்.பி. தெரிவித்துள்ளார்.

சர்வதேச கடல் எல்லையை பாதுகாக்கும் பொறுப்பு இலங்கை கடற்படையினருக்கு ஒப்படைக்கப்படவுள்ளமை குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திருகோணமலையில் தெரிவித்திருந்த கருத்துக் குறித்து, விளக்கமளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அமெரிக்காவின் பாதுகாப்பு ஏற்பாடுகளை முழுமைப்படுத்த இலங்கையில் அவர்களுடைய பாதுகாப்பு முகாமொன்று அமைக்க வேண்டும் என அந்நாட்டின் ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்குப் பொறுப்பானவர் பகிரங்கமாக கருத்துத் தெரிவித்திருந்தார்.

சர்வதேச கடல் விவகாரங்களில் அமெரிக்காவுடன் தொடர்புபடுகின்றது என்பது அவர்களுக்கு திருகோணமலை துறைமுகத்துக்குள் புகுவதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றது.

இதனால் அந்த துறைமுகம் இலகுவாக அவர்களின் கைக்கு செல்கின்றது.

இதுதான் நடைபெறப் போகின்றது எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-5)

# இந்திய பாதுகாப்பு அமைச்சர், தளபதிகளுடன் இலங்கையின் கூட்டுப்படைத் தளபதி பேச்சு



நான்கு நாட்கள்பயணமாக, இந்தியா சென்றுள்ள இலங்கை கூட்டுப் படைகளின் தளபதி எயர் சீவ் மார்ஷல் கோலித குணதிலக, இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் மனோகர் பரிக்கர், இந்திய விமானப்படை மற்றும் கடற்படைத் தளபதிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் டில்லி சென்ற கூட்டுப் படைகளின் தளபதி எயர் சீவ் மார்ஷல் கோலித குணதிலக, சவுத் புளொக் பணியகத்தில் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் மனோகர் பரிக்கரைச் சந்தித்து நேற்று பேச்சு நடத்தினார்.

அதையடுத்து, இந்திய விமானப்படைத் தளபதி எயர் சீவ் மார்ஷல் அரூப் ராஹாவையும், கடற்படைத் தளபதி அட்மிரல் ரொபின் கே டோவனையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

எயர் சீவ் மார்ஷல் கோலித குணதிலக இந்தியாவன் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலைச் சந்தித்துப் பேசவும் திட்டமிட்டுள்ளார்.

இந்தியாவும், இலங்கையும், இந்தியப் பெருங்கடலில் நெருக்கமான கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

அத்துடன் பயிற்சி உள்ளிட்ட ஏனைய துறைகளிலும், இரு நாடுகளுக்கும் இடையில் ஒத்துழைப்புகளை வலுப்படுத்தும் முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன. (இ-5)

# ஒன்றரை ஏக்கர் நாசம்



மணற்காடு சவுக்கம் காட்டில் ஏற்பட்ட தீ காரணமாக ஒன்றரை ஏக்கர் சவுக்கம் காடு எரிந்து நாசமானதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தார். நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் மணற்காட்டில் உள்ள சவுக்கம் காட்டில் புகை மண்டலம் காணப்படுவதாக அப்பகுதி மக்களால் கிராம அலுவலர் ஊடாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

மாலை 6 மணிக்கு பற்றத் தொடங்கிய தீ வேகமாகப் பரவியதையடுத்து இராணுவம், பொலிஸ் தீயணைப்புப் படையினர் வரழைக்கப்பட்டு இரவிரவாக தீயணைக்கும் பணிகள் நடைபெற்றன. இந்நிலையில் நள்ளிரவு ஒன்றரை ஏக்கர் சவுக்கம் காடு எரியுண்ட நிலையில் தீயணைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிததனர்.

கால காலமாக தீ வைப்பதும் அணைக்கப்படுவதுமாக இருக்கின்றதே தவிர விறகுவெட்டச் செல்வோரை முற்றாக தடைசெய்வதற்கான பூர்வாங்க நடவடிக்கை எவையும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# 4 இந்திய மீனவர்களுக்கும் 19 ஆம் திகதி வரை மறியல்

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இராமநாதபுரத்தைச் சேர்ந்த 4 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.எம.எம் றியால் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு நெடுந்தீவு கடற்பரப்பில் ஒரு படகில் வந்து அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 4 இந்திய மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்து அவர்களை யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத் துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்றைய தினம் இவர்கள் ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதவான் அவர்களை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். (இ-9)

# சுகாதார அமைச்சின் செயலாளருக்கு எதிராக லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் புகார்

சுகாதார அமைச்சின் செயலாளருக்குஎதிராகஇலஞ்சஊழல் ஒழிப்புஆணைக்குழுவில்நேற்று முன்தினம் முறைப்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாலபேயில் அமைந்துள்ள தனியார் மருத்துவப் பல்கலைக்கழக மாணவர்களின் செயன்முறைப் பயிற்சிக்காக அரச வைத்தியசாலைகளில் இடமளிக்குமாறு சுகாதார அமைச்சின் செயலாளர் உத்தரவிட்டுள்ளார்.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக ஆரம்பம் முதல் போர்ப்பிரகடனம் செய்துள்ள அரச மருத்துவர் சங்கத்தின் முக்கியஸ்தர்கள் இதன் காரணமாக கடும் ஆத்திரமுற்றுள்ளனர்.

தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு அரச வைத்தியசாலைகளில் பயிற்சிக்காக இடமளித்திருப்பதன் மூலம் சுகாதார அமைச்சின் செயலாளர் அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்துள்ளதாக அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அத்துடன் இது தொடர்பில் நேற்று முன்தினம் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிலும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் சார்பில் முறைப்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-5)




## சர்வதேச 20 ஓவர் தரவரிசை இந்தியா தொடர்ந்து முதலிடம்

20 ஓவர் உலக கோப்பை கிரிகெட் போட்டியின் முடிவின் அடிப்படையில் அணிகள் மற்றும் துடுப்பாட்டவீரர்கள், பந்துவீச்சாளர்களின் தரவரிசைப்பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

இதன்படி அரை இறுதியில் தோல்வி கண்டு வெளியேறிய இந்திய அணி (126 புள்ளிகள்) முதலிடத்தில் நீடிக்கிறது.

கோப்பையை வென்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி (125 புள்ளிகள்) 3-வது இடத்தில் இருந்து 2-வது இடத்துக்கு முன்னேறி இருக்கிறது. அரை இறுதியில் தோல்வி அடைந்த நியூசிலாந்து அணி (120 புள்ளிகள்) ஒரு இடம் பின்தங்கி 3-வது இடம் பெற்றுள்ளது.

2-வது இடம்பிடித்த இங்கிலாந்து அணி (115 புள்ளிகள்) ஒரு இடம் ஏற்றம் கண்டு 4-வது இடத்தை பிடித்து இருக்கிறது. தென்னாபிரிக்க அணி (115 புள்ளிகள்) 5-வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

துடுப்பாட்ட வீரர்கள்வரிசையில் இந்திய அணியின் துணை அணித்தலைவர் வீராட்ஹோலி (889 புள்ளிகள்) முதலிடத்தில் நீடிக்கிறார்.

அவுஸ்திரேலிய வீரர் ஆரோன் பிஞ்ச் (803 புள்ளிகள்), நியூசிலாந்து வீரர் மார்ட்டின் குப்தில் (754 புள்ளிகள்), இங்கிலாந்து வீரர் ஜோரூட் (750 புள்ளிகள்), தென்னாப்பிரிக்க வீரர் பாப் டுபிளிஸ்சிஸ் (741 புள்ளிகள்) ஆகியோர் முறையே 2 முதல் 5 இடங்களை வகிக்கின்றனர். (க)

## இன்றைய போட்டிகள்

97 ஆவது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி (Set up Game) நடைபெற்று வருகின்றது.

இன்று புதன்கிழமை இரவு 7.00 மணிக்கு மின்னொளியில் அரியாலை சரஸ்வதி சனசமுக நிலைய மைதானத்தில் நடைபெறும் முதல் போட்டியில் அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகமும்,

இரவு 8.00 மணிக்கு நடைபெறும் போட்டியில் அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாயன் மார்கட்டு பாரதி விளையாட்டுகழக A அணியும்,

இரவு 9.00 மணிக்கு நடைபெறும் போட்டியில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்த சிறி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (க)


* * * *

பருத்தித்துறை உதைப்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திக்கம் யூத் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் முதல் போட்டியில் நவசக்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும்,

4.30 மணிக்கு நடைபெறும் இரண்டாவது போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து இளவாலை சென்லூர்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (க)

# சொந்தக் கிரிக்கெட் சபையை விட இந்திய கிரிக்கெட் சபையே அதிக ஆதரவு

## பிராவோ தெரிவிப்பு



மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவர் டேரன் சமியைப் போல் வெய்ன் பிராவோவும் சொந்த கிரிக்கெட் சபையை தாக்கி பேசியுள்ளார்.

உலகக்கிண்ண இறுதிப் போட்டிக்கு பிறகு நடந்த பரிசளிப்பு விழாவில் பேசிய டேரன் சமி, தங்களை சொந்த கிரிக்கெட் சபையே மதிக்கவில்லை என்றும், பல்வேறு பிரச்சினைகளை தாண்டியே நாங்கள் சாதித்துள்ளோம் என்று வெளிப்படையாக பேசினார்.

இந்நிலையில் அந்த அணியின் சகலதுறை வீரரான வெய்ன் பிராவோ தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், எங்கள் நாட்டு கிரிக்கெட் சரியானவர்களிடம் இல்லை.

எங்கள் கிரிக்கெட் சபை நிர்வாகிகள், இயக்குநர்களிடம் இருந்து ஒரு தொலைபேசி அழைப்பு கூட வரவில்லை. அவர்கள் எங்களை பாராட்டவே இல்லை. இது சிறந்த விடயம் கிடையாது.


நாங்கள் இந்த கிண்ணத்தை வெல்வோம் என்று அவர்கள் நம்பவே இல்லை. அடிப்படையில் இது வீரர்களுக்கும் சபைக்கும் இடையிலான மோதல்.

எங்கள் அட்டவணையை பார்த்தால், இந்த வருடம் எங்கள் நாட்டுக்கு வேறெந்த இருபது-20 போட்டியும் திட்டமிடப்படவில்லை. நான், கெயில், ரஸல் யாரும் ஒரு நாள் போட்டிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படவில்லை.

அடுத்து தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான தொடர் இருக்கிறது. ஆனால் நாங்கள் அந்த நேரத்தில் இங்கிலாந்து இருபது-20 லீக்கில் விளையாடிக் கொண்டிருப்போம்.

அதேசமயம் எங்களுக்கு இந்தியாவில் கிடைக்கும் அன்பைப் பாருங்கள். மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபையைவிட, பி.சி.சி.ஐ தான் எங்களுக்கு அதிக ஆதரவு அளித்தது என்று கூறியுள்ளார். (க)

## மன்னிப்புக் கேட்டார் மார்க் நிக்கலஸ்




உலக கோப்பை இருபது-20 தொடரின் இறுதி போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்தி, மேற்கிந்தியத்தீவுகள் சம்பியன் பட்டத்தை வென்றது.

அந்த அணி வீரர்களுக்கு உலகம் முழுவதிலும் இருந்து பாராட்டுகள் குவிந்து வருகிறது. இந்தியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா உள்ளிட்ட அணிகளில் ஏதாவது ஒரு அணிதான் கோப்பையை வெல்லும் என கிரிக்கெட் விமர்சகர்கள் கணித்தனர்.

ஆனால் கணிப்புகளை பொய்யாக்கி, மேற்கிந்தியத்தீவுகள் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. முன்னதாக மேற்கிந்தியத்தீவுகள் அணியை மூளை இல்லாதவர்கள் என, இங்கிலாந்தை சேர்ந்த முன்னாள் கிரிக்கெட் வீரரும், தற்போதைய கிரிக்கெட் வர்ணனையாளருமான மார்க் நிக்கோலஸ் கருத்து தெரிவித்திருந்தார்.

இறுதி போட்டிக்கு பிந்தைய பரிசளிப்பு விழாவின் போது பேசிய மேற்கிந்தியத்தீவுகள் அணித்தலைவர் சமி, மீடியா மற்றும் எங்கள் சொந்த நாட்டு கிரிக்கெட் போட்டி என்றாலே நாங்கள் மரியாதை குறைவாக நடத்தப்பட்டோம் என உருக்கமாக கூறினார். இந்நிலையில் மேற்கிந்தியத்தீவுகள் அணித்தலைவர் சமி மற்றும் அந்நாட்டு வீரர்களிடம் நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்டு கொள்வதாக நிக்கோலஸ் கூறியுள்ளார்.

ஆனால் தான் மேற்கிந்தியத்தீவுகள் அணி வீரர்களை மூளை இல்லாதவர்கள் என்று கூறவில்லை என்றும், அது தவறாக புரிந்து கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

இருந்தபோதும் நீண்ட பாரம்பரியம் உடைய அணியை தகுதியற்ற அணி என விமர்சித்ததற்காக மன்னிப்பு கேட்டுகொள்கிறேன் என கூறியுள்ளார். (க)

## பாகிஸ்தான் இருபது-20 தலைவராக சப்ராஸ் அஹமட் நியமனம்




பாகிஸ்தான் இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளின் தலைவராக, விக்கெட் காப்பாளரான சப்ராஸ் அஹமட் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவ்வணியின் தலைவராக இருந்த ஷகிட் அப்ரிடி, அப்பதவியிலிருந்து விலகியமையைத் தொடர்ந்து ஏற்பட்ட இடைவெளிக்கே, சப்ராஸ் அஹமட் நியமிக்கப்பட்டுள்ளார்.

உலக இருபதுக்கு-20 தொடரில் ஷகிட் அப்ரிடி தலைமையிலான பாகிஸ்தான் அணி, மோசமான பெறுபேற்றை வெளிப்படுத்தியதோடு, அப்ரிடியின் தலைமைத்துவம் தொடர்பாகவும் விமர்சனங்கள் எழுந்திருந்தன. சில நாட்களின் பினனர், தனது பதவியிலிருந்து விலகுவதாக, அப்ரிடி அறிவித்திருந் தார். இந்நிலையில், சப்ராஸ் அஹமட்டுடன நேற்றுமுன்தினம் காலை தொலைபேசியில் உரையாடிய பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷகாரியார் கான், அணித்தலைமைப் பதவி குறித்து அவரிடம் தெரிவித்தார். இதேவேளை, பாகிஸ்தான் அணியின் பயிற்றுநரான வக்கார் யூனிஸ், தனது பதவியிலிருந்து நேற்றுமுன்தினம் விலகியிருந்த நிலையில், புதிய பயிற்றுநரைத் தேடுவதற்காக, பாகிஸ்தானின் முன்னாள் தலைவராக வசிம் அக்ரம், முன்னாள் வீரரான ரமீஸ் ராஜா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அதேபோல், பாகிஸ்தானின் தேர்வுக்குழுவும் முழுமையாகக் கலைக்கப்பட்டுள்ள நிலையில், புதிய தேர்வாளர்களைத் தேடும் பணியும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்குச் சென்றுள்ளது. புதிய தேர்வாளர்கள் விரைவும் விரைவில் அறிவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. (க)

## வர்ணனையாளர் பொறுப்பிலிருந்து சுனில் கவாஸ்கர் நீக்கம்



இந்திய கிரிக்கெட் சபையின் வர்ணனையாளராகவும் இந்திய அணியின் முன்னாள் தலைவருமான சுனில் கவாஸ்கர், ஹர்சா போக்லேயுடன் இணைந்து கிரிக்கெட் சபை மேம்பாட்டில் ஈடுபட்டு வருகிறார்.

கவாஸ்கரின் வர்ணனையாளர ஒப்பந்தம் வருகிற மே மாதத்துடன் முடிவடைகிறதோடு அவரது ஒப்பந்தத்தை நீட்டிக்க கிரிக்கெட் சபை விரும்பவில்லை என்றும் கூறப்படுகிறது.

கவாஸ்கருக்கு கொடுக்கப்படும் சம்பளப்பணம் மிகவும் அதிகமாக இருப்பதால்அவரை வர்ணனையாளர் பொறுப்பில் இருநது கிரிக்கெட் சபை நீக்கலாம் என்று தெரிகிறது.

அவருக்கு பதிலாக முன்னாள் வீரர் சஞ்சய் மஞ்சரேக்கர் நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

# அரசின் அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டம் தொடரும்

## புபுது ஜாகொட தெரிவிப்பு

அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டம் தொடரும் என முன்னிலை சோசலிச கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.

கொழும்பு மருதானையில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

சிறைச்சாலை திணைக்களத்தின் சாதாரண நடைமுறைக்கு புறம்பான வகையில் குமார் குணரட்னம் கேகாலையிலிருந்து அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இதற்கான காரணம் என்னவென்று தெளிவுபடுத்தப்படவில்லை.

குமார் குணரட்னம் கேகாலையிலிருந்து அநுராதபுரத்திற்கு மாற்றப்படுவதற்கு போதிய தெளிவான காரணங்கள் எதுவும் கிடையாது.

குமார் குணரட்னத்திற்கு எதிராக தெளிவாக அரசியல் பழிவாங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது அம்பலமாகியுள்ளது.

அரசியல் பழிவாங்கல்களை நிறுத்துவதாக அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்தது.

குமார் குணரட்னத்தின் கைதின் பின்னணியில் ஜே.வி.பி. செயற்பட்டுள்ளதா? என்பது தெரியாது. எனினும், அவ்வாறு பின்னணியில் ஜே.வி.பி. செயற்பட்டால் அது அரச சக்திகளுடன் இணைந்து மற்றுமொரு இடதுசாரி கட்சியை ஒடுக்குவதாகவே பொருள்படும்.

குமார் குணரட்னம் அரசாங்கத்திற்கு எதிராக செயற்படுவதனால் பிரஜாவுரிமை வழங்கவில்லை என்பதனை அரசாங்கம் ஒப்புக் கொள்ள வேண்டுமென அவர மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# இலங்கை கடற்படையின் 44 அதிகாரிகள் பயிற்சியை முடித்து வெளியேறும் நிகழ்வு



இலங்கை கடற்படையின் 44 அதிகாரிகள் பயிற்சியை முடித்து வெளியேறும் நிகழ்வு திருகோணமலை கடற்படை முகாமில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கடற்டையினரின் அணிவகுப்பு மரியாதையை பார்வையிடும்போது..........

# ஆசிரியை ஒருவரை தும்புத் தடியினால் தாக்கிய அதிபர் கைது

ஆசிரியை ஒருவரை தும்புத் தடியினால் தாக்கிய அதிபரை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

விடுமுறை கோரி அதிபரின் அலுவலகத்திற்கு சென்ற ஆசிரியையை அதிபர் தாக்கியுள்ளார்.

பாணந்துறை மஹானம வித்தியாலயத்தின் அதிபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.


இந்த ஆசிரியையின் பிள்ளையும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தமக்கு விடுமுறை வழங்குமாறு அதிபரிடம் கோரய போது, அதற்கு மறுப்பு தெரிவித்து தும்புத் தடியினால் அதிபர் தாக்கியதாக ஆசிரியை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-5)

# அரசியல்வாதிகளால் தான் மக்கள் பீதியடைகின்றனர்

## சாகல ரட்நாயக்க தெரிவிப்பு



அரசியல்வாதிகளால் தான் மக்கள் பீதியடைகின் றனர் என சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

குற்றவியல் தகவல்களை ஆய்வு செய்யும் மையமொ ன்று நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப த்தில் ஆரம்பிக்கப்பட்ட போது அவர் இதனைத் தெரிவித் தார்.

மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏதேனும் ஓர் சம்பவம் இடம்பெற்றால் அத ற்கு அரசியல்வாதிகள் பல் வேறு அர்த்தங்களை வழங் குகின்றனர். அரசியல்வா திகள் அரசியல் செய்வதற் காக நாட்டில் இடம்பெறும் சம்பவங்களை பயன்படுத்திக் கொளவ தனால் இலங் கையர்கள் பீதியடைகி ன்றனர். மேலும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளும் பீதிய டைகின்றனர். அரசியல் செய்ய வேண்டு மாயின் ஊருக்குச் சென்று உறுப்பின ர்களுடன் அரசியல்செய்ய முடியும்.

மாறாக நாட்டின் தேசியப் பாதுகாப்பு தொடர்பில்அரசியல் செய்வது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என அவர் மேலும் தெரிவ ித் துள்ளார். (இ-5)

2நாட்களில் கற்கைநெறிகளை பூர்த்தி செய்யலாம்

**Mobile Phone Repairing, CCTV / Computer Technician**
**AutoCad, Maya, 3D Max, Video Editing-Multimedia**
**Qualified Lectures From American Institute-AICT-Colombo**
**Microsoft and Ministry of Education Awarded Institute as Innovative Teaching**

பதிவுகளுக்கு முந்துங்கள். இன்னும் 5 அனுமதி மட்டுமே உள்ளது.
மேலதிக விபரங்களுக்கு, கல்வியங்காட்டு சந்தியில்
Web: www.mcai.edu.lk Phone : 775520940
(சி-4223)

## மலிவு விற்பனை

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க புது வருடத்தை முன்னிட்டு இம்மாதம் 1-15 வரை சகல பொருட்களையும் விசேட விலைக்கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.

வாடிக்கையாளர் நலன் கருதி 10.04.2016 ஞாயிற்றுக்கிழமையும் திறந்திருக்கும்)

**லைடன் புடைவை நிலையம்**
**410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 2381** (சி-4219)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
சித்த மருத்துவ அலகு
2014/2015 கல்வி ஆண்டுக்கான கற்றல் செயற்பாடுகள் ஆரம்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சித்த மருத்துவ பிரிவுக்கு 2014/15 கல்வியாண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட புகுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு எதிர்வரும் 02.05.2016 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கைதடியிலுள்ள சித்த மருத்துவப் பிரிவு பிரதான மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது. அனைத்து புகுமுக மாணவர்களும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர் (சி-4222) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# இராசி பலன்

06.04.2016
(பங்குனி 24, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு
சதுர்த்தசி முன்னிரவு 7.49 மணிவரை
பூரட்டாதி காலை 6.39 மணிவரை
சுபநேரம் 4.38-6.08 மணிவரை
இராகுகாலம் 12.08-1.38 மணிவரை
குழந்தைவேற் சுவாமி குருபூசை
போதாயன அமாவாசை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சூரி, சந் சுக் | புத | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பூரம் | | |
| | | | குரு ராகு |
| | சனி, செவ் | | |

**மீனம்:** குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் மாற்றங்கள் செய்ய முற்படுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**மேடம்:** புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், பயணத்தால் பலனுண்டு, எடுத்த காரியத்தை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், சயன சுகக் குறைவான நாள்.

**இடபம்:** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், வாகன சுகமுண்டு.

**மிதுனம்:** தொழில் வளர்ச்சி கூடும் நாள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், ஆரோக்கியமான நாள்.

**கும்பம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும்.

**கடகம்:** வேலைச் சுமை கூடினாலும் பலன் கிடைக்கும், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்:** தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் கைகூடும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களை முடிப்பதில் சில சிரமங்கள் ஏற்படலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம்.

**தனுசு:** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், வருமானம் திருப்திதரும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**விருச்சிகம்:** மகிழ்ச்சி கூடும் நாள், விருந்து விழாக்களில் முக்கிய பங்கு வகிப்பீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், பூர்வ புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:** நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், தலைமைப் பதவிகள் தேடி வரலாம், வியாபார விருத்தியுண்டு, சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** சுற்றத்தாரின் வரவால் சுகம் கூடும் நாள், காணாமற்போன பொருளொன்று மீண்டும் கைக்கு வந்து சேரலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

மாவை.கலட்டி பிராங்கினி அருள்மிகு ஸ்ரீ பராசக்தி அம்மன் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும். 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும். (இ-5)

• • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி வடக்கு (சரசாளி) அருள்மிகு ஸ்ரீ சித்திர வேலாயுதர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள்நடைபெறும். இதற் கமைய எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டைத் திருவிழாவும் 19 ஆம் திகதிசெவ்வாய்க்கிழமை சப்பரத்திருவிழாவும் 20ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் 21ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.(இ-5)

# சட்டப்படி வேலை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அரச தாதிய உத்தியோகத்தர்கள் அனைவரும் இன்று முதல் சட்டப்படி அதாவது 6 மணித்தியாலம் மட்டும் வேலை செய்யவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அத்தாதிய உத்தியோகத்தர் விடுத்த செய்திக் குறிப்பில்,

'எமது பிரச்சினைகள் தொடர்பாக பலமுறை கடிதங்கள் மூலம் மேலிடத்திற்கு பலமுறை அறியத்தந்தும் இதுவரை எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகள்எதனையும் எடுக் காமல் இருப்பதையிட்டு எமது மன வருத்தத்தை தெரிவிக்க விரும்புகிறோம்.

அத்துடன் எமது 47 தாதிய உத்தியோகத்தர்கள் ஒப்பமிட்டு கோரிய கோரிக்கைகளின் பெறுமதியை மிகச் சாதாரணமானதாகக் கருதி உதாசீனம் செய்ததையிட்டு எமது கடுமையான கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் 28.03.2016 அன்று எமது வைத்தியசாலையில் நடந்த வைத்தியசாலை முகாமைத்துவ கூட்டத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் தாதியர்களின் கடமை தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வாக அனைத்து விடுதிப் பொறுப்பு தாதிய உத்தியோகத்தர்கள், அனைத்து வைத்திய நிபுணர்கள், வைத்திய அத்தியட்சகர், தாதிய பரிபாலகி ஆகியோர் அடங்கலான கலந்துரையாடல் ஒன்றின் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்குமாறு பணிக்கப்பட்டது.

ஆயினும் இப்பணிப்பினை எவ்விதத்திலும் பொருட்படுத்தாது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அவர்களின் கருத்தினை புறக்கணித்து நீதிக்குப் புறம்பான நடைமுறைச்சிக்கல் நிறைந்த யதார்த்தத்துக்கு முரணான வகையில் தாதியப் பராமரிப்பினை பாதிக்கும் வகையில் தன்னிச்சையாக சிலமுடிவுகளை எடுத்து தனிநபர்களை பழிவாங்கும் நோக்குடன் செயற்பட்டு வருகிறீர்கள்.

தங்களின் இந்ததான்தோன்றித்தனமான செயற் பாடு களினால் தாதியமும் தாதிய உத்தியோகத்தர்களும் தினமும் மிகுந்த பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதுடன் மன உளைச்சலுக்கும் ஆளாகியுள்ளோம்.

தாதியத்தையும் தாதிய உத்தியோகத்தர்களையும் பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு எங்களுக்குள்ளதால் தங்களின் சர்வாதிகாரப் போக்குக்கு எதிர்ப்பு தெரிவித்து பொறுப்பற்ற தாதிய நிர்வாகம் வைத்திய நிர்வாகத்துக்கு எதிராக அரச தாதிய உத்தியோகத்தர் சங்கத்தின் பருத்தித்துறைகிளையினராகிய நாம் 06.04.2016 முதல் தொழிற்சங்க நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-60)

மோட்டார் சைக்கிளில் சென்றபோது

# நாய் குறுக்கே பாய்ந்ததில் குடும்பஸ்தர் படுகாயம்

(உரும்பிராய்)

நாய் குறுக்கே பாய்ந்ததால் மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர், விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் நேற்று முற்பகல் 11 மணியளவில் கோப்பாயிலிருந்து பருத்தித்துறைக்கு செல்லும் வீதியில் இடம்பெற்றது. பிரஸ்தாப நபர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது திடீரென நாய் ஒன்று குறுக்கே பாய்ந்ததால் மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் சதாசிவம் தங்கராசா (வயது-47) என்ற குடும்பஸ்தரே காயமடைந்தவராவார்.

முகம் உட்பட உடம்பு முழுக்க படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் தீவிரசிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-30)

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

யாழ்ப்பாணம், வண்ணை-கலட்டி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு வருடப்பிறப்பு விசேட பூஜை ஆரம்பமாகி துர்முகி வருடப்பிறப்பு பூஜை, மாலை 6.36 மணிக்கு இடம்பெறவுள்ளது எனவும் ஆலய நிர்வாக சபை உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர். (இ)




# வீட்டுக்குள் நுழைந்து ரூ.10ஆயிரம் திருட்டு

வீட்டின் சமையலறை ஜன்னல் கம்பிகளை கழற்றி உள் நுழைந்த திருடர்கள் 10 ஆயிரம் ரூபாவை திருடிச் சென்றுள்ளதாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்திருட்டுச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1.30மணியளவில் சுன்னாகம் உடுவில் டச்சு றோட் பகுதியில் உள்ள பூபாலசிங்கம் என்பவருடைய வீட்டில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

வடமராட்சி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம் ஏற்பட்டுள்ள யா/அல்வாய் அம்பாள் வித்தியாலயம், யா/பொலிகண்டி இ.த.க.பாடசாலை ஆகியவற்றின் அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ்வரும் தகைமையுடைய அதிபர், ஆசிரியர்கள் குறித்த பாடசாலைகளுக்கான அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கமுடியும். விண்ணப்பதாரி பின்வரும் தகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இலங்கை அதிபர் சேவையில் தரம் 2-II உம் அதற்கு மேற்பட்ட தரமுடையவர்கள் அல்லது இலங்கை அதிபர் சேவையில் தரம் III அல்லது இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2-I இற்கு மேற்பட்ட தரமுடையவர்களாக இருத்தல் வேண்டும்,

இலங்கை அதிபர் சேவையிலுள்ள அதிபராக கடமையாற்றாதவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். இவர்களுக்கு பிரிவு 4 பொருத்தமாகாது,

வடமராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நிரந்தரமாக சேவையாற்றுபவர்களாக இருத்தல் வேண்டும்,

விண்ணப்பதாரி தற்போது கடமையாற்றும் பாடசாலையில் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் தொடர்ச்சியான சேவையினை ஆற்றியிருத்தல் வேண்டும்,

விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது மூன்று வருடங்களுக்கு கடமையாற்றக்கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும்,

இலங்கை அதிபர் சேவை தரம் 2-II உம் அதற்கு மேற்பட்டவர்களது விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் மாத்திரம் ஏனைய தரத்தைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்,

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 18.04.2016,

விண்ணப்பதாரிகள் நேர்முகத்தேர்விற்கு தோற்றுதல் வேண்டும். தேவையேற்படின் எழுத்துப்பரீட்சைக்கும் தோற்றுதல் வேண்டும்,

விண்ணப்பப்படிவங்களை வலயக்கல்வி அலுவலகத்தின் கல்வி நிர்வாகப் பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் அறிவித்துள்ளார்.(இ)

# மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

முதியோர்களுக்கான இலவச மருத்துவ முகாம் பருத்தித்துறை சாயி சேவா நிலையத்தில் நாளை 7ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணி தொடக்கம் முற்பகல் 11மணி வரை நடைபெறவுள்ளது.

இதில் 50 வயதிற்கு மேற்பட்ட ஆண்,பெண் இரு பாலாருக்கும் இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்கள் இனங்கண்டு மருத்துவ ஆலோசனைகள் வழுங்கப்படும். (இ-5)

# பெருந்திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்- அத்தியடி அருள்மிகு ஸ்ரீசிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோவில் பெருந்திருவிழா இன்று நண்பகல் 12மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (இ)

# வடமராட்சிக்கு தீயணைப்புப் பிரிவு அவசியம் தேவைப்படுகின்றது

(கரணவாய்)

வடமராட்சி பிரதேசத்தில் அடிக்கடி தீ விபத்து ஏற்படுவதைக் கருத்திற்கொண்டு அப்பிரதேசத்திற்கென தனியான தீயணைப்புப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை மக்கள் விடுத்துள்ளனர்.

வடமராட்சி பகுதியில் தீவிபத்து ஏற்படும் பொழுது 32 கி.மீ. தூரத்திற்கு அப்பாலுள்ள யாழ்.மாநகர சபையிலிருந்து தீயணைப்புப் பிரிவினர் செல்ல வேண்டிய நிலையுள்ளது. தீயணைப்புப் பிரிவினர் அங்கு செல்வதற்கிடையில் யாவும் முற்றுமுழுதாக எரிந்து சாம்பலாகி விடுகிறது.

மேலும் கடந்த காலங்களில் கரவெட்டிப் பகுதியில் வீடு ஒன்று முற்றுமுழுதாக எரிந்து சாம்பலாகியது. இதே போன்று மூன்று வருடங்களுக்கு முன்னர் நெல்லியடியில் மெத்தைகள்விற்பனைநிலையமும் சில தினங்களுக்கு முன்னர் உடுப்பிட்டிப் பகுதியில் கராஜ் ஒன்றும் பருத்தித்துறைப் பகுதியில் பட்டாசு கடையொன்றும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் எரிந்து சாம்பலாகி உள்ளன.

மேலும் மணற்காட்டுப் பகுதியில் மூன்று முறைக்கு மேல் சவுக்குக்காடு எரிந்து நாசமாகியது. யாழ்.மாநகர சபையின் தீயணைப்புப் படையினர் விரைந்து வந்தும் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது பெருங் கடின செயலாகிவிட்டது.

மேலும் வர்த்தகர்கள், பொது மக்கள், பொது அமைப்புகள் பலமுறை இது விடயம் சம்பந்தமாக எடுத்துக் கூறியும் எந்தவிதமான நடவடிக்கைகளையும் இது சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் மேற்கொள்ளவில்லை.

எனவே வடமராட்சி மக்கள் வடமாகாண முதலமைச்சரின் கவனத்திற்கு இவ்விடயத்தை கொண்டு வந்துள்ளதாகவும் அதற்கான முழு முயற்சியையும் கூடிய விரைவில் எடுப்பார் எனவும் அவர்கள் எதிர்பார்த்து நிற்கின்றனர்.(இ-60)



'தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கை நடவடிக்கை நேற்று முன்தினம் யாழ். மாவட்டச் செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இந் நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலக உத்தியோகத்தர்களால் செயலக வளாகத்தில் வீட்டுத் தோட்டப்பயிர்கள் நாட்டிவைக்கப்பட்டன. (படங்கள்: பொ.சோபிகா)

# முக்கிய தலைவர்களுக்கு ஹெலஉறுமய எச்சரிக்கை

(கொழுப்பு)

**முப்பது வருடகாலமாக இடம்பெற்ற கொடூர யுத்த த்தை எமது இராணுவம் வெற்றிகரமாக நிறைவுசெய் துள்ளது. அதனால் தோல்வியுற்ற தரப்புக்கள் கோபத்தில் இருக்கக்கூடும். எனவே எமது நாட்டின் முன்னாள் தலைவர்களும் தற்போதைய தலை வர்களும் மிக அவதானமாக செயற்பட வேண்டும். இல்லாவிடின் நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க நேரி டலாமென ஜாதிக ஹெல உறுமயவின் ஊடக பேச்சாளர் நிசாந்த வர்ணசிங்க எச்சரித் துள்ளார்.**



யாழ். சாவகச்சேரியில் வெடிபொருள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவி த்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டில் யுத்தம் நிறைவுற்று 5 வருடங்க ளுக்கு மேலாகின்ற நிலை யில் யுத்தத்தின் வடுக்கள் இன்றும் உள்ளமையினை சில நடைமுறைச் செயற்பாடு களின் ஊடாக உணர்ந்து கொள்ள முடிகின்றது.

இவை கடந்த முப்பது வருடங்கள் இடம்பெற்ற யுத் தத்தில் தோல்வியுற்ற தரப் பினரிடத்தில் அதிகளவாக இருக்கலாம். அது அவர்க ளின் கோபமாகவும் வெளிப் படும் சாத்தியங்கள் உள் ளன. அண்மையில் சாவகச் சேரியில் தற்கொலை அங்கி யும் வெடிபொருட்களும் மீட் கப்பட்ட சம்பவத்தின் பின் னணி இதுவாகவும் இருக்க லாம்.

இவ்வாறு கோபத்தில் உள்ள சில குழுக்கள் மீண்டும் தீவிரவாத சக்திகளாக உரு வெடுக்கும் சாத்தியம் உள் ளது. எனவேஎமதுநாட்டின்பாது காப்பு தரப்பினர் இது தொட ர்பில் மிகுந்த அவதானத்து டன் செயற்பட வேணடிய தரு ணம் உருவாகியுள்ளது.

அதற்கு மாறாக யுத்தம் இடம்பெற்று பல வருடங்கள் ஆகின்றமையினால் அதன் பிரதிபலன்களை எதிர்நோ க்க வேண்டிய சூழல் ஒருபோ தும் உருவரகாது என்ற எண் ணப்பாட்டில் அசமந்தமாக செயற்படுவதால் பாரிய விளை வுகளை எதிர்கொள்ள நேரி டலாம்.

எவ்வாறாயினும் யுத்த வெற்றிக்கு முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷவும் தமது பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளார். எனவே அவர் அவதானமாக இருக்க வேண்டியது காலத்தின் தேவை யாகும்.

அவர் மட்டுமல்லாது முன் னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரது ங்க, ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகி யோ ரும் தமது பாதுகாப்பில் அக்கறை செலுத்த வேண் டும்.

அதேபோல் நாட்டு-தலை வர்கள் என்ற வகையில் இவர்கள் நாட்டின் தேசிய பாதுகாப்பு குறித்தும் கவன மாக செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரி வித்தார். (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை<br>கி.பா:12உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:NDTEng/ அரசதொழில்<br>தொ.இ: B/5234 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம<br>கி.பா: 59செவ் 8 இல<br>உயரம்: 162cm<br>தகைமை/தொழில்:BSc/வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம<br>தொ.இ: G/4954 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 5செவ் 12 இல்<br>உயரம்: 6’<br>தகைமை/தொழில்:பட்டதாரி/தனியார தொழில்<br>பிரான்ஸ் PR<br>தொ.இ: B/5235 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 33சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5’7"தகைமை/தொழில்:ICT<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4972 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 48செவ் 1 இல்<br>உயரம்: 5’8"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/2585 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 46சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>தொ.இ: G/4976 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம<br>கி.பா: 43செவ் 12 இல்<br>உயரம்: 5’6"தகைமை/ தொழில்:BScலண்டன் PR<br>தொ.இ: B/561 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 21சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5’<br>தகைமை/தொழில்A/L/தனியார் தொழில<br>தொ.இ: G/4981 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## புலம்பெயர் புலிகளுக்கும் தற்கொலை அங்கி மீட்பு சம்பவத்துக்கும் தொடர்பு

### பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு தகவல்

(கொழும்பு)

யாழ். சாவகச்சேரி, மறவன் புலவு பகுதியில் மீட்கப்பட்ட தற்கொலை அங்கி மற்றும் வெடிபொருட்கள் மீட்கப்பட்ட சம்பவத்துடன் புலம்பெயர் நாடுகளில் வாழும் புலிகள் இயக்க முன்னாள் உறுப் பினர்களுக்கு தொடர்பிருக்க லாம் என பயங்கரவாத புல னாய்வுப் பிரிவுக்கு தகவல் கிடைத்துள்ளது.

குறித்த தற்கொலை அங்கி விவகாரத்துடன் தொடர்பு டைய சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரின் தொலைபேசி வலையமை ப்பு, வங்கிக் கணக்குகளை மையப்படுத்திய விசேட விசாரணைகளிலேயே இத்த கைய சந்தேகிக்கத்தக்க தக வல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸ் உள்ளகத் தகவ ல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி ஜேர்மனியில் உள்ள முன்னாள் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர், தற்போது கைதாகியுள்ள புலிகள் இயக்க உறுப்பின ரான எட்வர்ட் ஜூலியஸ் எனும் சந்தேக நபருக்கு கொடுத்த ஒப்பந்தம் ஒன்றுக்கு அமைவா கவே முல்லைத்தீவிலிருந்து தற்கொலை அங்கி மற்றும் கிளைமோர் குண்டுகள் உள ளிட்ட வெடிபொருட்கள் யாழ்ப் பாணப் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக சந்தே கிக்கப்படுகிறது.

அத்துடன் கைதாகியுள்ள சந்தேகநபரின் மனைவி பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலமொன்றில் குறிப் பிட்டுள்ள தகவல்களும் தற் போது பொலிஸாரினால் கவ னத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

அதன்படி ஒவ்வொரு நாளும் சந்தேக நபர் அவரது வீட்டு க்கு அருகில் உள்ள கோயி லில் சந்தித்ததாக கூறப்படும் நபர் ஒருவரைத் தேடி பயங் கரவாத புலனாய்வுப் பிரிவி னர் விசாரணைகளை ஆரம் பித்துள்ளனர்.

அத்துடன் சந்தேக நபர் புலம்பெயர் மற்றும் திருகோ ணமலை, மன்னார் பகுதிக ளில் வாழும் முன்னாள் போராளிகள் பலருடன் தொடர் பில் இருந்துள்ளமை தொடர்பி லும் அந்த தொடர்பின் பின் னணி குறித்தும் விசாரணை கள் தொடர்வதாக அறிய முடிகிறது.

எவ்வாறாயினும் எட்வர் ட்டின் வங்கிக்கணக்கு மற் றும் தொலைபேசி வலைய மைப்பு தொடர்பிலான விசா ரணைகள் பயங்கரவாத புல னாய்வுப் பிரிவின் பணிப் பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நாலக சில் வாவின் நேரடி கட்டுப்பாட்டில் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

இதனிடையே தற்போது விளக்கமறியலில் உள்ள முன்னாள் விடுதலைப் புலி கள் இயக்க உறுப்பினரும் பல் வேறு தற்கொலைத் தாக் குதல்களைத் திட்டமிட்டவ ரும் என சந்தேகிக்கப்படுபவ ருமான “ மொறில்”என்பவருக் கும் சாவகச்சேரி விவகாரத்து க்கும் இடையே தொடர்புகள் இருப்பதாக தகவல்கள் வெளிப்ப டுத்தப்பட்டுள்ளதாக தேசிய சிங்கள நாளேடு ஒனறு நேற்று முன்தினம் செய்தி வெளியி ட்டிருந்தது.

மொறிலும் அவரது குழு வுமே இதன் பின்னணியில் இருப்பதாகவும் கைதான சந்தேக நபருக்கு தடுப்புக் காவல் உத்தரவைப் பெற்றுக் கொள்ளும் போது கூட அர சின் பிரபல அமைச்சர் ஒரு வர் அதற்கு பாதகம் ஏற்படும் வகையில் நடந்து கொண் டதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் நேற்று முன்தினம் வரை சந்தேக நபர் எவ்வித முக்கிய தகவல்க ளையும் வாக்குமூலமாக பயங்கரவாத புலனாய்வுப் பிரி வுக்கு வழங்கவில்லை என வும் பொய்யான பல தகவல்க ளையே அவர் விசாரணை யாளர்களுக்கு வழங்கியுள்ள தாகவும் அறிய முடிகிறது.

அதன்படி சந்தேக நபரின் வாக்குமூலம் ஒன்றுக்கு அமைய பயங்கரவாத புல னாய்வாளர்கள் வில்பத்து காட்டில் 10 கிலோ மீற்றர் களுக்கும் அப்பால் ஆயுத தேடுதல் நடவடிக்கை ஒன்றை கடந்த 2 ஆம் திகதி முன்னெ டுத்துள்ளதாகவும் எனினும் அது சந்தேக நபரின் பொய் யான தகவல் என்பதை பின் னர் பொலிஸார் உறுதி செய்து கொண்டுள்ளதாகவும் அறிய முடிகிறது. இந் நிலையில் இந்த விவகாரம் தொடர் பிலான விசாரணைகள் தொடர்கின்றன. (இ-5)





2015 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் தெரிவான 35 மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று வவு.சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது ஒஸ்ரியா நிறுவனத்தின் உரிமையாளரினால் 2 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டதுடன் வர்த்தகர் ஒருவரினால் நான்கு மாணவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா பண உதவியும் வழங்கப்பட்டது. அனைத்து மாணவர்களுக்கும் பரிசில்களும் சான்றிதழும் இதன்போது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்:திருமுறிகண்டி செய்தியாளர்)

## இணக்க அரசியல் நடத்தும் தமிழ்த் தலைமைகள்

# கேப்பாபிலவு மக்களை சொந்தக்காணியில் குடியமர்த்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்

### ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி செயலாளர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, கேப்பாபிலவு மக்களை சொந்த இடங்களில் குடியமர்த்துவது தொடர்பில் தற்போதைய அரசுடன் இணக்க அரசியல் நடத்தி வரும் தமிழ்த் தலைமைகள் அரசுக்கு அழுத்தம் கொடுத்து, அம்மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முன்வர வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கேப்பாபிலவு பகுதியில் 520 ஏக்கர் காணி, அப்பகுதி மக்களின் குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்படாத நிலையில், சூரிபுரம், கேப்பாபிலவு மற்றும் பிலவு குடியிருப்பு கிராமங்களைச் சேர்ந்த 250இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மாதிரிக் கிராமங்களில் வாழ்ந்து வருகின்றன. இதனால் இம்மக்கள் தங்களது வாழ்வாதாரங்கள் இன்றி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தங்களை தங்களது சொந்த காணியில் குடியமர்த்துமாறு தொடர்ந்து கோரி வரும் இம்மக்கள், உண்ணாவிரதப் போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இம்மககளை அவர்களது சொந்த காணியில் குடியமர்த்தினால் இவர்களது வாழ்வாதார நிலைகளில் மாற்றங்களைக் காண முடியுமென்பது ஏற்றுக்கொளளத்தக்கதாகும்.

அந்தவகையில், தற்போதைய அரசு வலிகாமம் வடக்கு, சம்பூர் போன்ற பகுதிகளில் எமது மக்களின் காணிகளை படிப்படியாக விடுவித்து வரும் நிலையில், கேப்பாபிலவு மக்களின் காணி, நிலங்களை விடுவிக்க இந்த அரசாங்கத்தைக் கொண்டு வந்தவர்கள் எனத் தம்மைக் கூறிக்கொண்டு, இந்த அரசாங்கத்துடன் இணக்க அரசியல் நடத்தி வரும் தமிழ்த் தலைமைகள் உண்மையான அக்கறையுடன் நடவடிக்கைகளை முனனெடுக்க வேண்டும்என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(2-3-281)

## வவுனியா விவசாய திணைக்களத்தினால்

# 18 திட்டங்களுக்கு நிதியொதுக்கீடு!

## பதிவுகளை மேற்கொள்ள அறிவுறுத்து

மாகாணவிவசாயத்திணைக்களத்தின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தியின்கீழ் வவுனியாவிவசாயத்திணைக்களத்தினால் வவுனியா மாவட்டத்தில்2016 ஆம்ஆண்டுக்குரிய 18 அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இதற்கு வடக்கு மாகாண சபையினால் அபிவிருத்தித் திட்டங்களுக்கு 40.27 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர்தெயோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.





இதற்கமைய விவசாய அபிவிருத்தித் திட்டங்களாவன,

நெற் பயிர்ச்செய்கை, உவர் நிலங்களில் நெற் பயிர்ச்செய்கை, நெல் விதை உற்பத்தி,சேதன முறையில் சுதேச நெல் இனச் செய்கை,நெல் இன அறிமுகம், மறுவயற் பயிர்ச் செய்கை, வயல் நிலங்களில் பயிர் மாற்றீட்டுச் செய்கை, மறுவயற் பயிர் விதை உற்பத்தி, பழப் பயிர்ச் செய்கை,துளி நீர்ப்பாசனத்தின் கீழ் வாழைச்செய்கை, இடைப்போகத்தில் பாதுகாப்பு இல்லங்களின் கீழ் மரக்கறிச் செய்கை, வெட்டுப் பூக்கள் உற்பத்தித் திட்டம், நாற்று மேடையாளர்கள் ஊக்குவிப்புத் திட்டம், காளான் செய்கை, வெங்காயச் சேமிப்பு குடில்கள் வழங்கல், வீட்டுத்தோட்டங்களில் விவசாய வனத் திட்டம் ,பெறுமதிசேர் உணவு உற்பத்தித் திட்டம்,தேனீ வளர்ப்புத்திட்டம் ஆகியவகையாகும்.

அபிவிருத்தி திட்டங்களுக்குரிய உள்ளீடுகள் அனைத்தும் அரை மானியத்தில் வழங்கப்படவுள்ளது.பயன் பெற விரும்பும் பொருத்தமான விவசாயிகள் தங்கள் பகுதி விவசாய போதனாசிரியரை அல்லது பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளரை அணுகி தங்கள் பெயர் விபரங்களை பதிவு செய்து பயன்பெறுமாறு வவுனியா பிரதிமாகாணவிவசாயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (2-3)

# விசுவமடு படித்த வாலிபர் விவசாயிகள் கிராமம் உருவாக்கப்பட்டு 50 வருடங்கள்

## பொன்விழா நிகழ்வுகளுக்கு ஏற்பாடு



முல்லைத்தீவு விசுவமடு கிராமம் படித்த வாலிபர் விவசாயிகள் கிராமமாக உருவாக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டு விசேட கலந்துரையாடல் ஒன்று கடந்த 3ஆம் திகதி மாலை 4 மணிக்கு விசுவமடு மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் பொறியியளாலர் எஸ்.கெங்கேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள்,கமக்கார அமைப்புகள்,சனசமூக நிலையங்கள்,விளையாட்டுக் கழகங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள், கிராம பெரியவர்கள் ,சமூக ஆர்வலர்கள் என பல்வேறுபட்டவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். .

மிகச் சிறந்த விவசாய கிராமமான விசுவமடு கிராமம் உருவாக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகள் கடந்த போதும் அதன் வளப்பற்றாக்குறை என்பது இற்றைவரை தொடர்ந்து கொண்டு செல்வதே மிகப்பெரிய பிரச்சினையாகும்.அத்துடன் பல்வேறு குறைபாடுகள்,தேவைகள் காணப்படுவதை பலரும் சுட்டிக்காட்டினார். முக்கியமாக அரசினால் வழங்கப்பட்ட காணிகளுக்கான அனுமதி பத்திரம் இதுவரை பலருக்கும கிடைக்கவில்லை.

இவ்வாறான நிலையில் இவற்றை தீர்க்கும் வகையில் விசுவமடு கிராம பொன்விழா அமைய வேண்டும் என பலரும் தமது கருத்துக்களை தெரிவித்தனர். நிறைவாக 27 சமூக ஆர்வலர்கள் அடங்கிய விழா குழுவும் பொன்விழா மலர் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

எதிர்வரும் ஜுலை மாதமளவில் பொன்விழா நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளும் பொருட்டு ஏற்பாட்டாளர்கள் திட்டமிட்டு நடவடிக்கைகளை எடுக்க மீண்டும் விசேட சந்திப்புகள் இடம்பெறும் எனவும் தீர்மானிக்கப்பட்டு பொன்விழா கலந்துரையாடல் நிறைவு பெற்றது. (2-3-303)

# குளங்களின் நீரை சிக்கனமாக பயன்படுத்தி சிறுபோக நெற்செய்கையை செய்யுங்கள்

### கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் குளங்களின் நீரை சிக்கனமான முறையில் பயன்படுத்தி சிறுபோக நெற்செய்கையை சிறந்த முறையில் மேற்கொள்ள வேண்டுமென கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதாகரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி புதுமுறிப்பு குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கைக் கூட்டம், நேற்று முன்தினம்திங்கட்கிழமை நடைபெற்றபோது, அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

புதுமுறிப்புக் குளத்தில் கடந்த ஆண்டு பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டுள்ளோம். அதே போன்றுஇவ்வாண்டும்வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளவுள்ளோம். இக்குளம் 2 அடி உயர்த்தப்பட்ட பின்னர் கூடுதலான நிலப்பரப்பில் சிறுபோகம் செய்யக்கூடியதாக இருக்கும். இக்குளத்திலிருந்து நாள்தோறும் நீர் வெளியேறிக் கொண்டிருக்கின்றது.

இந்தக் குளத்தின் மூலம் சிவநகர், சோலைநகர், ஜெயந்திநகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு நீர் வழங்கவேண்டியுள்ளது. குளமானது அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள போதிலும், வாய்க்கால் வேலைகள்செய்ய வேணடியுள்ளன என்றார். (2-3)

# கெக்கரிச் செய்கையில் 1600பேர்; மே மாதம் பயிற்சியளிக்கத் திட்டம்

வட மாகாணத்தில் ஆயிரத்து 600பேர் கெக்கரிப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருவதாக புள்ளிவிபரங்கள் மூலம் தெரிய வருகிறது.மேற்படி பயிர்ச்செய்கை மூலம் குறிப்பிடத்தக்களவு அறுவடையைப் பெற்ற விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இவ்வாறு பயிற்சியளிப்பதன் மூலம் கெக்கரிப் பயிர் செய்கையினூடாக அதிகளவு வருமானத்தை ஈட்டுவதற்கு மேலும் உந்து சக்தியாக அமையும் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கெக்கரிப் பயிர்ச்செய்கையில் தமது முயற்சியையும் திறமையையும் காண்பிக்கின்ற விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு இந்த பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் மே மாதத்தில் இந்தப் பயிற்சிகளை வழங்குவதற்குத் திட்டமிட்டிருப்பதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.(3)

## 44 இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து, மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 44 பேரையும் எதிர்வரும் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா நேற்று முன்தினம் திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

குறித்த மீனவர்கள், மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட போது விசாரணைகளை மேற்கொண்ட நீதவான் விளக்கமறியலை நீடித்து உத்தரவிட்டார்.

அத்துடன், 6 சிறுவர் தொழிலாளர்களையும் எதிர்வரும் 12ஆம் திகதி வரை சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் அனுமதிக்குமாறும் நதவான் உத்தரவிட்டார்.(2-3)

# பொன்னகர் கிராமத்தில் அபிவிருத்திப் பணிகள் செய்ய வேண்டிய இடங்கள் பார்வையிடப்பட்டன

அனர்த்த முகாமைத்துவ மையத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி பொன்னகர் கிராமத்தில் அபிவிருத்தி செய்ய வேண்டிய இடங்களை பார்வையிடும் செயற்பாடு நேற்றுக் காலை கிராம சேவகர் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கிராம அபிவிருத்தி அலுவலர்கள், மாதர் சங்க உறுப்பினர்கள், கண்ணன் விளையாட்டு கழகத்தின் உறுப்பினர்கள், ஒக்ஸ்பாம் ஊழியர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர் ,கிராம மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.


இதன்போது கிராமங்களில் காணப்படும் வீதிகள், கழிவு வாய்க்கால்கள், உடைந்த பாலங்கள், முன்பள்ளிகள் மயானங்கள் என கிராமத்தில் பல இடங்கள் பார்வையிடப்பட்டு அவற்றினை அபிவிரு த்தி செய்வதற்கான வழிவகைகள் சம்பந்தமாக ஆராயப்பட்டது.


இதில் சில சட்டவிரோத செயற்பாடுகள் நடைபெறும் இடங்கள் இனங்காணப்பட்டு அதற்கான சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படவுள்ளமை குறிப்பித்தக்கது. (2-311)

### வவுனியா பூங்கா வீதியிலுள்ள

# நெற்களஞ்சியசாலையில் நெல் கொள்வனவு நேற்று தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

## நேரில் சென்று பார்வையிட்டார் மாவட்ட அரசாங்க அதிபர்





வவுனியா பூங்கா வீதியில் விசேட அதிரடிப் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் 23 வருடங்களாக இருந்த கடந்த 31 ஆம் திகதி விடுவிக்கப்பட்ட நிலையில் நெற்களஞ்சியசாலை நெல் கொள்வனவு நடவடிக்கைகள் நேற்று தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வவுனியாவில் விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும் நெல்லினை களஞ்சியப்படுத்த வசதிகள் அற்ற நிலை நீண்டகாலமாக காணப்பட்டது. இதனால் வவுனியா. பூங்காவீதியில் விசேட அதிரடிப்படையின் கட்டுப்பாட்டில் இருந்த நெற்களஞ்சியசாலையை விடுவிக்குமாறு கோரப்பட்டு கடந்த 31ஆம் திகதி அது விடுவிக்கப்பட்டது.

வவுனியா வேப்பங்குளம், ஓமந்தை, மடுகந்தை ஆகிய பகுதிகளில் உள்ள நெற்களஞ்சியசாலைகளில் இட வசதி முடிந்தமையால் தற்போது விடுவிக்கப்பட்ட களஞ்சியசாலையில் நெல் கொள்வனவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நெல் கொள்வனவு மற்றும் களஞ்சியசாலையின் தற்போதைய நிலை தொடர்பில் வவுனியா மாவட்ட அரச அதிபர் ரோஹணை புஸ்பகுமார பார்வையிட்டார்.

அதன் பின்னர் அவர் கருத்து கூறுகையில்,

இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட இப்பகுதியில் 3 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லினை களஞ்சியப்படுத்தக் கூடிய வசதிகள் உள்ளது. இங்குள்ள இரு களஞ்சிய சாலைகளும் சேதமடைந்த நிலையில் உள்ளன. தற்போது நெல் கொள்வனவு இடம்பெறுகின்ற போதும் இதனை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. களஞ்சியசாலை வசதிகள் போதாமையால் வவுனியாவின் நெடுங்கேணி பகுதி விவசாயிகளுக்கு அப்பகுதியில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் உதவியுடன் ஆறு களஞ்சியசாலைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அங்குள்ள விவசாயிகள் அதில் தமது நெல்லினை வழங்க முடியும். விவசாயிகளின் நெல்லினை உரிய முறையில் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (2-250)




## பனிச்ச மரத்தினை அண்மித்ததாக காணியின் எல்லை மாற்றியமைப்பு

### பொதுமக்கள் ஒன்றுதிரண்டு எதிர்ப்பு– இன்று விசேட கூட்டம்

முல்லைத்தீவு வற்றாப்பளை சந்தியில் நிற்கின்ற பனிச்ச மரத்திற்கு அப்பாலுள்ள வயற்காணியின் வேலி நேற்றுமுன்தினமிரவு அகற்றப்பட்டு குறித்த மரத்தின் எல்லைக்கருகில் போடப்பட்டதை அடுத்து அவ்விடத்திற்கு வருகை தந்த முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நிலைமைகளை பார்வையிட்டதுடன் இதற்கான ஆலோசனைக் கூட்டமொன்றை இன்று நடத்துவதாக கூறியுள்ளார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் உற்சவத்திற்கு முதல் திங்கட்கிழமை தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு இடம்பெறுவது வழமையாகும்.

தீர்த்தக்குடம் முள்ளியவளை காட்டார் விநாயகர் ஆலயத்தில் இருந்து சிலாவத்தை தீர்த்தக் கரைக்கு ஊர்வலமாக வருடாவருடம் எடுத்து வரப்படுகின்ற போது மாங்குளம் முல்லைத்தீவு வீதி 3 ஆம் கட்டை வற்றாப்பளைச் சந்தியில் நிற்கின்ற பனிச்சமரத்தின் கீழ் தீர்த்தக் குடம் இறக்கி வைக்கப்பட்டு பிரார்த்தனை நிகழ்வு இடம்பெற்று மீண்டும் தீர்த்தக்குடம் ஊர்வலமாக சிலாவத்தை தீர்த்தக் கரை கடலுக்கு செல்வது வழமையாகும்.

பனிச்ச மரத்திற்கு அருகாமையின் சகோதர இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு சொந்தமான வயற்காணியொன்று உள்ளது. தற்போது அவ் வயற்காணிக்குஎல்லையாக அமைக்கப்பட்டிருந்த நிரந்தர வேலி அகற்றப்பட்டு பனிச்ச மரத்திற்கு அண்மையாக நகர்த்தப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த காலங்களில் குறித்த பனிச்ச மரம் நிற்கின்ற இடத்தை பாதுகாக்கும் நோக்குடன் பாதுகாப்பு வேலியை அமைப்பதற்கு வற்றாப்பளை கண்ணகி அம் மன் ஆலய பரிபாலன சபையினர் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அனுமதியைப் பெற்றிருந்தனர்.

ஏற்கனவே கடந்தகால பிரச்சினை தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முள்ளியவளை பொலிஸாரினால் தொடரப்பட்ட வழக்கு கடந்த மாதம் 31 ஆம் திகதி அன்று தள்ளுபடி செய்யப்பட்டது.

இதனையடுத்து நேற்று முன்தினமிரவு பக்கோ இயந்திரத்தின் உதவியுடன் முன்னர் இருந்த வேலி அடையாளம், அதில் நின்ற மரங்கள் என்பன அழிக்கப்பட்டு அருகாமையில் இருந்த வாய்க்கால் மூடப்பட்டுள்ளது. இதையடுத்து அவ்விடத்திற்கு பொதுமக்கள்ஒன்று கூடினர்.

இது தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபருக்கு ஆலய பரிபாலன சபையினரால் தகவல் வழங்கப்பட்டது. அவ்விடத்திற்கு நேற்று முன்தினமிரவு 7.30 மணியளவில் அரச அதிபர் நேரில் வருகை தந்து குறித்த இடத்தை பார்வையிட்டார். இதன்பின்னர் இன்றைய தினம் இது தொடர்பில் ஆலோசனைக்கூட்டம் இடம் பெறும் என அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை பாதுகாப்பு வேலியைஅமைக்குமாறுஅவர் கூறியதன் பிரகாரம் நேற்றையதினம் இதற்கான வேலி அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வற்றாப் பளை கண்ணகிஅம்மன்ஆலயபூசகர் சிவதிரு குலசேகரம் கிருஷ்ண பவன் தெரிவித்தார். (2)

## ஹரிஸ்ணவியின் படுகொலை தொடர்பில் கைதான சந்தேக நபருக்கு விளக்கமறியல் நீடிப்பு

(குருமன்காடு)

வவுனியா உக்குளாங்குளம் பகுதியில் வன்புனர்வின் பின் படுகொலை செய்யப்பட்டதாக கூறப்படும் 14 வயது மாணவி ஹரிஸ்ணவியின் படுகொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவியின் கொலை தொடர்பில் கைதான அயல்வீட்டு குடும்பஸ்தர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வவுனியா மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்காக முற்படுத்தப்பட்டார். குறித்த வழக்கை விசாரித்த வவுனியா மாவட்ட நீதிபதி சந்தேக நபரின் விளக்கமறியலை ஏப்ரல் 18 வரை நீடித்து உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதேவேளை, ஒரு மாதம் கடந்த நிலையிலும் மாணவியின் மரணம் தொடர்பான டிஎன்ஏ, இரசாயன பகுப்பாய்வு அறிக்கை இன்னும் நீதிமன்றில் ஒப்படைக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (2-250)

## 571 மில்லியன் ரூபா செலவில் விளையாட்டு மைதானம்

(குருமன்காடு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 571 மில்லியன் ரூபாய் செலவில் பல்வேறு தொகுதிகளுடன் கூடிய விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


தேசிய விளையாட்டு அமைச்சினால் இலங்கையில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விளையாட்டு மைதான தொகுதிகள் 571 மில்லியன் ரூபா செலவில்உள்ளக விளையாட்டு மைதானம், நீச்சல் தடாகம், விளையாட்டரங்குடன் கூடிய விளையாட்டுத் தொகுதி என்பன அமைக்கப்பட்டு வருகின்றன.

2013 ஆம் ஆண்டு முல்லைத்தீவுக்கென இவ்விளையாட்டுத் தொகுதி அமைப்பதற்கு 15 ஏக்கர் காணி கோரப்பட்டு ஒட்டுசுட்டான் வனப் பகுதி தெரிவுசெய்யப்பட்டது. வனபரிபாலனத்திணைக்களத்தின் ஒப்புதலுக்காக கோரிக்கை விடப்பட்டு கடந்த 3 வருட காலமாக வனபரிபாலனத் திணைக்களத்தின் அனுமதி கிடைக்கப்பெறாமையினால்மாற்று வழிகளும்தெரிவு செய்யப்படாத நிலையில் இத்திட்டம் கைவிடப்படும் நிலையில் இருந்தது.

இந்நிலையினைக் கருத்தில் கொண்டு கடந்த ஒரு மாதப்பகுதியில் துரிதமாகச் செயற்பட்டு அரச அதிபர் பிரதம கணக்காளர் பிரதேச செயலாளர், மாவட்ட விளையாட்டுக்கிளை, பிரதேச காணிக்கிளை ஆகியன இணைந்து மேற்கொண்ட முயற்சி காரணமாக முல்லைத்தீவு நகருக்கண்டியதாக முல்லைத்தீவு, மாங்குளம் வீதிக்கு அண்மையில் 2 ஆவது மைல் கல்லுக்கருகாமையில் 14 ஏக்கர் காணி தெரிவு செய்யப்பட்டு தேசிய விளையாட்டுத் தொகுதி அமைப்பதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (2-250)

### மின்சாரத்தை பயன்படுத்துவது தொடர்பில்

## நுகர்வோருக்கு உள்ள கடமை, உரிமை தொடர்பில் நிர்வாக கிரா. உத்தியோகத்தர்களுக்கு செயலமர்வு



(குருமன்காடு)

மின்சாரத்தை பயன்படுத்துவது தொடர்பில் நுகர்வோருக்கு உள்ள உரிமைகள், கடமைகள் தொடர்பில் வடக்கு மாகாண நிர்வாக கிராம உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு இடம்பெற்றது.

இலங்கை பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் நுகர்வோர் விவகாரப் பிரிவின் ஏற்பாட்டில் அதன் பணிப்பாளர் வை.எல்.பாறூக்கின் வழிநடத்தலின் கீழ் வவுனியா மாவட்ட செயலகத்தில் இச் செயலமர்வு நேற்று இடம்பெற்றது.

இதில் வடக்கு மாகாணத்தின் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பிரதேச செயலகங்களுக்குரிய 34 நிர்வாக கிராம உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

அவர்களுக்கு மின்சாரம் தொடர்பில் நுகர்வோரின் உரிமைகள், கடமைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்கள் ஊடாக கிராம அலுவலருக்கும், அவர்களின் ஊடாக கிராம மட்டத்திற்கும் கொண்டு சென்று மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இச் செயலமர்வு இடம்பெற்றது.(2-250)







கிளிநொச்சி நகர றோட்டறிக்கழகத்தின் ஏற்பாட்டில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் “பெண்களுக்கு எதிரான வன்முறை, சிறுமிகளுக்கு எதிரான வன்முறை, முதியவர்களைப் புறக்கணித்தல் அதீத மது, போதை, புகைத்தல் பயன்பாடு, பாலியல் வன்முறை” ஆகியவற்றுக்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் நேற்றுக்காலை 8 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் இருந்து ஊர்வலம் ஆரம்பமாகி ஏ-9 வீதியூடாக நகர்ந்து கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தை சென்றடைந்து அங்கு விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றபோது. (படங்கள்:-கிளிநொச்சி-1 செய்தியாளர்)

# 65 ஆயிரம் வீடுகளின் வடிவமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துமாறு பரிந்துரை

## அரசிடம் வடக்கு மாகாண ஆளுநர்

(கொழும்பு)

**வடக்கு,கிழக்கு மாகாணத்தில் நிர்மாணிக்க திட்டமிட்டுள்ள 65 ஆயிரம் வீடுகளின் வடிவமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துமாறு வட மாகாண் ஆளுநர் ரெஜினோல்ட் குரே அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார். இந்தியாவின் த ஹிந்து பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.**




மேலும் அவர் இது தொடர்பாக வழங்கிய நேர்காணலில் தெரிவிக்கையில்.

குறித்த வீட்டுத்திட்டத்தை நிறுத்த வேண்டாம் ஆனால் பல்வேறு மாற்றங்களுடன் அதனை முன்னெடுக்க வேண்டும் என அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

எவ்வாறான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்பது குறித்து கருத்துக்களை வெளியிடாத போதிலும், தற்போது முன்மொழியப்பட்டுள்ள சில வசதிகள் பயனாளிகளுக்கு தேவையற்றது என தான் கருதுவதாகவும் எழுத்துமூலம் அறிவித்துள்ளதாக கூறியுள்ளார்.

இந்த வீட்டுத்திட்டத்தின் படி சமையல் எரிவாயுசிலிண்டர், சமையல் அடுப்பு,கணனி, தொலைக்காட்சி என்பன பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை தடுத்து நிறுத்தினால் குறித்த வீட்டுத்திட்டபயனாளிகள் தாம் வசதியாக வாழ்வதை விரும்பாதவர்கள் இப்படி கூறுகிறார்கள் என சொல்வார்கள்.

குறித்த வீட்டுத்திட்டம் தொடர்பாக வடமாகாண சபையுடன் கலந்தாலோசிக்காமல் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளதாக வடமாகாண முதலமைச்சர் தெரிவித்துள்ளார் எனஆளுநரிடம் கேட்டபோது, குறித்த கருத்துக்கு இணக்கம் தெரிவித்த ஆளுநர் மக்களுடன் கூட கலந்து ஆலோசிக்கப்படாமல் தான் இந்ததிட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தின் படி வீடொன்றை நிர்மாணிப்பதற்கு 2.1 மில்லியன் ரூபா செலவிடப்படுவதாகவும் அந்த நிதியில் இரண்டுவீடுகளை அமைக்கும் நடவடிக்கை மக்கள் மத்தியில் நல்லதீர்வாக இருக்கும் என்றும் தற்போதைய திட்டத்தில் ஆகக்குறைந்தது 90 ஆயிரம் வீடுகளை அமைப்பது நன்மையாக இருக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு இதுவே மிகவும் சிறந்த பதில் நடவடிக்கையாக அமையும் எனவும் குறிப்பட்டுள்ளார்.

வடக்கில் கடல்நீர் ஏரி.பனை உற்பத்தி அதிகரித்து வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்றும் இளைஞர்கள் மத்தியில் தொழில்நுட்பக்கல்வியில் அதிக கவனம்செலுத்தவேண்டும். தொழில்நுட்பவேலைகளுக்கு இங்குவேலையாட்கள் குறைவாகவே காணப்படுகின்றனர் எனவே இங்கிருந்து உருவாகவேண்டும்.

வடமாகாணம் 30 வருடங்களாக இராணுவம், இந்திய இராணுவம்.புலிகள், ஆயுதக்குழுக்களின் ஆட்சியில் இருந்து வந்துள்ளது. அதனால் மாகாண நிர்வாக உத்தியோகத்தர்களுக்கும் சிவில் நிர்வாக உத்தியோகத்தர்களுடன் சமாதானமாக செயற்படுவதற்கான பயிற்சிகள் போதுமானதாக இல்லை. சமாதானமாக சமுதாயத்தில் அனைவரும் ஒற்றுமையாக வாழ அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டும் என மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

## பேரறிவாளன் வைத்தியசாலையில் அனுமதி!

வேலூர் சிறையில் இருக்கும் ராஜீவ்கொலை குற்றவாளியான பேரறிவாளன்.சிறுநீரகம், எலும்பு தேய்மான கோளாறு காரணமாக அடுக்கம்பாறை அரசு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ராஜீவ்காந்தி கொலை வழக்கில்,கைதுசெய்யப்பட்டு பல வருடங்களாக சிறையில்இருக்கும் பேரறிவாளன் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறையில் இருக்கும் பேரறிவாளன், உடல்நலக் குறைவு காரணமாக அவ்வப்போது அவதிப்பட்டு வருகிறார்.

இந்நிலையில் சிறுநீரகம் மற்றும் எலும்பு தேய்மான பிரச்சினை காரணமாக அடுக்கம்பாறை அரசு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மருத்துவர்கள் அவருக்கு தொடர்ந்து சிகிச்சை அளித்து வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வைத்தியசாலையில் பாதுகாப்பு பணிக்காக ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

பேரறிவாளன் சுகயீனமுற்றுள்ளமை அவர்களது விடுதலைக்காக ஏங்கும் மக்களுக்கு கவலையளித்துள்ளது. (இ-5)

## எம்பிலிப்பிட்டிய இளைஞன் மரணம்; பொலிஸ் ஆணைக்குழுவிடம் அறிக்கை

எம்பிலிப்பிட்டியவில் பொலிஸாருடன் ஏற்பட்ட மோதலில் கட்டடத்திலிருந்து கீழே வீழ்ந்து உயிரிழந்த இளைஞன் தொடர்பிலான விசாரணைக்குழுவின் அறிக்கை பொலிஸ் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

விசாரணைக்குழுவினால் அடையாளம் காணப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பில் குற்றப்பத்திரிகை தயாரிக்கப்பட்டு தம்மிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாச குரே தெரிவித்துள்ளார்.


இதனடிப்படையில் சம்பவத்தின் போது பொலிஸார் செயற்பட்ட விதம் குறித்து அந்த அறிக்கையில் ஆராயப்பட்டுள்ளது.

குறிப்பாக நிறுவன விதிக்கோவையின் பிரகாரம், பொலிஸார் ஒழுக்கம் மீறி செயற்பட்டார்களா என்பது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ்ஆணைக்குழுவின் செயலாளர் தெரிவித்தார்.

இந்த விசாரணை அறிக்கை தொடர்பில் நாளை வியாழக்கிழமை ஆணைக்குழு கூடி தீர்மானமொன்றை எடுக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதன்போது எடுக்கப்படும் தீர்மானத்தின் படி சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் விளக்கம்கோரப்படுவதுடன், அவர்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதற்காக ஒழுக்காற்று குழுவொன்றை நியமிக்கவுள்ளதாகவும் பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## சோபித தேரரின் மரணம் தொடர்பில் ஏன் விசாரணை நடத்தப்படவில்லை-நீதிமன்றம்



கோட்டே ஸ்ரீநாக விகாரையின் விகாராதிபதி மாதுளுவாவே சோபித தேரரின் மரணம் தொடர்பில் ஏன் விசாரணை நடத்தப்படவில்லை என நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

சோபித தேரரின் மரணம் குறித்து பிரேத பரிசோதனை நடத்தப்படாமைக்கான காரணத்தை விளக்கி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் அனில் ஜயசிங்கவிற்கு, கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலபிட்டிய நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு எலன் மெதினியாராமயவின் விகாராதிபதி உடுவே தம்மாலோக தேரரினால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளனர்.

இந்த அறிக்கையை பரிசீலனை செய்த நீதவான் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

சோபித தேரருக்கு சிகிச்சை அளித்த கொழும்பு தேசிய வைத்தியசாலை, சென்ட்ரல் வைத்தியசாலை, நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலை மற்றும் சிங்கப்பூர் மவுண்ட் எலிசபெத் வைத்தியசாலை ஆகியவற்றினால் அளிக்கப்பட்டுள்ள மருத்துவச் சான்றிதழ்கள், அளிக்கப்பட்ட சிகிச்சைகள் பற்றியும் கருத்திற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (இ-5)

## மந்திரவாதி கொடுத்த எலுமிச்சம்பழத்தை விழுங்கியதால் குடும்பப்பெண் உயிரிழப்பு

பூஜை பரிகாரத்தின் போது எலுமிச்சம்பழம் தொண்டையில் சிக்கியதில் பெண் ஒருவர் பலியாகியுள்ளார். அநுராதபுரம் பிரதேசத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனை குறித்த பெண்ணின் பிரேத பரிசோதனைகளை மேற்கொண்ட அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் சட்டவைத்திய அதிகாரியும் எஸ்.எம்.எச்.எம். என்.சேனநாயக்க உறுதிப்படுத்தியுள்ளார். மேலும் இந்தப் பெண்ணின் உடலில் இருபதுக்கு மேற்பட்ட எரிகாயங்களும், அடிகாயங்களும் காணப்பட்டதாக மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 36 வயதான குறித்த் பெண்ணுக்கு பேய் பிடித்துள்ளதாக கூறி மந்திரவாதியிடம் அழைத்துச் சென்ற வேளை குறித்த மந்திரவாதியினால் இந்தப்பெண்ணுக்கு எலுமிச்சம்பழம் ஒன்று விழுங்குவதற்கு வழங்கப்பட்டதாக உயிரிழந்த பெண்ணின் கணவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த மந்திரவாதியால் தனது மனைவியின் வாயில் எலுமிச்சம்பழம் வைத்து திணிக்கப்பட்டதாகவும் தேங்காயினால் அவரது தலையில் அடித்ததோடு, தீப்பந்தத்தால் மனைவியின் உடலில் சூடு வைத்ததாகவும் அவரது கணவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவத்தினை அடுத்து குறித்த மந்திரவாதியும், அவரது உதவியாளரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர். (இ-5)

## சட்டவிரோதமாக இலங்கைக்கு பணப்பரிமாற்றம்; விசாரணை செய்யும் பங்களாதேஷ் அதிகாரிகள்!

பங்களாதேஷின் மத்திய வங்கி ஊடாக இலங்கையின் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றுக்கு இணையத்தின் மூலம் சட்டவிரோதமாக பணம் பரிமாற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த பங்களாதேஷ் அதிகாரிகள் இலங்கை வருகை தரவுள்ளனர்.

குறித்த குழுவினர் இந்த வாரத்தில் இலங்கை வருவர் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.அத்துடன் பங்களாதேஷின் அதிகாரிகள் பிலிப்பைன்ஸ்க்கும் செல்வர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அதிகாரிகளில், பங்களாதேஷின் சர்வதேச பொலிஸ் பிரிவான இன்டர்போலின் உறுப்பினர்களும் சிறப்பு பொலிஸ் அதிகாரிகளும் அடங்கியுள்ளனர்.

பங்களாதேஷின் மத்திய வங்கிக்கு ஊடாக பில்லியன் ரூபாய்கள் சட்டவிரோதமாக பரிமாற்றப்பட்டதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(இ-5)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## மருதோன்றி

**Botanical Name-** Lawsonia inermis
**Family-** Lythraceae
**English-** Hennaplant
**Sinh-** Maritondi

நல்ல மணமுள்ள சிறிய மரமாகும். 6மீற்றர் உயரம் வரை வளரக்கூடியது. சில முட்கள் கொண்டது. இலைகள் தோல் போன்றவை. கோளவடிவானது. மலர்கள் பசுமஞ்சள் அல்லது வெண்மை நிறத்தினது. நறுமணம் கொண்டவை. நுனி மஞ்சரிகளாக அமைந்துள்ளன. கனிகள் அமுங்கிய கோண வடிவானவை. விதை பல எண்ணிக்கையிலானவை கோண வடிவின.


பொதுவாக தரிசுநிலங்களில் இதன் பரம்பல் அதிகம் காணப்படும். இந்தியாவில் தலைமுடிக்கு சாயப்பொருள் (Hennadye) எடுப்பதற்காக பெருமளவில் பயிரிடப்படுகிறது. கடற்கரையை அண்டிய பிரதேசத்திலும் கண்டல் சார்ந்த இடங்களிலும் இதன் பரம்பலை அதிகம் காணமுடியும். விதைகள் மூலமும் வேரின் கன்றுகள் மூலமும் இனவிருத்தி செய்யலாம்.

சங்ககாலத்திலே மருதாணி இலைகளை எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்து பெண்கள் கை, கால்விரல் நகங்களுக்கு பூசி அழகு கூட்டுவார்கள். இதனால் நகக்கணுக்களில் வரும் பங்கசு தொற்றும் தவிர்க்கப்படும். நகச்சுற்றும் வராது.

ஆறாத வாய்ப்புண், அம்மைப் புண் ஆகியவற்றிற்கு இதன் இலையை அரைத்து நீரில் கரைத்து வடித்து வாய்கொப்பளிக்கலாம். அல்லது அரைத்து அம்மைப்புண்களுக்கு பூசலாம். கட்டிகளுக்கும் அரைத்துப் பற்றிடலாம்.

மருதோன்றி செடியின் வேர்ப்பட்டையை நிழலில் உலர்த்தி சருகுபோல உலர்ந்ததும் அதை உரலில் போட்டு இடித்து தூளாக்கி சல்லடையில் போட்டு சலித்து ஒரு சுத்தமான சிறுகிண்ணத்தில் தூளைப்போட்டு கொஞ்சம் தேங்காய் எண்ணெயை சேர்த்து குழைத்து எந்தப்புண்ணாக இருந்தாலும் அதன் மேல் கோழி இறகைக் கொண்டு மருந்தைத் தடவி வந்தால் புண் சீக்கிரம் ஆறிவிடும். புண்ணை முதலில் கிருமி நீக்கி கொண்டு சுத்தம் செய்த பின்னரே பூச வேண்டும்.

பாதத்தில் எரிச்சல் உள்ளவர்கள் இதைப் போக்க மருதோன்றி இலைகளை தேவையானளவு எடுத்து அதைக் கல்லத்தில் இட்டு எலுமிச்சம் பழச்சாறுவிட்டுமைபோலஅரைத்துபடுக்கைக்கு போகுமுன் இருபாதங்களிலும் பூச வேண்டும். இரண்டு மணி நேரம் கழித்து வெந்நீர் விட்டு மருந்தைக் கழுவி விட்டு மறுயரைத்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் தொடர்ந்து செய்ய பாதஎரிச்சல் நீங்கும்.



முடிவளரவும் ,நரைமாறவும் , இரும்பு வாணலியில் தேங்காய் எண்ணெய் 500மில்லி விட்டு இதன் இலை 100கிராம் போட்டு பொரித்து எடுக்கவும். இலையின் சாறு எண்ணெயில் சேர்த்து சிவப்பாக மாறி விடும் நறுமணத்திற்காக 10 கிராம் சந்தனத்தூள் போட்டுக் காய்ச்சலாம். இந்த தைலத்தை நாளும் தலைக்கு தேய்க்க முடிவளரும் நரைமாறும்.

மருதோன்றி இலை,வெள் ளைக் கரிசாலை இலை, கறிவேப்பிலை இலை இவைகளை சம எடையாக சேகரித்து நன்கு நிழலில் உலர்த்தி இடித்து, பொடித்து, சல்லடையில் போட்டு சலித்துக் கொள்ளவும். தலை முடியை கறுப்பாக்க செயற்கையாக பயன்படுத்தும் சாயப்பொருளுக்கு பதிலாக (HairDye) இப் பொடியை வெந்நீரில் அல்லது தேயிலை சாயத்தில் ஊறவைத்து (1/2 மணி நேரம்) தலைக்கும் பூசி ஒருமணிநேரம் சென்ற பின்பு தலை முழுகி வர முடி நன்கு கறுப்பாகும்.

கால் ஆணிக்கு மஞ்சள், வசம்பு, மருதோன்றி அளவு வீதம் சேர்த்து மைபோல அரைத்து இரவு வேளை கால் ஆணி விழும்வரை காலாணி இருக்கும் இடத்து வைத்து வெற்றிலையை தணலில் வாட்டி அதன் மேல் கட்டி வைத்தால் கால்ஆணி விழும்.

இதன் இலைகளை அம்மியில் மைபோல அரைத்து இரவு படுக்கைக்கு முன் உள்ளங்கை, விரல் நகம், கால் நகம் போன்ற இடங்களில் கனமாக வைத்து மறுநாள் காலையில் எடுத்தால் இலை வைத்த இடம் இரத்தம் போல சிவந்து அழகாக இருக்கும்.

வேறு பெயர்கள்: மருதாணி, ஐவினை இலை, அயிவினை, மருதோணி

### பயன்பாடு

**1.முழங்காலுக்கு கீழே தோன்றும் புண்களை ஆற்ற**

மருதோன்றி வேர் பட்டையை காய வைத்து , 50g எடுத்து உர லில் நன்றாக இடித்து துணியில் சலித்து வாயகன்ற சீசாவில் போட்டு 200g தேங்காய் எண்ணெய்விட்டு 300g மிருதார சிங்கிதூள் சேர்த்து நன்றாக கலக்கி ஒருநாள் வெயிலில் வைத்து கோழி இறகினால் மருந்தை தொட்டு கரப்பான் புண்ணில் மேல் தடவ புண் ஆறும்.

**2.பாத எரிச்சலை நீக்க**

பித்தம் காரணமாக எரிச்சல் தோன்றும்.

மருதோன்றி இலையை எலுமிச்சம் சாறுவிட்டு மைபோல அரைத்து இரவு நேரத்தில் இரண்டு பாதங்களிலும் தடவி இரு மணிநேரத்தின் பின் வெந்நீர் விட்டு கழுவி கொள்ளுதல்.

இவ்வாறு 5 நாட்கள் செய்ய பாத எரிச்சல் நீங்கம்.

**3.தலைவலி குணமாகுதல்**

மருதோன்றி இலையை மை போல அரைத்து இருபக்க பொட்டுகளிலும் கனமாக பற்றுப்போட்டால் 5 நிமிடங்களில் தல்லவலி நின்று விடும். இது அனுபவ முறையாகும்.

**4.ஆறாத புண்களுக்கு**

எந்த வகை மருத்தினாலும் ஆறாத புண்களுக்கு மருதோன்றி இலை 2 கைபிடி எடுத்து 75g நல்லெண்ணெய் விட்டு அடுப்பில் வைத்து இலைகள் நன்றாக வதங்கியவுடன் சட்டியை இறக்குதல்.

பின்னர் இதனை ஆற வைத்து இலைகளை அரித்து எடுத்து காரம் இல்லாத அம்மியிலிட்டு மைபோல அரைத்து வாயகன்ற சீசாவில் வைத்துக்கொண்டு காலை, மாலை புண்களை சுத்தம் செய்து மிருதுவான துணியில் கனமாக தடவி புண்ணின் மேல் வைத்து கட்டி விடல்.

இவ்வாறு செய்ய 7 நாட்களில் புண் ஆறிவிடும்.

**5.அதே அளவில் அடிக்கடி வெளியேறும் சிறுநீரை கட்டுப்படுத்தல்**

சுத்தமான இலைகளை அம்மியிலிட்டு அரைத்து கொட்டைப் பாக்களவு எடுத்து ஒரு டம்ளர் அளவு பசுவின் பாலில் போட்டு கரைத்து காலை வேளையில் மட்டும் உள்ளுக்கு கொடுத்து விட வேண்டும்.

இவ்வாறு 3 நாட்கள் கொடுக்க சிறுநீர் கட்டுப்பட்டு இயற்கை அளவில் வெளியேறும்.

**6.தந்திமேகம்**

இது ஆண்களுக்கு ஏற்படக் கூடிய ஒரு வகை நோய்.

ஆண்களில் சிறுநீர் இறங்கிய பின்னர் ஒரு வித வெண்ணிற பசை வெளியேறும்.

இது உடல் வாசிக்கு தக்கபடி ஒரு துளியோ, இரண்டு துளியோ வெளியேறும்.

இதனால் தான் " தந்தி மேகம்" என்று பெயர்.

இவர்களுக்கு மருதோன்றி இலையை காரமில்லாத அம்மியில் வைத்து நைத்து கசக்கிப் பிழிந்து சாறு எடுத்து தேக்கரண்டி அளவு சாற்றை உள்ளுக்கு கொடுத்து, 5 நிமிடம் கழித்து ஒரு டம்ளர் அளவு காய்ச்சிய பசும்பாலை உள்ளுக்கு கொடுத்துவிடுதல்

7நாட்கள் இவ்வாறு கொடுக்க தந்திமேகம் குணமாகும். மருந்து உண்ணும் நாட்களில் அதிககாரம், புளிப்பு உண்ணக்கூடாது.

**7.கூந்தல் உதிர்வைத்தடுக்க**

மருதோன்றி இலை 300g எடுத்துவைத்துக் கொண்டு 250 g நல்லெண்ணெயை ஒரு களிம்பு ஏறாத பாத்திரத்தில் விட்டு அடுப்பில் வைத்து காயவிடல்.

எண்ணெய் நன்றாக காய்ந்தவுடன் ஒரு பிடி இலையை எடுத்து எண்ணெயில் போட்டால் அது வெடித்து அடங்கி இலை சிவக்கும்.

இதன்போது இலைகளை அரிகரண்டி கொண்டு அரித்து எடுத்து ஒருபாத்திரத்தில் போட்டு வைத்து கொள்ளுதல். மறுபடி இதேபோல ஒருபிடி இலையை போட்டு எடுக்க வேண்டும்.

இவ்வாறு எல்லா இலைகளையும் போட்டு எடுத்துக்கொள்ள வேண்டும். இலை கருகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

எல்லா இலைகளையும் போட்டு எடுத்தபின் எண்ணெயை இறக்கி ஆறவிடல்.

எண்ணெய் ஆறியபின் பச்சை நிறமாக இருக்கும். (இதுவே சரியான பதம்)

இவ் எண்ணெய்யதலை முழுக பயன்படுத்த வேண்டும். இதனை காலையில் தலைக்கு தடவி தலை சீவி வந்தால் 40 நாட்களில் கூந்தல் உதிர்வது நின்றுவிடும். கூந்தலும் அடர்த்தியாக நீண்டு வளரும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# புலி உறுப்பினரை பலவந்தமாக நாடு கடத்தியமைக்கு ஜப்பான் சட்டத்தரணிகள் கடும் கண்டனம் வெளியீடு

விடுதலைப்புலிகளின் உறுப்பினர் ஒருவர் அரசியல் அடைக்கலம் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவிருந்த நிலையில், அவரை நாடு கடத்தியமைக்கு எதிராக ஜப்பான் சட்டத்தரணிகள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் ஜப்பானின் சட்டத்தரணிகள் சங்க வலையமைப்பு அந்தநாட்டின் நீதியமைச்சரிடம் ஆட்சேபனை கடிதம் ஒன்றை கையளித்துள்ளது.

இந்த செயற்பாடு, ஜப்பானிய குடிவரவுத் திணைக்களத்தின் ஆளுமையற்ற செயற்பாடு என்றும் சட்டத்தரணிகள் வலையமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கையில் பல்வேறு தடவைகள் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டதாக கூறப்படும் குறித்த விடுதலைப்புலிகளின் உறுப்பினர் தொடர்பில் சர்வதேச அகதிகள் சட்டத்துக்கு இணங்க பல மனிதாபிமான நடவடிக்கைகளை எடுத்திருக்க முடியும்.

அத்துடன் ஒரு நாட்டில் குற்றச்சாட்டுக்குள் உள்ளாகியுள்ள ஒருவரையே சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் நாடு கடத்த முடியும்.

அத்துடன் குறித்த அகதி, சட்ட நடவடிக்கைகளுக்கு தயாராகிறாரா? என்பது தொடர்பில் குடிவரவுத்திணைக்களம் ஆராயவில்லை. அது தொடர்பில் சட்டத்தரணிகளுடனும் தொடர்பு கொள்ளவில்லை. இந்தநிலையில் அவர் நாடு கடத்தப்பட்டுள்ளார்.

40 வயதான குறித்த இலங் கையர் குறுகிய கால விசாவை பெற்றுக்கொண்டு 1999ஆம் ஆண்டு ஜப்பான் வந்துள்ளார். எனினும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் மீது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்ட நிலையில் அவர் நாடு திரும்புவதற்கு மறுத்து ஜப்பானிலேயே தங்கியுள்ளார். சட்டத்தரணிகளின் தகவல்படி குறித்த தமிழர் தமது 15 வயதில் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்ந்துள்ளார்.

ஆயுதங்களை இடத்துக்கு இடம் கொண்டு செல்வது மற்றும் காயப்பட்டவர்களுக்கு உதவுவது என்பதே அவரின் கடமைகளாக இருந்துள்ளன. இந்தநிலையில்1995 ஆம் ஆண்டு அவர் இயக்கத்தில் இருந்து விலகிய பின்னர் சுமார் 10 தடவைகள் படையினரால் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இதேவேளை தமக்கு ஜப்பானில் அரசியல் அடைக்கலம் கோர முடியும் என்று 2007ஆம் ஆண்டே அவருக்கு தெரியவந்தது.

எனினும் அவரின் விண்ணப்பம், அவர் விசா முடிவடைந்து நீண்ட நாள் நாட்டில் தங்கியிருந்தார் என்ற ஒரே காரணத்தின் காரணமாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் வசித்தபோது குறித்த தமிழர் தம்முடன் சயனைட் குப்பியையும் வைத்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)




# அமைச்சுப்பொறுப்புக்களை குறைத்தார் ஆன் சாங் சூகி

மியன்மார் புதிய அரசில் ஆங் சாங் சூகி தனது சில அமைச்சுப் பொறுப்புகளை குறைத்துக் கொண்டுள்ளார்.

இதில் அவர் கல்வி மற்றும் சக்திவலு அமைச்சுப் பொறுப்பில் இருந்து விலகி இருப்பதோடு வெளியுறவு மற்றும் ஜனாதிபதி அலுவலக அமைச்சுப் பதவிகளை தக்கவைத்துக் கொண்டுள்ளார்.

பாராளுமன்றம் அவருக்கு பிரதமர் பதவிக்கு ஒப்பான 'அரசின் ஆலோசகர்' பணியை வழங்க பரிந்துரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மியன்மாரில் கடந்த வாரம அரசமைத்த ஜனநாயகத்திற்கான தேசிய லீக் கட்சி தலைவியாக ஆங் சாங் சூகி உள்ளார்.

எனினும் அவரது இரு மகன்களும் வெளிநாட்டு குடியுரிமை பெற்றவர்கள் என்பதால் அவர் ஜனாதிபதி யாவது அந்நாட்டு அரசியலமைப்பில் தடுக்கப்பட்டது. எனினும் தான் பின்னணியில் இருந்து அரசை வழி நடத்துபவராக இருப்பேன் என்று உறுதி அளித்திருந்தார்.

மியன்மாரின் புதிய ஜனாதிபதியாக சூகியின் விசுவாசியான டின் கியவ் பதவியேற்றுள்ளார். நான்கு முக்கிய அமைச்சுகள் சூகி பொறுப்பேற்பது பெரும் சுமையாக அமையும் என்பதாலேயே சூகி தனது அமைச்சுப பதவிகளை குறைத்துக் கொண்டிருப்பதாக அவதானிகள தெரிவித்துள்ளனர். (இ-5)

# உலகத்தை உலுக்கிய பனாமா ஆவணங்கள்

## பிரிட்டன் பிரதமர் கமரூன் தீவிர விசாரணைக்கு உத்தரவு

**உலகத்தையே உலுக்கிய பனாமா ஆவணங்கள் கசிவால் சர்வதேச அளவில் பாரிய சர்ச்சை ஏற்பட்டுள்ள நிலையில் பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் பணச் சலவையில் ஈடுபட்டவர்கள் குறித்த விசாரணைகளை தீவிரமாக மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார்.**



நேற்று முன்தினம் பனாமாவின் சட்ட நிறுவகத்தின் 11 மில்லியன் இரகசிய ஆவணங்கள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதில் உலகில் 70இற்கும் மேற்பட்ட நாடுகளின் முன்னாள் மற்றும் தற்கால அரச தலைவர்கள் ,பிரபலங்கள் மற்றும் கோடீஸ்வரர்கள், சட்டவிரோதமாக தாங்கள் ஈட்டிய பணத்தின் விபரங்கள் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கசிந்த பனாமா ஆவணங்களில் எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் ,லிபியாவின் முன்னாள் தலைவர் மொவுமுர் கடாபி மற்றும் சிரியாவின் ஜனாதிபதி பசீர் அல் அசாட் உள்ளிட்டவர்களின் பெயர்களும் மேலும் இந்தியாவின் நடிகர்களான அமிதாப் பச்சன், ஐஸ்வர்யா ராய் போன்றவர்களின் பெயர்களும் இதில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்தியாவிலும் இது அரசியல் ரீதியான பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதோடு , இது குறித்த விசாரணைகளை நடத்துமாறு இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் உத்தரவிட்டுள்ளார். (இ-5)

# வெளிநாடுகளில் கறுப்புப்பணம் பதுக்கல்

# அமிதாப்பச்சன், ஐஸ்வர்யா ராய் உட்பட 500 இந்தியர்களின் பெயர்கள் அம்பலம்

## அதிர்ச்சித் தகவல் வெளியீடு


பிரபல நட்சத்திரங்களான அமிதாப்பச்சன், ஐஸ்வர்யா ராய், தொழிலதிபர் கவுதம் அதானியின் சகோதரர் வினோத் அதானி, டிஎல்எஃப் உரிமையாளர் கே.பி.சிங் உட்பட 500 இற்கும் மேற்பட்ட இந்தியர்கள் வரி ஏய்ப்பு செய்து பனாமா நாட்டில் கணக்கில் வராத பணத்தை பதுக்கி வைத்திருப்பதாக 'பனாமா பேப்பர்ஸ்' வெளியிட்ட தகவலில் தெரியவந்துள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் உறவினர்கள், உதவியாளர்கள், சவுதி அரேபிய மன்னர், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் உள்ளிட்ட உலக தலைவர்களும் தங்களது கணக்கில் வராத சொத்துக்களை பதுக்கி இருப்பதும் தெரிய வந்துள்ளது.

ஜேர்மனை சேர்ந்த நாளிதழ் ஒன்று இந்த தகவல்களை பெற்று புலனாய்வு இதழியலாளர்கள் சர்வதேச கூட்டியக்கம் மூலம் 'பனாமா பேப்பர்ஸ்' என்ற தலைப்பில் உலகம் முழுவதும் கசியவிட்டுள்ளது

அந்த தகவலில் இந்தியாவின் பாலிவூட் நட்சத்திரமான அமிதாப் பச்சன் வெளிநாட்டில் இயங்கும் 4 கப்பல் நிறுவனங்களுக்கு இயக்குநராக உள்ளார் என்றும் இந்த நிறுவனம் மூலம் அவர் பல கோடி ரூபாய் அளவுக்கு வர்த்தகம் செய்து வருவதும் தெரியவந்துள்ளது.

இதேபோல் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் இயக்குநராக பொறுப்பு வகித்த நடிகை ஐஸ்வர்யா ராய், தனது பெற்றோர் மற்றும் சகோதரருடன் இணைந்து அந்த தொழிலை நடத்தி வந்துள்ளார். பின்னர் பல்வேறு காரணங்களால் அந்நிறுவனத்தின் பங்குதாரராக தனது பெயரை ஐஸ்வர்யா ராய் மாற்றிக் கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.





**112 லட்சம் ஆவணங்கள்**

பனாமாவைச் சேர்ந்த மொசாக் ஃபொன்செக்கா என்ற சட்ட நிறுவனத்துக்கு 35இற்கும் மேற்பட்ட நாடுகளில் அலுவலகங்கள் உள்ளன. இந்த நிறுவனத்திடம் இருந்த பிரபலங்களின் சொத்து பட்டியல்கள் தான் தற்போது வெளியாகியுள்ளன.

இதுவரை மொத்தம் 112 இலட்சம் இரகசிய ஆவணங்கள சிக்கியிருப்பதாக கூறப்படுகிறது. இது குறித்து சர்வதேச புலனாய்வு இதழியலின் இயக்குநரான ஜெர்ராட் ரைலே கூறும்போது, "மொசாக் ஃபொன்செக்காவில் கடந்த 40 ஆண்டுகளாக தினசரி நிகழ்ந்து வந்த அலுவல் சம்பந்தமான ஆவணங்கள்தான் இவை" தெரிவித்தார்.

சீனாவில் ஊழலுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு தீவிர பிரசாரம் செய்து வரும் அந்நாட்டு ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் குடும்பத் தினருக்கும் பனாமா நிறுவனங்களுடன் தொடர்பு இருப்பது அம்பலமாகியுள்ளது.

உலகக் கோப்பை காற்பந்து போட்டிகளை நடத்தும் பிபாவின் முக்கிய பிரதிநிதிகளும், ஹாலிவூட் நடிகரான ஜாக்கிசானும் கணக்கில் வராத பணத்தை பனாமாவில் பதுக்கி வைத்துள்ளனர்.

**அம்பலமானது எப்படி?**

வோஷிங்டனை தலைமையிடமாகக் கொண்டு புலனாய்வு இதழியலாளர்கள் சர்வதேச கூட்டியக்கம் (International Consortium of Investigative Journalism) செயற்படுகிறது. உலகம் முழுவதும் உள்ள ஊடகங்கள் இதில் இடம்பெற்றுள்ளன. இந்தியாவிலும் 'தி இந்தியன் எக்ஸ்பிரஸ்' இந்த கூட்டியக்கத்தில் இடம்பெற்றுள்ளது. கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்பு இருந்து, 2015 இறுதி வரையுள்ள தகவல்களை புலனாய்வு இதழியல் மூலம் இந்த கூட்டியக்கம் திரட்டி 'பனாமா பேப்பர்ஸ்' என்ற தலைப்பில் அம்பலப்படுத்தியுள்ளது. வரும் மே மாத இறுதிக்குள் முழு இரகசிய ஆவணங்களையும் வெளியிட திட்டமிட்டுள்ளது.(இ-5)

# அ.தி.மு.கவில் கதவடைப்பு!

## வாசன் அவசர ஆலோசனை

கூட்டணிக் கதவை அ.தி.மு.க. அடைத்துள்ளதால் த.மா.காவினர் அதிர்ச்சி அடைந்துள்ளனர். அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து கட்சியின் முக்கிய தலைவர்களுடன் வாசன்ஆலோசனை நடத்தி வருகிறார்.

காங்கிரசிலிருந்து விலகி த.மா.காவைதொடங்கியவாசன், வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி. மு.கவுடன் கூட்டணி அமைக்க முயற்சிகள் மேற்கொண்டார்.

இதற்காக கட்சி தொடங்கிய கடந்த 15 மாதங்களில் அ.தி. மு.க. அரசை விமர்சிப்பதை தவிர்த்து வந்தார்.

இந்நிலையில், 234 தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியலை முதல் வரும், அ.தி. மு.க. பொதுச்செயலாளருமான ஜெயலலிதா நேற்று வெளியிட்டார். அதில் கூட்டணி கட்சிகளுக்கு 7 தொகுதிகள் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளன.

இதனால் அ.தி. மு.க. கூடடணியில் த.மா.காவுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. தி.மு்.கவிலும் கூட்டணி குறித்து முடிவு செய்யப்பட்டு விட்டது.

'தனித்துப் போட்டியிடும் அளவுக்கு த.மா.கா. பலம் வாயந்த கட்சியல்ல' என வாசன் ஏற்கனவே பலமுறை தெரிவித்துள்ளார்.

எனவே, அக்கட்சி தனித்துப் போட்டி யிடவும் வாய்ப்பில்லை.

தற்போதைய நிலையில் மக்கள் நலக் கூட்டணியில் இணைவதைத் தவிர வாசனுக்கு வேறு வழியில்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் நலக் கூட்டணி தலைவர்கள் வீடுதேடி வந்து அழைத்தபோது கண்டுகொள்ளாத வாசன், இப்போது அவர்களை தேடிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் த.மா.காவினர் அதிர்ச்சி அடைந்துள்ளனர். (இ-5)

## இரட்டைக் கோபுர தாக்குதலைவிட மோசமாகவிருக்கும்!

# அமெரிக்காவுக்கு மீண்டும் வடகொரியா எச்சரிக்கை

(பியாங்யாங்)

**இரட்டை கோபுர தாக்குதலில் பலியானவர்களை விட அதிகமானவர்களை கொல்லுவோம் என அமெரிக்காவுக்கு மீண்டும் வட கொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.**

எச்சரிக்கையையும் மீறி வட கொரியா தொடர்ந்து அவ்வப்போது அணு ஆயுத சோதனையை நடத்தி வருகிறது.

மேலும் அண்டை நாடான தென் கொரியாவுக்கும் தொடர்ந்து எச்சரிக்கை விடுத்து வருகிறது. இதன் காரணமாக கொரிய தீபகற்பத்தில் எப்போது வேண்டு மானாலும் போர் ஏற்படலாம் என உலக நாடுகள் பெரும் அச்சத்தில் உள்ளன.

இதற்கிடையே தென் கொரியாவுக்கு ஆதரவாகவும் தமக்கு எதிராகவும் செயற்பட்டு வரும் அமெரிக்கா மீது தாக்குதல் நடத்துவோம் என வட கொரியா எச்சரித்திருந்தது.

தற்போது அமெரிக்காவுக்கு எதிராக மீண்டும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அந்நாட்டின் அரசாங்க ஊடகமான DPRK வெளியிட்டுள்ள செய்தியில், 15 வருடங்களுக்கு முன்னர் 3 பேர் நடத்திய தாக்குதலில் 3 ஆயிரம் பேர் பலியாகினர்.

இது அமெரிக்காவுக்கு மறக்க முடியாத சம்பவமாக அமைந்தது. ஆனால் மேற்கொள்ளும் இறுதி யுத்தத்தின் வெளிப்பாடாக வரலாற்றில் இருந்தே அமெரிக்கா துடைத்தெடுக்கப்படும்.

இந்த தாக்குதல் தொடர்பாக கவலைப்படுவதற்குக் கூட அவர்களுக்கு நேரம் இல்லாமல் செய்து விடுவோம்.

அமெரிக்காவின் வெள்ளை மாளிகை மற்றும் பென்டகனை வடகொரியாவின் ஏவுகணை மற்றும் ஆயுதங்கள் தரை வழியாகவும், வான்வழியாகவும், கடல் வழியாகவும் குறி வைத்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகொரியாவில் தாக்குதல் நடத்தப்பட்டால் அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இராணுவம் தயார் நிலையில் உள்ளதாக அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் ஏவுகணை தாக்குதல் நடத்தப்படும் என்று அமெரிக்காவுக்கு வட கொரியா மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளது பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (இ-5)

## சிரியாவில் ஆளில்லா விமானத் தாக்குதல்; அல்கொய்தா தலைவர் அபு பிராஸ் மரணம்

சிரியாவில் ஆளில்லா விமான தாக்குதலில் அல் கொய்தா தீவிரவாத இயக்கத்தின் சிரிய பிரிவான நுஸ்ரா முன்னணியின் தலைவர்களில் ஒருவரான அபு பிராஸ் கொல்லப்பட்டான். அவனுடன் ஏராளமான கூட்டாளிகளும் உயிரிழந்தனர்.

சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். மற்றும் அல்கொய்தா தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்க இராணுவம் விமான தாக்குதல் நடத்தி வருகிறது. இதைப் போன்று ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்துக்கு எதிராக போராடும் கிளர்ச்சியாளர்களை குறிவைத்து ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது.

இவ்வாறு வடமேற்கு மாகாணமான இட்லிப்பில் அண்மையில் ஆளில்லா விமானத் தாக்குதல் நடந்தது. இதில் அல்கொய்தா தீவிரவாத இயக்கத்தின் சிரிய பிரிவான நுஸ்ரா முன்னணியின் தலைவர்களில் ஒருவரான அபு பிராஸ் கொல்லப்பட்டான். அவனுடன் ஏராளமான கூட்டாளிகளும் உயிரிழந்தனர்.

இந்த தகவலை அந்த இயக்கத்தின் ஆதரவாளர்கள் இணையதளத்தில் வெளியிட்டு உள்ளனர். இதை உறுதிப்படுத்தியுள்ள சிரிய மனித உரிமைகள் ஆணையம், அபு பிராஸ் ரஷ்யா அல்லது சிரியாவின் ஆளில்லா தாக்குதலில் உயிரிழந்திருக்கலாம் என தெரிவித்தது. ஆனால் அமெரிக்கா நடத்திய தாக்குதலில் தான் அபு பிராஸ் இறந்ததாக கிளர்ச்சியாளர்கள் தெரிவித்து உள்ளனர்.

சிரிய இராணுவத்தில் பணி புரிந்து வந்த அபு பிராஸ், பின்னர் அதிலிருந்து விலகி அல்கொய்தா இயக்கத்தில் சேர்ந்து, சன்னி பிரிவு தீவிரவாதிகளுக்கு பயிற்சி அளிக்கும் பொறுப்பை ஏற்றான். 1980-களில் ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் தாக்குதலில் ஈடுபட்டு வந்த இவன், அல்கொய்தா தலைவர் பின்லேடனுடனும் பணியாற்றியுள்ளான். பின்னர் சிரியாவில் நுஸ்ரா முன்னணியை நிறுவி, அதன் கொள்கைகளை வகுக்கும் சூரா குழுவில் மூத்த தலைவரான விளங்கி வந்தான் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## 202 அகதிகள் துருக்கிக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர்




உள்நாட்டுப் போரால் நிலை குலைந்துள்ள ஈராக், சிரியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாகச் செல்கின்றனர். பல்வேறு நாடுகளுக்கு கடல்கடந்து செல்லும் அகதிகள் ரப்பர் படகுகள் போன்றவற்றில் பாதுகாப்பற்ற முறையில் பயணம் செய்கின்றனர். மத்திய தரைக்கடல் வழியாக அகதிகளை அளவுக்கு அதிகமாக ஏற்றிச் செல்லும் படகுகள், நடுக் கடலில் கவிழ்ந்து விபத்துக் குள்ளாகி பலத்த உயிர்ச் சேதத்தை ஏற்படுத்தி வருவது தொடர் கதை யாகி வருகிறது.

இந்த பேராபத்தையும் மீறி மேற்கண்ட நாடுகளில் இருந்து அகதிகளாக வந்த இலட்சக்கணக்கான மக்கள் கிரீஸ் உள்ளிட்ட நாடுகளில் அகதிகளாக குடியேறியுள்ளனர். இத்தகைய அகதிகளின் பெருக்கத்தால் ஐரோப்பிய நாடுகளின் அமைதி, சட்டம்ஒழுங்கு, பொருளாதாரம் பாதிப்படைந்துள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் கவலை கொண்டுள்ளது. இந்த பின்ன டைவை சீர்படுத்த ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்த தலை வர்கள் அண்மையில் கூடி ஆலோசனை நடத்தினர்.

அதன் விளைவாக, சட்டவிரோதமாக ஐரோப்பிய நாடுகளில் குடியேறிய குற்றச்சாட்டின்கீழ் பிடிபட்டு தற்காலிக சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள அகதிகளை நாடுகடத்த தீர்மானிக்கப்பட்டது. இந்த முடிவின் படி, தங்கள் நாட்டுக்குள் சட்டவிரோதமாக குடியேறியவர்களை வெளியேற்ற கிரீஸ் அரசு முடிவுசெய்தது.

இதில் முதல்கட்டமாக நேற்று முன்தினம் 202 பேர் துருக்கிக்கு நாடு கடத்தப்பட்டனர். இந்த முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து அகதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், கிரீஸ் பாதுகாப்பு படையினருக்கும், அகதிகளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

இந்த எதிர்ப்பையும் மீறி தற்காலிக சிறையில் இருந்து பேருந்து மூலம் ஏற்றிச் செல்லப்பட்ட அகதிகள், சியோஸ் தீவு வழியாக துருக்கி நாட்டிலுள்ள டிகிலி துறைமுகத்துக்கு வலுக்கட்டாயமாக அனுப்பி வைக்கப்பட்டனர். (இ-5)




## ஆர்மேனிய மற்றும் அசர்பைஜான் துருப்புகளிடையே பாரிய மோதல்




சர்ச்சைக்குரிய காகசஸ் பகுதியான நகோர்னோ கரபாக் பிராந்தியத்தில் அசர்பைஜான் மற்றும் ஆர்மேனிய துருப்புகளுக்கு இடையில் பாரிய மோதல் வெடித்துள்ளது. இரு தரப்பு துருப்பினர்களும் கனரக ஆயுதங்கள், மோட்டார் குண்டுகள் மற்றும் பீரங்கிகள் கொண்டு மோதலில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை ஏற்பட்டிருந்த மோதலில் 30 படையினர் கொல்லப்பட்டிருப்பதோடு சிவிலியன்களும் பலியாகியுள்ளனர். கடந்த 1994 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு வந்தது தொடக்கம் நகோர்னோ கரபாக் பிராந்தியம் ஆர்மேனிய இன பிரிவினை வாதிகளின் கையில் உள்ளது.

முன்னரங்கில் தொடர்ந்து பதற்ற சூழல் நீடிப்பதாக அசர்பைஜான் பாதுகாப்பு அமைச்சு மற்றும் அங்கீகரிக்கப்படாத நகோர்னோ கரபாக் குடியரசு குறிப்பிட்டுள்ளன.

ஆர்மேனிய படையினர் முன்னரங்குகளில் இருக்கும் தமது ஆயுதப் படையினர் மீது ஷெல் தாக்குதல் நடத்தியதாக அசர்பைஜான் குறிப்பிட்டுள்ளது. எனினும் ஆர்மேனிய ஆதரவு கரபாக் அரசின் பாதுகாப்பு அமைச்சின் அறிவிப்பில், அசர்பைஜான் ரொக்கெட்டுகளை வீசியும், பீரங்கிகள் கொண்டும் தாக்குதல் நடத்தியதாக குற்றம்சாட்டியுள்ளது.

இரு தரப்புக்கும் ஆயுதம் விற்கும் ரஷ்யா உடன் மோதல் நிறுத்தம் ஒன்றை கடைப்பிடிக்குமாறும் அமைதி காக்குமாறும் இரு தரப்புக்குழ் அழுத்தம் கொடுத்துள்ளது.

இந்த மோதலை ஆரம்பித்தது குறித்து இரு தரப்பும் பரஸ்பரம் குற்றம்சாட்டி வருகின்றன.

இந்த மோதலில் 18 ஆர்மேனிய இன துருப்பினர் கொல்லப்பட்டதாக ஆர்மேனியா குறிப்பிட்டதோடு, அசர்பைஜானின் 12 படையினர் கொல்லப்பட்டதாக அந்த நாடு கூறியுள்ளது. கரபாக் பாதுகாப்பு அமைச்சின் அறிவிப்பில், 12 வயது சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டதாகவும் மேலும் இரு சிறுவர்கள் காயமடைந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிராமமொன்றின் தந்திரோபாய ரீதியில் முக்கியத்துவம் கொண்ட இரு குன்று பகுதியில் இருக்கும் தமது படையினர் மீது முதலாவதாக பெருமளவில் பீரங்கி குண்டுகள் மற்றும் ரொக்கெட் குண்டுகள் விழுந்ததாக அசர்பைஜான் குறிப்பிட்டுள்ளது. எனினும் டாங்கிகள், பீரங்கிகள் மற்றும் ஹெலிகொப்டர்கள் கொண்டு அசர்பைஜான் பாரிய தொரு தாக்கு தலை நடத்தியதாக ஆர்மேனிய அரசு குறிப்பிட்டுள்ளது.

1980களில் ஆரம்பமான இரு தரப்புக்கும் இடையிலான மோதல் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் முழுமையான யுத்தமாக உச்சம் பெற்றது. 1994 ஆம் ஆண்டு யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்படும் முன்னர் சுமார் 30 ஆயிரம் பேர் வரை கொல்லப் பட்டனர்.

குறித்த பிராந்தியம் அசர்பைஜானுக்குள் இருந்தபோதும், ஆர்மேனிய இனத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. இங்கு ஆர்மேனிய இராணுவ மற்றும் நிதி உதவியோடு தனி நிர்வாகம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றபோதும் அடிக்கடி மோதல்கள் இடம்பெறுகின்றன. பரந்த அளவிலான யுத்த நிறுத்த மீறல் குறித்து, ஐரோப்பிய பாதுகாப்பு மற்றும்ஒத்துழைப்பு அமைப்பு பெரும் கவலையை வெளியிட்டுள்ளது.

நிலைமையை சுமுகப்படுத்த ரஷ்ய வெளியுறவு மற்றும் பாதுகாப்பு அமைச்சர்கள் தமது அசர்பைஜான் மற்றும் ஆர்மேனிய சகாக்களுடன் தொடர்பை ஏற்படுத்தியுள்ளனர். பாரிய அளவிலான யுத்த நிறுத்த மீறல் குறித்து அமெரிக்கா கடுமையான கண்டனத்தை வெளியிடுகிறது என்று அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜோன் கெர்ரி தெரிவித்தார். ஐ.நா.மன்றமும் யுத்த மீறலில் கனரக ஆயுதங்களை பயன்படுத்தி இருப்பது குறித்து கவலை வெளியிட்டுள்ளது. (இ-5)

## பண்டிகைக் காலங்களில் சுற்றிவளைப்பு நடவடிக்கை

பண்டிகை காலங்களில் நுகரவோருக்கு ஏற்படக் கூடிய அசௌகரியங்களை தவிர்ப்பதற்காக நாடு முழுவதும் சுற்றி வளைபபை மேற கொள்வதற்கு நுகர்வோர் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பொதுமக்கள் உணவு மற்றும் குடிபானங்களை கொள்வனவு செய்யும் போது மிகவும் அவதானமாக இருக்கும்படி பொது சுகாதார பரிசோதாகர்கள் வேணடுகோள் விடுத்துள்ளனர்

அத்துடன் பண்டிகைக்காலத்தில் மக்களின் சுகாதாரத்துக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் பொருட்களை விற்பனை செய்யும வர்த்தகர்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் பிரகாரம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி வரை இந்த சுற்றி வளைப்பினை முன்னெடுக்கவுள்ளதாகவும், இந்த கால கட்டத்தில் மொத்த மற்றும் சில்லறை வர்த்தக நிலையங்களில் சோதனை நடவடிக்கைள் முன்னெடுக்கப்படும் எனவும் நுகர்வோர் சட்டத்தை மீறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும் அதிகாரசபை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அண்மையில் சூரிய வேவாவில் நடைபெற்ற சுற்றி வளைப்பன் போது ஆரோக்கியமற்ற உணவு வகைகளை விற்பனை செய்வதில் ஈடுபட்ட சில வர்த்தகர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 05.04.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.62 | 146.42 |
| பவுண்ட் | பிரிட்டன் | 202.90 | 210.14 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 161.69 | 168.15 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 147.96 | 154.14 |
| டொலர் | கனடா | 108.22 | 112.76 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 107.20 | 112.23 |
| டொலர் | சிங்கப்பூர் | 104.86 | 108.88 |
| ரூபா | இந்தியா | 2.1724 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6774 |
| குவைத் | டினார் | 476.9639 |
| ஓமான் | ரியால் | 373.7614 |
| கட்டார் | ரியால் | 39.5172 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3677 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1767 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார் மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 40 | 80 | 60 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 70 | 80 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 80 | 80-120 | 120 | 80 | 100 |
| தக்காளி | 60 | 80 | 25 | 40 | 80 | 40 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 35 | 40 | 80 | 40 | 50 |
| கோவா | 60 | 80 | 70 | 80 | 100 | 40 | 80 |
| கரட் | 110 | 80 | 80 | 80-200 | 120 | 80 | 100 |
| பூசணி | 30 | 30 | 15 | 40 | 40 | 50 | 40 |
| புடோல் | 60 | 30 | 30 | 50 | 80 | 40 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 35 | 50 | 40 | 40 | 70 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 70 | 80 | 100 | 50 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 70 | 80 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 80 | 100 | 120 | 120 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 50 | 80 | 100 | 80 | 70 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 50 | 80 | 120 | 100 | 70 |
| பயற்றங்காய் | 80 | 100 | 40 | 60-80 | 80 | 80 | 70 |
| லீக்ஸ் | 130 | 100 | 100 | 120 | 160 | 120 | 100 |
| பீற்றூட் | 50 | 100 | 50 | 80 | 120 | 70 | 80 |
| கறிமிளகாய் | 120 | 100 | 55 | 200 | 160 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 350 | 400 | 400 | 600 | 400 |
| போஞ்சி | 120 | 120 | 100 | 120 | 160 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 30 | — | 60 | 60 | 70 | — |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 40 | 20 | 30 | 40 |
| தேசிக்காய் | 210 | 180 | 200 | 200 | 300 | 200 | 220 |
| தேங்காய் (ஒன்று) | 5 | 30-50 | 30-40 | 50 | 30-40 | 40 | 40 |
| இராசவள்ளி | 140 | 200 | 110 | 140 | 120 | 160 | 150 |
| வெங்காயப்பூ | 260 | 200 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 50 | 40 | 25 | 40 | 80 | 30 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 30 | 30 | 25 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | — | 50 | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## இலங்கை சென்று பிரபாகரனைச் சந்தித்தார் வைகோ 148

இந்திய அமைதிப்படையினருக்கோ இலங்கைக் காடுகள் புதியவை. எனவே விடுதலைப்புலிகளின் தாக்குதலை எதிர்கொள்வதில் சிரமங்கள் இருந்தன. இதன் காரணமாக உயிர்ச் சேதங்கள் ஏற்படுவதைத் தடுக்க முடியவில்லை.

இலங்கையில் போர் நடந்து கொண்டிருந்தபோது இரகசியமாக இலங்கை சென்று பிரபாகரனை வைகோ சந்தித்துப் பேசினார்.

அப்போது தி.மு.கழகத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவராக வைகோ (வை. கோபல்சாமி) விளங்கினார். டில்லி மேல்சபை உறுப்பினராகவும் இருந்தார்.

அவர் விடுதலைப்புலி தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசுவதற்காக 5.2.1989 அன்று ரகசியமாக இலங்கை சென்றார். அதன் பிறகு அவர் என்ன ஆனார் எங்கு இருக்கிறார் என்பதே தெரியாமல் இருந்தது.

### கடிதம்

வைகோ பெப்ரவரி 5 ஆம் திகதியிட்டு எழுதிய கடிதம். 19 நாள் கழித்து 24 ஆம் திகதி தி.மு.கழகத் தலைவர் கருணாநிதிக்கு கிடைத்தது. பிரபாகரனைச் சந்திப்பதற்காக இலங்கை செல்வதாக கடிதத்தில் வைகோ எழுதியிருந்தார்.

சிங்கள இராணுவத்திடமோ இந்திய இராணுவத்திடமோ நான் பிடிபட நேர்ந்தால் நமது கழக அரசுக்கோ இயக்கத்துக்கோ கடுகளவு பிரச்சினை எதுவும் ஏற்படாவண்ணம் நான் செயற்படுவேன். என்னைப் பலியிட்டுக் கொள்ளவும் சித்தமாக இருப்பேன் என்றும் கடிதத்தில் அவர் குறிப்பிட்டு இருந்தார்.

### கருணாநிதி கவலை

வைகோ எங்கு இருக்கிறார் என்பது தெரியாததால் முதலமைச்சர் கருணாநிதி கவலையடைந்தார். அவர் பத்திரமாகத் திரும்பி வரவேண்டும் என்று தவித்துக் கொண்டு இருப்பதாக கருணாநிதி நிருபர்களிடம் தெரிவித்தார்.

### பத்திரமாக இருக்கிறார்

இந்நிலையில் வைகோ பத்திரமாக இருப்பதாக தகவல் கிடைத்தது. பிரபாகரனைச் சந்திக்க இலங்கையில் உள்ள வவுனியா பகுதிக்கு வைகோ சென்றதாகவும் இந்திய இராணுவத்தின் பாதுகாப்பில் பத்திரமாக இருப்பதாகவும் இலங்கையில் இருந்து சென்னைக்கு தகவல் கிடைத்தது.

### சென்னை திரும்பினார்

இதற்கிடையில் இலங்கையில் 24 நாட்கள் தங்கி இருந்த வைகோ 4.8.1989 அன்று இரவு பத்திரமாக சென்னை திரும்பினார். மறுநாள் அண்ணா அறிவாலயத்தில் அவர் நிருபர்களைச் சந்தித்தார்.

இலங்கைக்குச் சென்றது ஏன் என்பதை அப்போது அவர் விளக்கினார்.

அவர் கூறியதாவது,

தி.மு.கழக தலைவர் கலைஞரிடம் தெரிவிக்காமலும் அவரது அனுமதி பெறாமலும் ஈழத்துக்குப் பிரபாகரனைச் சந்திக்கச் சென்ற எனது நோக்கத்தில் தவறு இல்லை. என்றாலும் கழகத்தின் செயன்முறைக்கு ஏற்றதல்ல என்ற வகையில் அது தவறுதான்.

### மன்னித்தார்

இதற்காக தலைவர் கலைஞரைச் சந்தித்து மன்னிப்புக் கேட்டேன். அவர் என் பிழையைப் பொறுத்து மன்னித்து ஏற்றுக் கொண்டார். அவர் என்னிடம் ஏன் இப்படி ஆபத்துடன் விளையாடுகிறாய். ஆர்வம் வெறியாக மாறிவிடக் கூடாது. கட்சி கட்டுப்பாட்டை மறந்து விடக் கூடாது என்று கூறினார்.

இவ்வாறு வைகோ கூறினார்.

நிருபர்கள் கேட்ட கேள்விகளும் அவற்றுக்கு வைகோ அளித்த பதில்களும் வருமாறு,

### நோக்கம்

கேள்வி:- நீங்கள் இலங்கை சென்ற நோக்கம் என்ன?

பதில்:- சென்ற நோக்கம் பிரபாகரனைச் சந்திக்க வேண்டும் என்பதுதான்.

அதன்படி அவரைச் சந்தித்தேன். சில நாட்கள் அவருடன் இருந்தேன்.

கேள்வி:- எந்த இடத்தில் தங்கி இருந்தீர்கள்?

பதில்:- சில காரணங்களுக்காக பயண விபரங்களை முழுமையாக கூற விரும்பவில்லை.

### தாக்குதல்

கேள்வி:- இந்திய அமைதிப்படையின் பாதுகாப்பில் இருந்தீர்களா?

பதில்:- அமைதிப்படையின் பாதுகாவலில் இருக்கவில்லை. இரு முறை அமைதிப்படையினரின் தாக்குதலில் இருந்து விடுதலைப் புலிகள் என்னைக் காப்பாற்றினார்கள். கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு ஏறத்தாழ 1000 இராணுவ வீரர்கள் நான் தங்கியிருந்த பகுதியைச் சுற்றி வளைத்து முற்றுகையிட்டார்கள். என்னோடு இருந்த விடுதலைப்புலிகள் தீரத்தோடு போராடி என்னை மீட்டு வேறு ஒரு காட்டுக்குள் அழைத்துச் சென்றனர்.

இந்தத் தாக்குதலில் 24 வயதான விடுதலைப்புலி தளபதி லெப்டினன்ட் சரத் உயிரிழந்தார். சிவா என்பவர் படுகாயமடைந்தார். மேலும் 13 புலிகளுக்கு காயம் ஏற்பட்டது.




பிரபாகரனுடன் வைகோ

(தொடரும்)

# எதிர்க்கட்சிகளை அடக்க பிரதமர் முயற்சிக்கின்றார்!

## வாசுதேவ எம்.பி.குற்றச்சாட்டு



(கொழும்பு)

**எதிர்க்கட்சிகளை அடக்குமுறைக்கு உட்படுத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முயற்சிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார குற்றம் சாட்டியுள்ளார்.**

ஹறணை என்ஸ் வெரோமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கில் வெடிபொருட்கள் மீட்கப்படுகின்றன. தற்செயலாக கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் பொலிஸார் வெடிபொருட்களை மீட்கின்றனர்.

இது தொடர்பில் அரசாங்கத்திற்கு பொறுப்பு உண்டு. அரசாங்கம் தனது குறைகளை மூடி மறைக்க எதிர்க்கட்சிகள் மீது தாக்குதல் நடத்துகின்றது.

இந்த வெடிபொருட்கள் தொடர்பிலான உள்ளகத் தகவல்களை தெரிந்து கொண்டு அதனை மக்கள் முன் எடுத்துச் சென்றமைக்காக ஜீ.எல். பீரிஸ் குற்றவாளியாகின்றார்.

அனைத்து தகவல்களையும் வெளிப்படுத்தி மக்களின் நம்பிக்கையை அரசாங்கம் வென்றெடுக்க வேண்டும்.

விசாரணைகளின் ஊடாக அரசாங்கம் எதிர்க்கட்சிகளை அடக்குமுறைக்கு உட்படுத்தி வருகின்றது.

வெடி பொருட்கள் மீட்பின் ஊடாக புலிகள் மீள தலைதூக்குவார்களா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

அரசாங்கத்தின் மீதான மக்களின் எதிர்ப்பை அடக்குவதற்கு இந்த வெடிபொருள் மீப்பு பற்றிய விடயத்தை பயனபடுத்த முயற்சிக்கின்றது.

அரசாங்கத்தின் வருமானம் 9 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. செல்வந்தர்களுக்கு அரசாங்கம் வரி விதிக்கவில்லை என வாசுதேவ நாணயக்கார மேலும் குறறம்சாட்டியுள்ளார். (இ-5)

# கொழும்பு துறைமுகத்திற்கு புதிய கப்பல் சேவை அறிமுகம்

(கொழும்பு)

Colombo International Container Terminals என்றழைக்கப்படும் சர்வதேச கொள்கலன் முனையம் புதிய கப்பல் சேவையினை அறிமுகம் செய்யும் பொருட்டு தன்னுடைய சேவையினை விஸ்தரித்துள்ளது.

இச்செயலை நினைவுகூறும் முகமாக தாய்வானை பிரதான தளமாகக் கொண்டு இயங்குகின்ற Interasia lines கப்பல் நிறுவனம் தற்பொழுது கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன்கள் சேவை நடவடிக்கையினை ஆரம்பித்துள்ளது. இப்புதிய கப்பற்சேவையின்பொருட்டு கொழும்பு துறைமுகத்தின் அனைத்து கொள்கலன்கள் முனையங்களுக்கும்பல்வேறுப்பட்ட நன்மைகள் கிடைக்கும் என அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் காணப்படுகின்ற மிகவும் ஆழமான முனையம் CICT நிறுவனத்திற்கு சொந்தமானதாகும். இம்முனையத்தினை நோக்காகக் கொண்டு தங்களுடைய கப்பல்சேவையினை கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டு வருவதே Interasia lines கப்பல் நிறுவனத்தின் எதிர்பார்ப்பாகும். இக்கப்பல் நிறுவனமானது முதன் முறையாக கொழும்பை மையமாகக் கொண்டு தன்னுடைய சேவையினை ஆரம்பித்துள்ளது.

எதிர்வரும் காலத்தில் ஒவ்வொரு வாரமும் தம் நிறுவனத்திற்குச் சொந்தமான கப்பலை கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டு வருவதற்கு Interasia lines கப்பற் நிறுவனம் எதிர்பார்த்துள்ளது.

Interasia lines கப்பல் நிறுவனமானது தெற்காசியாவிலுள்ள முதன்மையான நிறுவனமாகும்.

கொழும்பு துறைமுகத்தை மையமாகக் கொண்டு தெற்காசியாவில் தன்னுடைய பொருட்களை கொண்டு செல்ல மற்றும் பகிர்ந்தளிப்பதே இந்த கப்பல் நிறுவனத்தின் அடுத்த இலக்காகும்.

முதற்கட்டமாக கொழும்பு துறைமுகத்திலிருந்து வங்காளதேசம் மற்றும் மியன்மார் வரையில் கப்பல் சேவையினை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இப்புதிய கப்பற் சேவையினை அறிமுகப்படுத்துவதன் மூலமாக சர்வதேச சந்தையினை கொழும்பு துறைமுகத்தை நோக்கி கவர்ந்துகொள்ளக் கூடியதாக உள்ளதாக CICT நிறுவனம் குறிப்பிடுகின்றது. மேலும் இவ்வாறான புதிய கப்பல் சேவைகளை அறிமுகப்படுத்துவதன் மூலமாக கப்பல் துறையின் முதன்மையாளராக திகழ்வதற்கும் சந்தர்பம் கிட்டுவதாக நிறுவனம் அறிவித்துள்ளது.

இப்புதிய கப்பல்சேவையின் முதலாவது கப்பல் கடந்த மார்ச் மாதம் 30ஆம் திகதி CICT முனையத்திற்கு வருகை தந்ததுடன் அதன் பொருட்டு விசேட வைபவம் ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. (இ-5)

# குவியல் குவியலாக சிரியாவில் சடலங்கள்

## இராணுவம் அதிர்ச்சித் தகவல்

ஈராக் -சிரியாவின் சில பகுதிகளை பற்றி உள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள் அதனை இஸ்லாமிய நாடாக அறிவித்து உள்ளனர். சிரியாவின் பெரும்பான்மையான பகுதிகள் அவர்கள் கைவசம் இருந்தது.

இந்நிலையில் புராதன நகரான பல்மைராவை மீட்க சிரியா இராணுவம், ரஷ்யாவின் உதவியை நாடியது. ரஷ்யப்படைகளின் இருமுனைத் தாக்குதல்களை சமாளிக்க முடியாமல் பல்மைராவிலிருந்து ஐ.எஸ்.தீவிரவாதிகள் பின்வாங்கினர்.

இதனையடுத்து, பல்மைரா நகரம் முழுமையாக சரிய இராணுவத்தின் கட்டுபாட்டின் கீழ் வந்தது. இந்த நிலையில் பல்மைரா நகரில் பிணக்குவியல் ஒன்றை சிரியா இராணுவம் கண்டு பிடித்துள்ளது. 45 நபர்கள் கொண்ட அந்த குவியலில் 23 பெண்கள் மற்றும் குழந்தைகள் உடல்கள் உள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

சில உடல்கள் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் காணப்படுவதாகவும், எஞ்சிய உடல்கள் கடுமையான சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. பெரும்பாலும் அந்த உடல்கள் அதிகாரிகள், இராணுவத்தினர், அரசு ஆதரவு போராளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினராக இருக்கலாம் என கூறப்படுகிறது.

கண்டெடுக்கப்பட்டுள்ள உடல்களை மீட்டு சிரியாவின் வடக்கு பகுதியில் உள்ள ஹாமஸ் நகரில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சிரியாவின் புராதன நகரான பல்மைராவை ஐ.எஸ். தீவிரவாதிகள் கடந்த ஆண்டு கைப்பற்றி அங்கிருந்த புராதனமான சின்னங்களையும், வரலாற்று சிறப்புமிக்க கோவில்களையும் தகர்த்தனர். தற்போது பல்மைரா சிரியா இராணுவத்தின் கடடுப்பாட்டின் கீழ் வந்துள்ளதை அடுத்து, சேதமடைந்த புராதனச் சின்னங்கள் மீண்டும் மறுசீரமைக்கப்படும் என சிரிய தொல்பொருள் அமைப்பு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

### கீரிஸில் இருந்து இலங்கையர்கள் நால்வர் துருக்கிக்கு நாடு கடத்தல்

சர்ச்சைக்குரிய குடியேறிகளை கட்டுப்படுத்தும் திட்டத்தின் கீழ் கீரிஸின் இரண்டு தீவுகளில் இருந்து, நான்கு இலங்கையர்கள் துருக்கிக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

திருப்பி அனுப்பப்பட்ட இலங்கையர்கள் உட்பட்ட 202 குடியேறிகளில் 11 நாட்டவர்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான், இந்தியா உட்பட்ட நாடுகளின் குடியேறிகளும் இதில் அடங்கியுள்ளனர்.சிரியாவின் உள்நாட்டு போரை அடுத்து பெருமளவானோர் துருக்கிக்கு சென்று அங்கிருந்து கீரிஸிக்குள் குடியேறிகளாக சென்றனர்.

இது குறித்து குடியேறிகள் ஐரோப்பாவுக்கு செல்வதற்கு இல்குவழியை ஏற்படுத்தி விடும் என்ற அச்சத்தில் நேர்மையற்ற அகதிகளை வெளியேற்றும் உடன்படிக்கையை கீரிஸும், துருக்கியும்அண்மையில்செய்து கொண்டன. இதனடிப்படையில் இலங்கையர்கள் நால்வர் திரு ப்பியனுப்பப்பட்டுள்ளனர். (இ-5)

## இன்று ஒரு தகவல்

# யார் கொடுப்பது?

ஹோட்டலுக்குப் பேகிறோம் சினிமாவுக்குப் போகிறோம் ஒரு பொருளை வாங்குகிறோம். பேருந்து ரிக்கட்டோ ரயில் ரிக்கட்டோ வாங்குகிறோம்.

இத்தகைய சூழ்நிலையில் நண்பர்களுடனோ உற வினர்களுடனோ அப்பொழுதுதான் அறிமுகமானவர் களுடனோ இருக்கும்போது மேற்கூறிய விடயங்க ளுக்கு யார் பணம் கொடுப்பது என்கிற கேள்வி எழா மல் போகாது.

பார்க்க சாதாரணமாகத் தோன்றினாலும் இதுவே பெரும் பிரச்சினையாக ஆகிவிடுவதுண்டு. குத்திக் காட்டிப் பேசும் படியும் பெரும்பகை வளரும் படியும் சூழ்நிலைகள் உருவாகி விடக் கூடும். பெரும் நெருப்புக்குச் சிறு தீப்பொறி போதுமே!

நம்முடைய -பிறருடைய பொருளாதாரத் தரங்கள், இடம், சூழ்நிலை அது யாருடைய முயற்சி என்பனவற்றை அடிப்படையாக வைத்தே யார் கொடுப்பது என்பதில் தெளிவான முடிவுக்கு வர வேண்டும்.

ஆண், பெண் இருவருக்குள் இந்தப் பிரச்சினை எழுந்தால் ஆண்கள் தாம் கொடுக்க வேண்டும்.

வசதியில் உயர்ந்திருந்தாலும் நம்மை விடச் சிறியவர்களைப் பொறுத்த வரையில் நமக்காகச் செலவழிக்கச் சொல்வது முறையாகாது. எனவே இந்தக் கேள்வி எழுந்தால் வயதில் முதியவர்களே கொடுக்க வேண்டும்.

அப்போது தான் அறிமுகமாகியவர்கள் என்றால் முடிந்தவரை அவர்களைக் கொடுக்க அனுமதிக்கக் கூடாது. அப்போதுதான் நம்மைப் பற்றிய உயர்வான எண்ணத்தை அவர்களிடத்தில் ஏற்படுத்த முடியும்.

அன்பாலும் பாசத்தினாலும் மற்றவர்களால் ஈர்க்கப்பட்டு அவர்கள் கொடுக்கவேகூடாது என நீங்கள் உறுதியாக விரும்பினால் இறுதிவரை விடாதீர்கள்.

அதைவிட்டு விட்டு பெயருக்கு நான் கொடுக்கிறேன் என்பது அரைகுறை மனத்துடன் இயங்குவது போலியாக பேர்ஸை வெளியே எடுப்பது போன்ற பாவ்லா வேலைகளை செய்வது சும்மா இருந்து விடுவதை விட தவறான நினைப்புக்களையே மற்றவர் மனத்தில் உண்டாக்கும்.

உண்மையாகவே அவர் கொடுக்கக் கூடாது என நீங்கள் விரும்பும் பட்சத்தில் அவரை நீங்கள் நன்கு அறிந்தவர் என்னும் நிலையில் கொடுத்துக் கொடுத்து ஓயட்டும் எனக் காத்திருங்கள். அவர் சலித்துப் போனதும் ஈடுகட்டும் படியாகக் கொடுங்கள்.

அதேபோல் நியாயம் அற்ற முறையில் மற்றவர்கள் நமக்காக செலவழித்து விட நேர்ந்தால் அந்த நேரத்தில் சும்மா இருந்து விட்டு அதற்கு இணையான ஒரு செலவை வேறுவகையில் அவர்களுக்கெனச் செய்து விடுங்கள். பொருளாகவும் வாங்கிக் கொடுக்கலாம்.

ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து வைத்துக் கொண்டிருக்கும் பட்சத்தில் ஒருமுறை நான்-மறுமுறை நீ என்று வாய் ஒப்பந்தம் செய்து கொள்ளுங்கள்.

ஒருவருக்காக செலவழிக்கின்றீர்கள் என்றால் அவருக்கும் திருப்பிச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறதா? அல்லது நன்றியுணர்வாவது அவரிடம் மிஞ்சி நிற்கிறதா? அல்லது தன்னால் செலவழிக்க இயலவில்லையே என்ற அடிப்படை உணர்வாவது அவரிடம் இருக்கிறதா? என்றெல்லாம் அறிவுபூர்வமாக உணர முற்படுங்கள். இந்த மூன்று கேள்விகளுக்கும் பதில் இல்லை என்பது தான் என்றால் அவர் உங்களை மொட்டை அடிக்க பார்கிறார் என்று பொருள். அவருடன் பேச்சோடு வைத்துக் கொள்ளுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக எப்போதும் இப்படிப்பட்ட செலவுகளில் மற்றவர்களை விட ஒருபடி உயர்ந்து நிற்க முற்படுங்கள். அப்படிச் செய்வீர்களானால் மற்றவர்களின் உள்ளத்தில் உங்களைப் பற்றிய எண்ண மும் உயர்ந்து நிற்கும்.

லேனா தமிழ்வாணன்




# செம அடி!

...நாள்பட்ட கழுத்து வீக்கமாக இருந்தாலும் சரி. எப்படிப்பட்ட கழுத்து வீக்கமாக இருந்தாலும் சரி. ஒரே நாளைக்குள் குணப்படுத்தி விடுவேன், என்று ஆரவாரமாகப் பேசினான்.

அந்த ஊர் மக்கள் அவன் பேச்சை உண்மை என்றே நம்பி விட்டனர். கழுத்தில் உருண்டையாகப் பெரிய வீக்கம் இருந்த கிழவன் ஒருவனை அவனிடம் அழைத்து வந்தனர்.

ஐயா! நீண்ட காலமாக இந்தக் கழுத்து வீக்கம் உள்ளது. யாராலும் இதைக் குணப்படுத்த முடியவில்லை. நீங்கள் தான் குணப்படுத்த வேண்டும். என்ன செலவானாலும் தருகிறோம் என்றார் ஊர்ப் பெரியவர் ஒருவர்.

கிழவரின் கழுத்து வீக்கத்தைக் கூர்ந்து கவனித்தான். ஒட்டகத்திற்குச் செய்ததைப் போல இவருக்கும் செய்தால் குணமாகி விடும். நல்ல தொகையை இவர்களிடமிருந்து வாங்கிக் கொள்ளலாம் என்று நினைத்தான்.

அந்தக் கிழவரைப் படுக்க வைத்தான். கழுத்தின் இரு முனைகளிலும் துணியால் இறுகக் கட்டினான். பெரிய பாறாங்கல் ஒன்றை எடுத்து வந்து வீக்கம் இருந்த கழுத்தின் மீது ஓங்கிப் போட்டான்.

கழுத்து முறித்து கிழவர் அங்கேயே துடிதுடித்து இறந்தார்.

கோபம் கொண்ட ஊர் மக்கள் அவனை நன்கு உதைத்து அனுப்பினர்.

“நல்ல முறையில்தானே மருத்துவம் பார்த்தேன். என் மருத்துவத்தில் எந்தத் தவறும் நடக்கவில்லையே... ஏன் அந்தக் கிழவன் இறந்ததுக்கு என்னை அடிக்கின்றனர். அவன் தலைவிதி சரி இல்லாததால் நான் துன்பப்பட வேண்டியிருக்கே” என்று சிந்தித்தவாறு நடந்தான்.

பக்கத்து ஊரை அடைந்த அவன், நான் தொண்டை மருத்துவன். எப்படிப்பட்ட தொண்டை வீக்கத்தையும் ஒரே நாளில் குணப்படுத்துவேன் என்று வழக்கம் போலப் பெருமை பேசினான்.

கழுத்தில் உருண்டையாக வீக்கம் கண்டிருந்த கிழவி ஒருத்தியை அவனிடம் அழைத்து வந்தனர் ஊர் மக்கள்.

நோயாளியைச் சோதித்த அவனுக்குப் பக்கத்து ஊரில் நடந்தது நினைவுக்கு வந்தது. இந்த ஊரிலும் அதே போல் அடி வாங்கினால் தன் உடம்பு தாங்காது என்று நினைத்தான்.

மருத்துவம் பார்ப்பதற்கு இரண்டு பொற்காசுகளும், ஒரு குதிரையும் நீங்கள் இப்போதே தந்தால் தான், நான் இவருக்கு மருத்துவம் பார்ப்பேன். இல்லையேல், பார்க்க மாட்டேன், என்றான் மகேந்திரன்.



பொற்காசுகள் தருகிறோம். குதிரை எதற்கு? என்று கேட்டார் ஒரு முதியவர்.

என்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள். தப்பித்துச் செல்வதற்குக் குதிரை இல்லாமல் மருத்துவம் பார்ப்பது இல்லை. பக்கத்து ஊரில் எனக்குக் கிடைத்த அனுபவமே போதும், என்றான் அவன்.

பக்கத்து ஊரில் என்ன நடந்தது? என்று கேட்டார் அவர். அவனும் தான் அடிபட்ட கதையை விளக்கமாகச் சொன்னான். அப்போதுதான் அவர்களுக்கு வந்திருப்பவன் மருத்துவன் அல்ல முட்டாள் என்ற உண்மை புரிந்தது. நல்ல வேளை! கிழவிபிழைத்தாள் என்றுசொல்லிக் கொண்டே எல்லாரும் அவனை அடித்து விரட்டினர். அங்காவது மருத்துவம் பார்த்ததற்காக அடித்தனர். இங்கு மருத்துவம் பார்ப்பதற்கு முன்னாலேயே அடிக்கிறார்களே. ஏன் அடிக்கிறார்கள் என்று தெரியவில்லையே, என்று புலம்பியபடியேசென்றான் முட்டாள். இதுக்குத்தான் முட்டாளாக இருக்கக் கூடாது என்பது.

(முற்றும்)




- கி.மு. 648 - ஆரம்பகால சூரிய கிரகணம் கிரேக்கர்களால் பதியப்பட்டது.
- 1782 - தாய்லாந்து மன்னன் டாக்சின் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டான். முதலாம் ராமா மன்னனாக முடி சூடினான்.
- 1814 - நெப்போலியன் பொனபார்ட் பதவியில் இருந்து அகற்றப்பட்டு எல்பா தீவுக்கு நாடு கடத்தப்பட்டான்.
- 1865 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ரிச்மண்ட் நகரில் ஏற்பட்ட தோல்வியின் பின்னர் கூட்டமைப்பின் இராணுவத்தினர் தமது கடைசிச் சமரை வடக்கு வேர்ஜினியாவில் நடத்தினர்.
- 1896 - 1,500 ஆண்டுகளாக ரோம் பேரரசர் முதலாம் தியோடோசியசினால் தடைசெய்யப்பட்டிருந்த ஒலிம்பிக் போட்டிகள் முதற்தடவையாக கிரேக்கத்தின் ஏதன்ஸ் நகரில் ஆரம்பமாகின.
- 1917 - முதலாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கா ஜேர்மனி மீது போரை அறிவித்தது.
- 1919 - மகாத்மா காந்தி பொது வேலை நிறுத்தத்தை அறிவித்தார்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: யூகொஸ்லாவியா மற்றும் கிரேக்கத்தை ஜேர்மனி முற்றுகையிட்டது.
- 1965 - “ஏளி பேட்” (Early Bird) என்ற தொடர்பாடற் செய்மதி விண்ணில் ஏவப்பட்டது.
- 1973 - பயனியர் 11 விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1994 - ருவாண்டா மற்றும் புருண்டி ஜனாதிபதி பயணம் செய்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து ருவாண்டாவில் இனப்படுகொலைகள் ஆரம்பமானது.
- 1998 - இந்தியாவைத் தாக்கக்கூடியதான நடுத்தர ஏவு கணைகளை பாகிஸ்தான் சோதித்தது.
- 2005 - குர்தியத் தலைவர் ஜலால் தலபானி ஈராக் ஜனாதிபதியானார்.

**பிறப்புகள்**

- 1815 - மீனாட்சி சுந்தரம்பிள்ளை, தமிழறிஞர் (இ. 1876
- 1901 - பியர் ஜார்ஜியோ ஃபிராசாதி, இத்தாலிய ஆர்வலர் (இ. 1925)
- 1928 - ஜேம்ஸ் டூயி வாட்சன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்
- 1963 - ராஃபாயெல் கொறேயா, ஈக்குடோர் நாட்டின் ஜனாதிபதி

**இறப்புகள்**

- 1199 - இங்கிலாந்தின் முதலாம் ரிச்சார்ட் (பி. 1157)
- 1520 - ராபியேல் சான்சியோ, இத்தாலிய ஓவியர் (பி. 1483)
- 1528 - ஆல்பிரெஃக்ட் டியுரே, ஜேர்மனிய ஓவியர் (பி. 1471)
- 1971 - இகோர் ஸ்ட்ராவின்ஸ்கி, உருசிய-அமெரிக்க இசையமைப்பாளர் (பி. 1882)
- 1992 - ஐசாக் அசிமோவ், உருசிய-அமெரிக்க எழுத்தாளர் (பி. 1920)
- **2011 - சுஜாதா, தமிழ்த் திரைப்பட நடிகை (பி. 1952)**

சுஜாதா

**தமிழ்த் திரைப்பட நடிகை**



சுஜாதா, 1952-ஆம் ஆண்டில், டிசம்பர் 10-ந் திகதி, இலங்கையில் பிறந்தார். அவருடைய சொந்த ஊர், கேரள மாநிலம் காலே. அங்குள்ள பள்ளியில் எஸ.எஸ்.எல்.சி. வரை படித்தார்.

1977-ம் ஆண்டில் சுஜாதா, ஜெயகர் என்பவரை காதல் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு சஜித் என்ற மகனும், திவ்யா என்ற மகளும் இருக்கிறார்கள். திவ்யா, டாக்டருக்கு படித்து இருக்கிறார்

ஹபோலீஸ் ஸ்டேஷன் என்ற மலையாள நாடகத்தில் முதன்முதலாக நடித்தார். 1971-ம் ஆண்டில் டைரக்டர் ஜோஸ் பிரகாஷ், ஹதபஷ்னி" என்ற மலையாள படத்தில், சுஜாதாவை அறிமுகம் செய்தார். 1972-ம் ஆண்டில், கே. பாலசந்தர் இயக்கத்தில் “அவள் ஒரு தொடர்கதை” படத்தில் அறிமுகமானார். அந்த படம் வெற்றிபெற்றதை தொடர்ந்து சுஜாதா தமிழ் பட உலகில் பிரபலமானார். தமிழ், தெலுங்கு ஆகிய 2 மொழிகளிலும் நூற்றுக்கும் மேற்பட்ட படங்களில் அவர் நடித்து இருக்கிறார்.

தெலுங்கு, தமிழ், மலையாளம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் 300-க்கும் மேற்பட்ட படங்களில் கதாநாயகி உள்ளிட்ட வேடங்களில் சுஜாதா நடித்துள்ளார்.

“வரலாறு படத்தில்” அஜீத்குமாரின் அம்மாவாக நடித்து இருந்தார். அதுதான் அவர் நடித்த கடைசி படம். அதன்பிறகு சுஜாதா நடிக்கவில்லை.


இருதய நோயால் அவருடைய உடல்நிலை மோசம் அடைந்தது. 6-4-2011 பிற்பகல் 2.30 மணிக்கு அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு சென்னையில் மரணம் அடைந்தார்.

# நான்கு விடயங்களைக் கொண்டு உள்ளக விசாரணைப் பொறிமுறை

## ஆஸியில் மங்கள தெரிவிப்பு

(கொழும்பு)

**நான்கு விடயங்களைக் கொண்டு உள்ளக விசாரணைப் பொறிமுறையை முன்னெடுப்போம். உண்மையை கண்டறிதல், பொறுப்புக்கூறல், நட்டஈடு வழங்குதல் மற்றும் மீண்டும் யுத்தமொன்று நிகழாதிருத்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு உள்ளகப் பொறிமுறை தயாரிக்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அவுஸ்திரேலியாவில் வைத்து தெரிவித்துள்ளார்.**



அதேவேளை, இந்த வடிவத்தை தயாரிக்கும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள அமைச்சர் மங்கள சமரவீர நேற்றுமுன்தினம் மெல்பேர்ன் நகரில் நடைபெற்ற வர்த்தக மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

இலங்கை அரசாங்கம் மூன்று விடயங்களை தற்போது முன்னெடுத்து கொண்டு செல்கின்றது. கடந்தகால சர்வாதிகார செயற்பாட்டுக்குள் சிக்கிக் கொண்ட ஜனநாயகத்தை மீட்டெடுத்திருக்கின்றோம்.

மேலும் கடந்த பத்து வருடங்களாக காணப்பட்ட பிரச்சினைகள் அனைத்தையும் தாண்டி இலங்கை தற்போது அரசியல் ஸ்திரத்தன்மையினை நிலைநாட்டி சர்வதேச விவகாரத்தில் சிறந்ததொரு இடத்தில் கால்பதித்திருக்கிறது.

அதிகாரங்களை பிரிக்கும் விடயத்தில் அரசாங்கம் சில முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. புதிய அரசாங்கம் பதவிக்கு வந்து ஒரு மாதத்திற்குள்ளேயே அரசியல் அமைப்பினை திருத்தி ஜனாதிபதி முறைமையின் அதிகாரங்களை குறைத்து சுயாதீன ஆணைக்குழுக்களை நியமித்தது. ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தியது. தகவல் அறியும் சட்டமூலமும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பினை உருவாக்கும் நோக்கில் பாராளுமன்றம் அரசியலமைப்பு பேரவையாக மாறறப்பட்டுள்ளது. அரசாங்கத்தின நல்லிணக்க செயற்பாட்டில் புதிய அரசியலமைப்பு முக்கிய பங்களிப்பை ஆற்றவுள்ளது.

நான் மூன்று விடயங்களினூடாக இலங்கையை கொண்டு செல்வதாக குறிப்பிட்டேன். முதலாவதாக புதிய அரசியலமைப்பினூடாக அதிகாரங்கள் மக்களுக்கு பகிரப்படுவதை உறுதிப்படுத்துவோம். இலங்கை உண்மையான முறையில் ஐக்கியப்படும் வகையில் மக்கள் தீர்மானம் எடுக்கும் நோக்கில் அதிகாரங்கள் பகிரப்படும்.

இரண்டாவதாக கடந்த கால செயற்பாடுகளை ஆராய்வதை குறிப்பிடலாம். அந்த வகையில் இலங்கை அரசாங்கம் இலங்கை தொடர்பில் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கியது.

அந்த வகையில் நான்கு விடயங்களை கொண்டு உளளக விசாரணை பொறிமுறையை முன்னெடுப்போம். உண்மையை கண்டறிதல் ,பொறுப்புக்கூறல் ,நட்டஈடு வழங்குதல் மற்றும் மீண்டும் யுத்தமொன்று நிகழாதிருத்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு உள்ளகப் பொறிமுறை தயாரிக்கப்படும். இந்த வடிவத்தை தயாரிக்கும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மூன்றாவதாக அரசியல் தேவைகளை அரசாங்கம் நிறைவேற்றி வருகின்றது. விசேடமாக வடக்கிலும் கிழக்கிலும் அரசாங்கம் சிவில் நிரவாகத்தை மீண்டும் கொண்டு வந்தது. அத்துடன் இதுவரை வடக்கு,கிழக்கில் 3400 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்த்தப்பட்டுள்ளது. வெளிவிவகாரக் கொள்கையை நாங்கள் மறுசரமைத்துள்ளோம். இந்தியாவுடன் எங்களுக்கு மிகச் சிறந்த உறவு காணப்படுகின்றது. அத்துடன் சீனா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், ஜப்பான் ஆகிய நாடுகளுடனும் உறவைப் பேணுகிறோம்.

வரலாற்றில் முதல் தடவையாக இலங்கையில் இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து தேசிய அரசாங்கத்தை அமைத்துள்ளன. இதனூடாக நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சினைகளை தீர்க்க முடியும் .

இதன் காரணமாகவே இந்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்டமும் பாராளுமன்றத்தை அரசியலமைப்பு பேரவையாக மாற்றும் பிரேரணையும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 684


**அச்சு 4**



ஆசிரியர்: பரீட்சையில ஒரு பக்கம் தான் எழுதியிருக்கிறாய்... கொஞ்சம் கூட வெட்கமா இல்லை உனக்கு?

மாணவன்: டீச்சர்..... சிங்கம் SINGLE SHEET லதான் எழுதும். பண்ணிங்க தான் பக்கம் பக்கமா எழுதும்.

**கதிர்**



பாவிங்களே

பொண்ணை மறந்திட்டீங்களேடா

**மேனன்**





**தர்மசீலன்**

நாய் வாய்ல சிக்கின தேங்காயும்...



காதல்ல விழுந்தவங்களும்
உருப்பட்டதா சரித்திரம் இல்ல

**ரமணன்**



**வின் யக்ஷன்**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சாவகச்சேரியில் வெடிபொருட்கள்



# யாருக்கு வைத்த குறி?

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிவுக்கு வந்து ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் சாவகச்சேரியில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட தற்கொலைக் குண்டு அங்கி மற்றும் கிளைமோர்கள், வெடிபொருட்கள் பரவலான கவனிப்பையும், பரபரப்பையும் ஏறபடுத்தியிருக்கின்றன.

விடுதலைப்புலிகளால் பயன்படுத்தப்பட்டு கைவிடப்பட்ட ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்படுவது இதுவரை வழக்கமாகவே இருந்து வந்துள்ளது. ஆனால் சாவகச்சேரி சம்பவம் அவற்றிலிருந்து வேறுபட்டதாகப் பார்க்கப்படுகிறது.

சாவகச்சேரி மறவன்புலவு பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து அண்மையில் ஒரு தற்கொலைக்குண்டு அங்கி, மூன்று கிளைமோர்கள், 12 கிலோ சி-4 வெடிமருந்து, 9மி.மீ. துப்பாக்கி ரவைகள், கிளைமோர்களை வெடிக்க வைப்பதற்கான பற்றரிகள்-2 மற்றும் சில தொலைபேசி சிம் அட்டைகள் என்பன கைப்பற்றப்பட்டன.

குறித்த வீட்டில் வசித்து வந்த எட்வேட் ஜூலியன் (32 வயது) என்பவரின் மனைவியே தனது கணவருடன் முரண்பட்டுக்கொண்டு அவர் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபடுவதாக பொலிஸாருக்குத் தகவல் கொடுத்திருந்தார்.

மன்னாரில் இருந்து சிறிய ட்ரக் வாகனத்தில் வரும் எட்வேட் ஜூலியனை கஞ்சாவுடன் கையும் களவுமாகப் பிடிப்பதற்கு காத்திருந்த பொலிஸார் அவர் வராததையடுத்து வீட்டுக்குள் புகுந்து தேடுதல் நடத்திய போது தான் அதிர்ச்சி காத்திருந்தது.

அங்கு அவர்கள் எதிர்பாராத வெடிபொருட்கள் சிக்கியிருந்தன. அதனை சந்தேக நபரின் மனைவியும் எதிர்பார்க்க வில்லை. உடனடியாகவே மயங்கி வீழ்ந்தார்.

இதையடுத்து உசார்ப்படுத்தப்பட்ட பொலிஸார் அடுத்த 12 மணி நேரத்திற்குள்ளாகவே வன்னேரிக்குளத்தில் அமைக்கப்பட்ட திடீர் சோதனைச்சாவடியில் வைத்து எட்வேட் ஜூலியனை கைது செய்தனர்.

முருங்கனைச் சேர்ந்த அவர் 13 வயதில் விடுதலைப்புலிகளுடன் இணைந்து நீண்ட காலம் புலிகள் அமைப்பில் உறுப்பினராக இருந்தவர். இறுதிப் போர்க்காலத்தில் வவுனியாவில் இருந்து பின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள சுழிபுரத்துக்கு குடிபெயர்ந்திருந்தார்.

அங்கிருந்து மீசாலைப் பகுதிக்குச் சென்று வசித்த அவர் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னரே மறவன்புலவு வீட்டில் குடியேறியதாகவும் கூறப்படுகிறது.

அவருடன் யாழ்ப்பாணத்தில் உள்ள நிறுவனமொன்றில் சாரதியாகப் பணியாற்றிய சிவதர்சன் என்பவரே அந்த வீட்டில் அவரைக் குடியமர்த்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிவதர்சனைக் கைது செய்யப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில் அவரது சகோதரர் ஒருவர் போர் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கை இராணுவத்தில் இணைந்திருப்பதையும் கண்டறிந்துள்ளனர்.

இதனால் அவரை நோக்கியும் விசாரணைகள் திரும்பும் என்று கூறப்படுகிறது.

அதேவேளை ஆயுதக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவருக்கும் எட்வேட் ஜூலியனுக்கும் இடையில் உள்ள தொடர்புகள் குறித்தும் விசாரிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

இந்த வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்ட விவகாரம் தொடர்பான விசாரணைகள் தீவிரமாக இடம்பெற்று வரும் நிலையில் இது அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

அண்மையில் காலை இந்தச் சம்பவம் பற்றிய தகவல்கள் கசியத் தொடங்கியதும் நாட்டில் தேசிய பாதுகாப்பு ஆபத்தில் இருப்பது போல மகிந்த அணியினர் புலம்பத் தொடங்கி விட்டனர்.

புலிகள் மீண்டெழுகிறார்களா? என்று டுவிட்டரில் கேள்வி எழுப்பிய நாமல் ராஜபக்ஷ நாட்டின் தேசிய பாதுகாப்பு மோசமடைவதற்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்கவேண்டும் என்று பதிவிட்டார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இந்தக் குண்டு வெள்ளவத்தைக்கு கொண்டுவரத் திட்டமிடப்பட்டதா என்று கேள்வி எழுப்பியதுடன் அது பற்றிய உண்மைகளை அரசாங்கம் வெளியிட வேண்டும் என்றார்.

விமல் வீரவன்சவோ பாதுகாப்பு நிலை மோசமடைந்து விட்டதாகவும் பாதுகாப்புச் செயலாளர் சரியாகச் செயற்படவில்லை என்றும் விசனம் வெளியிட்டார்.

வழக்கத்தில் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து என்று புலம்பும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ இந்த விடயத்தில் சற்றுப் பொறுப்புடன் கருத்தை வெளிப்படுத்தி இருப்பது மற்றொரு ஆச்சரியம்.

இதுபற்றி விரிவான விசாரணை நடத்த வேண்டும் என்றும் புனர்வாழ்வு அளிக்கப்படாத விடுதலைப் புலிகளால் ஆபத்து இருப்பதாகவும் அவர் எச்சரித்திருந்தார்.

ஆனால் என்னவோ தெரியவில்லை வழக்கமாக இத்தகைய சம்பவங்கள் வாய்த்தால் அரசாங்கத்தை விளாசித் தள்ளும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தப் பத்தியை எழுதும் வரை சாவகச்சேரி விவகாரம் குறித்து வாய் திறக்கவில்லை.

அரசாங்கத்தின் தற்போதைய பாதுகாப்புக் கொள்கையை முன்னைய ஆட்சியாளர்களும் அதன் ஆதரவாளர்களும் கடுமையாக விமர்சித்து வரும் சூழலில் இந்தச் சம்பவத்தை அவர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதை ஒன்றும் ஆச்சரியத்துடன் பார்க்க முடியவில்லை.

அதேவேளை சாவகச்சேரி வெடிபொருள் விவகாரத்தை அரசாங்கம் சாதாரணமாக எடுத்துக்கொள்ளவில்லை.

பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன கெட்டியாராச்சி இதனால் ஒன்றும் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டுவிடவில்லை என்றும் தனித்ததொரு சம்பவமே என்றும் கூறியிருக்கிறார்.

எனினும் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் அவர்களால் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டு வரும் பெருந்தொகையான ஆயுதங்களின் வரிசையில் ஒன்றாக சாவகச்சேரி சம்பவம் பார்க்கப்படவில்லை.

ஏனென்றால் புலிகளால் கைவிடப்பட்டு செல்லப்பட்ட ஒரு இடத்தில் இவை இருக்கவில்லை. வேறொரு இடத்திலிருந்தே கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

கிளைமோர்கள் மிகப் பழமையான காகிதத்தினால் சுற்றப்பட்டிருந்தாலும் தற்கொலை அங்கி 2008 ஜனவரி 29ஆம் திகதி சிங்கள் நாளிதழினால் சுற்றப்பட்டிருந்தது. அது போர் நடந்து கொண்டிருந்த காலப் பகுதியில் வெளியான நாளிதழின் பிரதி.

அந்தக் காலகட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சிங்கள நாளிதழ்கள் சென்றிருக்க வாய்ப்பில்லை. எனவே புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் இல்லாத பகுதியில் இருந்தே அவை கொண்டு வரப்பட்டிருக்கலாம்.

அதைவிட வெடிபொருட்கள் சுற்றப்பட்டிருந்த பொலித்தீன் பைகளில் திருகோணமலை மற்றும் கொழும்பு வர்த்தக நிலையங்களின் பெயர்கள் அச்சிடப்பட்டுள்ளதும் கவனிக்கத்தக்கது.

இந்த வெடிபொருட்கள் எந்த நோக்கத்துக்காக சாவகச்சேரிக்கு கொண்டு வரப்பட்டுள்ளன என்பது பற்றி தீவிரவாத விசாரணைப் பிரிவு விசாரணைகளை மேற்கொண்டிருக்கிறது.

யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதியை இலக்கு வைக்கவே இந்தக் குண்டுகள் கொண்டுவரப்பட்டதாக ஊட கங்கள் வெளியான நிலையில் அதுபற்றி பதிலளிக்க பாதுகாப்புச் செயலர் மறுத்திருக்கிறார்.

ஆனால் ஜனாதிபதியின் யாழ். பயணத்தின் போது அவரது உயிருக்கு ஆபத்து விளைவிக்கப்பட்டிருந்ததாக முன்னர் வெளியான தகவல்களை அடுத்து அவரது அண்மைய இரண்டு பயணங்களின் போது கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்தநிலையில் சாவகச்சேரி வெடிபொருள் விவகாரத்தை அடுத்து ஜனாதிபதிக்கான பாதுகாப்பு மேலும்இறுக்கமடையலாம்.

(20 பக்கம் பார்க்க....)

# 65 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டத்தில்

# ஒவ்வொரு வீட்டிலும் ஒரு மில்லியன் பகற்கொள்ளை

## நல்லாட்சி அரசாங்கம் தடுத்து நிறுத்துமா?



கட்டட நிர்மாணத்துறை நிபுணரான கலாநிதி உபசிறி டி சில்வா 65 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டம் தொடர்பாக த சண்டே ரைம்ஸ் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைக்கு எழுதியுள்ள கட்டுரையின் சாராம்சம்.

வடக்குக் கிழக்கில் இடம்பெயர்ந்துள்ள வறிய மக்களுக்கு 65 ஆயிரம் வீடுகளை கட்டிக் கொடுக்கப் போகிறோம் என்று கூறி நாட்டை சூறையாடும் நடவடிக்கை தொடர்பில் எனது பார்வையையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ள எண்ணுகிறேன். வெளிநாடுகளில் கட்டட நிர்மாணத் தொழிற்சாலைகளில் பணியாற்றியமை, சிங்கப்பூர் வீடமைப்பு அபிவிருத்திச் சபையில் பணிபுரிந்தமை, மேற்கு நாட்டின் பல்கலைக்கழகத்தில் நிர்மாணப் பணிகள் தொடர்பாக விரைவுரைகளை நடத்தியமை உட்பட சுமார் பல வருட அனுபவத்தை இந்தத்துறை யில் கொண்டுள்ளேன்.

மேலும் சுனாமி வீடமைப்புத் திட்டம் மற்றும் அரசாங்க பொறியியல் கூட்டுத் தாபனத்தின் வீட்டுத்திட்டம் என்பவற்றில் பிரதான செயற்றிட்ட அதிகாரியாக செயற்பட்டுள்ளேன்.

தேசிய கொள்முதல் நிறுவனத்தின் (National Procurement Agency-NPA) வழிகாட்டல்கள், அவற்றினால் ஏற்படுத்தப்பட்ட குழப்ப நிலைகள் பற்றி நன்கு அறிந்துள்ளேன். கடந்த அரசின் காலத்தில் NPA நிறுவனத்தின் குழப்பகரமான முன்மொழிவுகளை மீளாய்வுசெய்து அதன் செயற்றிட்ட வழிகாட்டல்களை மீள வரையுமாறு சிபார்சுசெய்திருந்தேன். ஆனால் அவ்வாறு செய்யப்படாமல் NPA மகிந்தராஜ பக்ஷவினால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

இந்நிலையில் 65 ஆயிரம் வீட்டுத்திட்டத்திற்கான கேள்வி கோரல் மற்றும் முன்தகுதி நிபந்தனைகள், ஏற்கனவே 2006 இல் நிராகரிக்கப்பட்ட குறைபாடுகள் நிறைந்த NPA செயற்றிட்டத்தைஅடிப்படையாகக்கொண்டு அமைந்துள்ளது என்று நம்புவதற்கு இட முண்டு.

அத்துடன் வடக்குக் கிழக்கின் காலநிலையை கருத்தில் கொள்ளாது சிறிய விறாந்தை கூட இல்லாது இந்த வீட்டுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

2006 இல் நிராகரிக்கப்பட்ட இத்திட்டத்தின் முன்மொழிவுகள் நடைமுறைச் சாத்தியமற்றவை.

உலக வங்கியின் நிபுணர்கள் இந்த NPA திட்டத்தைநிராகரித்திருந்துடன் அதன் செயற்றிட்ட வழிகாட்டல்கள் மீள வரைப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்திருந்தன. ஆனால் அவை செய்யப்பட்டிருக்கவில்லை. ஏற்கனவே வடிவமைக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் அதன் நிபந்தனைகளை இலங்கை ஒப்பந்தகாரர் எவரும்நிவர்த்தி செய்ய முடியாது. சட்டரீதியான ஒரு உடன்பாட் டிற்கு வராமல் எந்தவொரு ஒப்பந்தமும் நிலைத்திருக்க முடியாது.

ஒப்பந்தகாரர்கள் சட்ட ரீதியான தகுதியுடையவர்களாக இருப்பதுடன் அதற்கு சம்மதமும் கொடுக்க வேண்டும்.

இலங்கை சட்டங்களின் பிரகாரம் 65 ஆயிரம் வீடுகளை இரண்டு வெவ்வேறான மாகாணங்களில் கட்டுவதற்கு ஒரு ஒப்பந்தத்தை எந்தவொரு ஒப்பந்தச்சட்ட நிபுணர்களாலும் வரைய முடியுமா? குளங்கள், வீதிகள் இணைப்பு தொடர்பான திட்ட வேலைகள் இரண்டு மாகாணங்களுக்கிடையில் அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்களுக்கு இடையில் மேற் கொள்வதற்கு ஒப்பந்த சட்டங்களின் தேவைப்படுத்தல்கள் நிறைவு செய்யப்பட வேண்டும்.

ஆனால் தனிப்பட்ட வீடுகளை ஒரு பிரதேசத்தில் வேறுபட்ட இடங்களில் அமைப்பதற்கு ஒரு ஒப்பந்தம் போதுமான சட்டவலுவை கொண்டதாக அமையாதிருக்கலாம்.

மேலும்நிர்மாணத்துறைநிபுணர்களின் கருத்தின்படிவீடமைப்பிற்கான மூலப் பொருட்கள், போக்குவரத்து செலவுகள், கூலி என்பவற்றை இரண்டு மடங்காக அதிகரித்தாலும் மேற்படி வீட்டுத்திட்டத்திற்கான செலவு அதிகமா கவே மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் தளபாடங்களுக்கான செலவுகளை உள்ளடக்கினாலும் 21 இலட்சம் ரூபா (2.1 மில்லியன்) ஒவ்வொரு வீட்டுக்கும் செலவாகாமல் இருக்கலாம்.

இந்தச் செலவை மதிப்பிடுகின்ற பொழுது வீடுகளுக்கான மூலப் பொருட்களை கொழும்பிலிருந்து கொண்டு செல்ல ஒவ்வொரு வீட்டிற்கும் 50 ஆயிரம் ரூபா செலவாகுமென மதிப்பிட்டாலும் 11இலட்சத்திற்கு மேல் இது செல்லாது என்று பொதுமக்களுக்கு உறுதி கூறமுடியும். கட்டட நிர்மாணத்துறை ஊழலினால் நிறைந்துள்ளது.

ஆகவே வேறுபட்ட இரு மாகாணங்களுக்கிடையில் 65 ஆயிரம் வீடுகளை ஒரு ஒப்பந்தத்தின் கீழ் கொண்டு வருவது என்பது சட்டப்பிரகாரம் முடியாத காரியம்.

இராணுவத்தினருக்கான ரணவிரு சீட்டுத் திட்டத்திற்கு நாம் செய்தது போன்று அதிகாரிகள் இலங்கை வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டி வீதத்திற்கு கடனைப் பெற முடியும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நாட்டிலிருந்து ஊழலை ஒழிப்பதற்கு கிடைத்த அரிய சந்தர்ப்பமாகும்., நல்லாட்சி அரசாங்கம் இப்போதும் அதன் தடத்தில் செல்கின்றது என்பதை அமைக்கப்படவுள்ள ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒரு மில்லியன் ரூபாவை பகற்கொள்யடிப்பதை நிறுத்வதனூடாக நிரூபிக்கப்படமுடியும்.

*ஆர்வலர்கள் upasiri @ bigpond .com என்ற மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ள முடியும்.* (3)

# அனல் மின் உற்பத்தி 81 வீதம்

இலங்கையின் மின் உற்பத்தியில் 81.4 வீதமான மின் உற்பத்தி அனல்மின் உற்பத்தி மூலம் பெறப்படுகின்றது. மேற்படி மின் உற்பத்தி நாட்டிலுள்ள 7 நிலையங்கள் மூலம் இடம்பெற்று வருகின்றன.

இவற்றில் 41 வீதமானவை நிலக்கரிமூலமும் 40.4 வீதமானவை டீசல் மூலமும் உற்பத்தி செய்யப்பட்டுவருகின்றன.

இதேவேளை நீர் மின் உற்பத்தி 18.5 வீதமாகக் காணப்படுகின்றது.

இந்த மின் உற்பத்தி 17 இடங்களில் இடம் பெற்று வருகின்றது.

காற்றின் மூலம் உற்பத்தியாக்கப்படும் மின்உற்பத்தி 0.1 வீதமாகும். இம் மின் உற்பத்தி ஒரேயொரு இடத்தில் மாத்திரம் அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் அபிவிருத்திப் பணிப்பாளர் சுலக்ஷணா ஜயவர்த்தன தெரிவிக்கையில், 20 வீதமான மின் உற்பத்தியை நீர் மின் உற்பத்தி மூலம் மின் வழங்கலை மேற்கொண்டு வந்திருக்கின்றோம்.

எனினும் 40 வீதமான நீர் மின் உற்பத்தியை மேற்கொள்ளக் கூடிய வகையில் நீர் நிலைகளின் கொள்வனவு காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (3)

# செய்தித்துளிகள்

## இளைஞர்கள் சேட்டை

(கரணவாய்)

வடமராட்சி நெல்லியடி விக்னேஸ்வரா வீதியில் தொடர்ச்சியாக இரவு நேரங்களில் . இளைஞர்களின் சேட்டை அதிகமாகக் காணப்படுகின்றது.

மேலும் மோட்டார் சைக்கிள்களில் வரும் இளைஞர்கள் கூக்குரல் இட்டுச் செல்வதனால் பொதுமக்கள் அச்சம் அமைந்துள்ளனர்.

இரவுநேரம் என்பதால் வெளியில் வந்து பார்க்க முடியாமலும் மக்கள் இருக்கின்றனர். (இ-60)

## மாணவர் பாராளுமன்றப் பிரதிநிதிகள் பதவியேற்பும் கன்னி அமர்வும் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர் பாராளுமன்ற பிரதிநிதிகள் பதவியேற்பும் கன்னி அமர்வும் மேற்படி கல்லூரியின் சுப்பிரமணிய மண்டபத்தில் இன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெறும். (இ)

## மணவாளக்கோல பெருவிழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள்மிகு செல்லக்கதிர்காம சுவாமி திருக்கோயில் மணவாளக்கோல பெருவிழாவும் சத்ரு சம்ஹார ஸ்கந்த ஹோம வைபவமும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. (இ)

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை கண்ணகை முன்பள்ளி சமூகம் நடத்தும் வருடாந்த விளையாட்டு விழா எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கண்ணகை அம்பாள் தேவஸ்தான வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விளையாட்டு விழாவுக்கு அருள்மிகு கண்ணகை அம்பாள் தேவஸ்தானத்தின் தலைவர் த.திருஞானசம்பந்தர் தலைமை தாங்கவுள்ளார்.

இந்நிகழ்வுக்கு பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் பிரதம விருந்தினராகவும் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளார். (இ)

## சிலிண்டர்கள் விழுந்ததில் பெண்ணொருவர் படுகாயம்

கொடகவல-பலவின்ன பிரதேசத்தில் வாயு சிலிண்டர்கள் வீழ்ந்ததினால் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக கொடகவல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சப்புகஸ்கந்தையில் இருந்து அம்பலாந்தொட்டை நோக்கி வாயு சிலிண்டர்கள் லொறி ஒன்றில் கொண்டு செல்லப்பட்ட போது குறித்த லொறியிலிருந்து வாயு சிலிண்டர்கள் திடீரென விழுந்துள்ளன. இதன்போது பாதையில் பயணித்த குறித்த பெண் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

## கோபத்தால் வந்த மரணம்

அதிகம் கோபப்படுவதால் பெண் ஒருவர் மரணித்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த முதலாம் திகதி 83 வயதான பெண்ணொருவர் சிலாபம் வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் அதிகம் கோபமடைந்ததன் விளைவாக அவரது மூளை வீக்கமடைந்து உயிரிழந்துள்ளதாக பிரேத பரிசோதனைகள் மூலம் தெரியவந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-5)

## கெசல்கமுவ ஓயாவில் ஆணின் சடலம் மீட்பு

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நோர்வூட் சென் ஜோன் டிலரி தோட்ட பகுதியில் கெசல்கமுவ ஓயாவில் ஆணின் சடலம் ஒன்று நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

70 வயது மதிக்கத்தக்க இர்ண்டு பிள்ளைகளின் தந்தையான பழனியாண்டி என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(இ-5)

# தமிழ் சினிமா வரலாறு

134

## மார்டன் தியேட்டர்ஸ் மூடப்பட்டது

**136 படங்கள்**

1937 முதல் 1982 வரை மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்த மொத்த படங்கள் 136.

அதில் தமிழ் 102, தெலுங்கு 13, கன்னடம் 4, மலையாளம் 8, இந்தி 1, ஆங்கிலம் 1, சிங்களம் 7.

சிறந்த பிரந்திய மொழிப் படமாக குமுதம் (1961) படத்தை மத்திய அரசு தேர்ந்தெடுத்தது. அதற்கான பரிசை அன்றைய ஜனாதிபதி டாக்டர் ராதா கிருஷ்ணனிடம் இருந்து டி.ஆர்.சுந்தரம் பெற்றார்.

பிறகு வல்லவனுக்கு வல்லவன் படத்துக்கு தமிழக அரசின் பரிசு கிடைத்தது. அதை அன்றைய முதலமைச்சர் எம்.ஜி. ஆரிடமிருந்து ராமசுந்தரம் பெற்றார். கலைமாணி விருதும் அவருக்கு கிடைத்தது.

மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பில் உருவான முதல் மலையாள வண்ணப்ட மான கண்டம் பெச்ச கோட்டு என்ற படமும் சிறந்த பிராந்திய மொழிப் படத்துக்கான பரிசைப் பெற்றது.

சென்னைக்கு வெளியே தொடங்கப்பட்ட சினிமா ஸ்டூடியோக்களில் நீண்ட காலம் இயங்கியது. அதிக படம் தயாரித்தது என்ற பெருமை மாடர்ன் தியேட்டர்சுக்கு உண்டு. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றை டி.ஆர்.சுந்தரம் கடைப்பிடித்ததால் இது சாத்தியம் ஆயிற்று.


ஜூபிடர் சோமு

ஊழியர்களுக்கு குறித்த திகதியில் சம்பளம் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார் சுந்தரம். கடன் வாங்கிப் படம் எடுக்காதவர் என்ற புகழும் அவருக்கு உண்டு.

**ராமசுந்தரம் மறைவு**

டி.ஆர்.சுந்தரம் மறைவுக்கு பிறகு மாடர்ன் தியேட்டர்ஸ் நிர்வாகத்தை கவனித்து வந்த ராமசுந்தரம் 23.2.1993 இல் மரணம் அடைந்தார்.

அவர் மறைவுக்குப் பிறகு அவர் மனைவி கலைவாணி ராமசுந்தரம் கம்பெனியில் கணவருக்கு இருந்த நிர்வாகப் பொறுப்புக்களை ஏற்று ஒழுங்குபடுத்தினார்.

கம்பெனியின் வருவாயை பெருக்கும் வகையில் மாடர்ன்ஸ் தியேட்டர்ஸ் ஒத்திகை மண்டபம் இருந்த இடத்தில் நவீன வசதிகளுடன் டி.ஆர்.எஸ். திருமண மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இந்த மண்டபத்தின் திறப்பு விழா 1.12.1995 அன்று நடந்தது.

மாடர்ன் தியேட்டர்ஸ் இருந்த இடத்தில் சுந்தர் அப்பார்ட்மெண்ட் என்ற பெயரில் அடுக்குமாடி குடியிருப்ளபுக்கள் கட்டப் பட்டுள்ளன.

மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டூடியோ நுழைவு வாயில் மட்டும் இன்னமும் ஞாபகச் சின்னமாகப் பாது காக்கப்பட்டு வருகின்றது.

தமிழ்ப்பட உலகின் தொடக்க காலத்தில் பல வெற்றிப் படங்களைத் தயாரித்தவர் ஜூபிடர் சோமு.

ஜெமினி எஸ்.எஸ். வாசன், ஏவி.மெய்யப்ப செட்டியார், மாடர்ன் தியேட்டர்ஸ் டி.ஆர்.சுந்தரம், பட்சிராஜா, ஸ்டுடியோ ஸ்ரீராமுலு நாயுடு, ஜூபிடர் சோமசுந்தரம் ஆகிய ஐந்து பேரும் 1940 ஆம் ஆண்டு முதல் ஏறத்தாழ 20 ஆண்டு காலம் தமிழ்ப்பட உலகில் கொடி கட்டிப் பறந்தார்கள். பல வெற்றிப்படங்களைத் தயாரித்தார்கள்.

**இணைபிரியாத நண்பர்கள்**

1907 ஆம் ஆண்டு திருப்பூரில் பிறந்தவர் சோம சுந்தரம். பெற்றோர்: முத்து சாமி செட்டியார்-காளியம்மாள்.

சோமுவுக்கு முகைதீன் என்ற நண்பர் கிடைத்தார். இருவரும் நட்புக்கு இலக்கணம் வகுத்தார்கள். இருவரும் ஒன்றாகச் சேர்ந்து பலதரப்பட்ட வியாபாரங்களைச் செய்தனர். பலசரக்கு கடை இயந்திரங்களை வாங்கி விற்பது சோடா-கலர் தயாரிப்பு... இப்படி பல வியாபாரங்கள்.


முகைதீன்

இந்த சமயத்தில் தான் தமிழில் பேசும் படங்கள் வர ஆரம்பித்தன. படத் தொழிலில் ஈடுபட சோமுவும் முகைதீனும் முடிவு செய்தார்கள். ஜூபிடர் நிறுவனம் தொடங்கப் பட்டது.

# சாவகச்சேரியில்...

(18 ஆம்பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சம்பவங்களை புலிகளுடன் தொடர்புபடுத்தி மீண்டும் புலிகள் மீண்டெழுவதாக பிரசாரம்

செய்யும் முயற்சிகளில் முன்னைய ஆட்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஏற்கனவே கடந்த 2014 ஆம் ஆண்டு புலிகள் இயக்கத்துக்கு உயிர் கொடுக்க முயன்றவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு மூன்று பேர் நெடுங்கேணி காட்டிற்குள் வைத்து படையினரால் மர்மமான முறையில் சுட்டுக்கொல்லபட்டிருந்தனர். மீண்டும் அதேபோன்றதொரு சூழலை பரபரப்பாக்கவே முயற்சிகள் நடப்பதாகத் தெரிகிறது.

விடுதலைப் புலிகள் மீண்டுமொரு ஆயுதப் போராட்டத்தை நடத்தும் சூழல் எதுவும் இல்லாத நிலையில் ஆயுதங்களை மௌனிப்பதாக புலிகளின் தலைமை 2009 மே 16 ஆம் திகதி அறிவித்த பின்னர் தலைமைக்கு கட்டுப்பட்ட உறுப்பினர்கள் எவரும் அந்த உத்தரவை மீறத் துணியமாட்டார்கள் என்ற அடிப்படையில் பார்க்கும் போது இத்தகைய சம்பவங்களின் பின்னணியில் புலிகளின் இயக்கத்தில் உண்மையான உறுப்பினர்கள் இருக்கமாட்டார்கள் என்றே கூறலாம்.

அதேவேளை புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களாக இருந்த பலரை போரின் முடிவுக்கு முன்னரும் பின்னரும் அரச புலனாய்வுப் பிரிவினர் தமது தேவைகளுக்குப் பயன்படுத்தி வந்திருப்பதும் பல சம்பவங்களில் வெளிச்சமாகி இருக்கிறது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தல், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கொலை போன்ற சம்பவங்களில் அரச படைகளில் இருந்தவர்களால் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் பலரும் பயன்பட்டிருப்பதாக நீதிமன்றில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டவர் புலிகளின் நீண்டகால உறுப்பினராக இருந்த போதும் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படவில்லை. எவ்வாறு அவர் படையினரின் கண்களிலிருந்து தப்பித்தார் என்ற கேள்வியும் உள்ளது.

முன்னைய அரசாங்கத்துடன் இணைந்திருந்த கருணா பிள்ளையான் போன்ற முன்னாள் புலிகள் தான் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படாமல் தப்பித்தனர் என்பதையும் கவனத்தில் கொள்ளலாம்.

இப்போதைய நிலையில் நாட்டில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்கச் சூழலை குழப்பும் முயற்சிகளில் பல்வேறு தரப்புகள் ஈடுபட்டுள்ளன. முன்னைய ஆட்சியாளர்களான அரசியல்வாதிகள் மட்டுமன்றி அவர்களுக்கு ஆதரவான அரசாங்க அதிகாரிகள், இராணுவத்தினர் கூட இந்த முயற்சிகளைக் குழப்ப எத்தனிக்கிறார்கள்.

எனவே இந்த விவகாரத்தில் அரசாங்கத்திற்குள் அல்லது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள துறைக்குள் இருப்பவர்கள் கூட இத்தகைய சம்பவங்களின் பின்னணியில் இருந்திருக்கலாம். எவ்வாறாயினும் விசாரணைகளின் முடிவில் தான் இதன் சூத்திரதாரிகள் யார் என்பது தெரியவரும்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை இந்தச் சம்பவங்களை ஊதிப் பெருப்பிக்க விரும்பவில்லை. அது நல்லிணக்க முயற்சிகளைக் குழப்ப முனையும் சக்திகளுக்கு சாதகமாகிவிடும் என்று அஞ்சுகிறது.

அத்துடன் இந்த விவகாரம் தொடர்பாக இராணுவத்தினரின் கையில் விசாரணைகளை ஒப்படைக்கவும் அரசாங்கம் தயாராக இல்லை. பொலிஸ் மூலம் விசாரணைகளை முன்னெடுக்க அரசாங்கம் முடிவு செய்திருப்பதற்கு இந்த விவகாரம் திசை திருப்பப்பட்டு விடக் கூடாது என்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

இந்தச் சம்பவம் வடக்கில் மேற்கொள்ளப்படும் இராணுவமய நீக்க நடவடிக்கைகளை பாதிக்கலாம் என்று இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்ட போதிலும் அவ்வாறு ஏற்படாது என்றும் பாதுகாப்புச் செயலாளர் கூறியிருக்கிறார்.

எனினும் வடக்கில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த முகாம்களை விலக்கியதால் பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளது. தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று புலம்பித்திரிந்த மகிந்த ஆதரவு அணியினருக்கு இந்தச் சம்பவம் இன்னும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

இதனையும் மீறி வட்க்கில் இராணுவமய நீக்க நடவடிக்கைகளை மேற்கொள்வது அரசாங்கத்துக்கு சிக்கலாகவே இருக்கலாம்.

அந்த வகையில் பார்க்கும் போது அரசாங்கத்தை இக்கட்டில் மாட்டுவதோ இராணுவமய நீக்கத்தை தடுப்பதோ கூட இத்தகைய சம்பவங்களின் பின்னணியாக இருக்கக்கூடும்.

சுபத்ரா

நோயை தொடக்கத்திலேயே குணப்படுத்தி விடுங்கள்.
- கதே

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தேவலோகத்து தூதுக்குழு நயினாதீவுக்கு திடீர் விஜயம்-3

நயினாதீவு நாகவிகாரையில் கடலோரப் பகுதியில் நின்று தேவலோகத்து தூதுக்குழுவினர் புத்தர் சிலை அமைக்கப்படவுள்ள இடத்தை பார்க்கின்றனர்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிலரும் அந்தப் பகுதிக்கு வந்து போனதாகத் தகவல் கிடைக்கிறது.

எனினும் வடபுலத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் அந்தப் பக்கம் போகவில்லை என்றும் கேள்வி.

நிலைமை இவ்வாறு இருக்க கடலோரப் பாதுகாப்புத் தொடர்பான அமைப்பின் அனுமதி இன்னமும் கிடைக்கவில்லை என்ற தகவலும் தேவலோகத்து தூதுக்குழுவுக்கு வந்து சேர்கிறது.

**இந்திரன்:** யமதர்மராஜா இந்தப் பன்சலையில் முன்பு ஒரு சாது இருந்தவர். அவர் மிகவும் நல்லவர் என்று நயினாதீவு மக்கள் போற்றினர். ஆனால் இப்போது அந்த நிலைமைகள் இல்லாமல் போய்விட்டது.

நயினாதீவு தமிழ் மக்கள் வாழ்கின்ற இடம். அதிலும் வரலாற்றுச் சிறப்பும் உலகுவாழ் தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய அன்னை நாகபூசணி வீற்றிருக்கின்ற பதி. இந்த இடத்தில் புத்த மதம் தொடர்பில் மரபுவழிக் கதைகள் அவர்களிடம் இருந்தாலும் இங்கு வாழ்கின்ற தமிழ் மக்களின் சமயப் பாரம்பரியத்துக்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும் அதுவே நீதியாகும்.

அந்த வகையில் நயினாதீவில் இருக்கின்ற- இனிமேல் இருக்கக்கூடிய புத்தபிக்குகள் இன, மத, மொழி சார்ந்து ஒற்றுமையைப் பேணுகின்ற உத்தமர்களாக சேவையாற்ற வேண்டும் என்பதைத் தெரியப்படுத்துங்கள்.

தென்பகுதியில் ஒரு புத்தபிக்கு இனவாதம் பேசினால் அதன் தாக்கம் வடபகுதியில் பெரிதாக உணரப்பட மாட்டாது. ஆனால் நயினாதீவில் உள்ள ஒரு புத்தபிக்கு படகுப் பயணத்திலும் எனக்கே முன்னுரிமை என்று கூறினால் கூட அது பெரும் சர்ச்சையை- குழப்பத்தை ஏற்படுத்திவிடும்.

இதனை உரிய பௌத்த பீடங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**நந்திதேவர்:** சுவாமி யாழ்ப்பாணத்துக்குச் சென்று வடபகுதிக்கான ஆளுநரைச் சந்தித்தால் நல்லது எனக் கருதுகிறேன்.

**இந்திரன்:** அப்படியே ஆகட்டும்.

(தேவலோகத்து தூதுக்குழுவினர் புஷ்பக விமானத்தில் ஏறி யாழ்ப்பாணத்துக்கு வருகின்றனர்)

புஷ்பக விமானம் ஆளுநர் அலுவலகத்தில் தரை இறங்குகிறது.

**சித்திரகுப்தன்:** அடேங்கப்பா! ஆளுநர் அலுவலகம் மிகவும் நன்றாக இருக்கிறது. பழைய பூங்காப்பகுதியில் வடக்கு மாகாண சபைக்கட்டிடத்தையும் அமைத்திருந்தால் நல்லா இருந்திருக்கும் போல.

**யமன்:** சித்திரகுப்தா! குழப்பாதே நீ ஒரு கருத்தைக் கூறிவிட பின்னர் அது சிக்கலை ஏற்படுத்தி விடும்.

**வைரவர்:** சுவாமி ஆளுநரைச் சந்திக்க முடியாது போலும். ஆளுநரின் செயலாளரைச் சந்திக்க முடியும்.

**இந்திரன்:** நல்லது அவருக்கும் நயினாதீவுக்கும் தொடர்பு இருப்பதால் அவரிடமே சொல்லிவிடலாம். நயினாதீவில் புத்தர் சிலை அமைப்பது தொடர்பில் அவசரப்பட்டு எந்த முடிவும் எடுப்பதற்கு விட்டு விடாதீர்கள். புத்தர்சிலை மட்டுமல்ல எந்தக் கடவுள் சிலையாக இருந்தாலும் அதை அமைப்பதற்கான சந்தர்ப்பத்தை கடுமையாக குறையுங்கள்.

இல்லை என்றால் கடவுள் சிலை வைப்பதிலேயே மக்கள் நாட்டம் கொள்வர் . இது தொடர்பில் இறுக்கமான நியதிச் சட்டங்களை உருவாக்க ஆவன செய்யுங்கள். மிகுதி விடயங்கள் அவ்வப்போது தேவலோகத்தில் இருந்து தங்களுக்கு கடிதம் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

இவ்வாறு ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவனிடம் கருத்துத் தெரிவித்த தேவலோகத்து தூதுக்குழு புஷ்பக விமானத்தில் ஏறி தாயகம் திரும்பியது. *(முற்றும்)*

## அப்பாவி ஊழியர்களை பலிக்கடாவாக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

எமது இ.போ.ச.யாழ். சாலை கடந்த காலங்களில் எவ்வாறு இருந்தது எமது ஊழியர்களின் மனநிலை எவ்வாறு இருந்து தற்போதைய நிலை எவ்வாறு உள்ளது என்பதனை தங்களுக்கு தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் இல்லை: எமது ஊழியர்கள் என்ற ரீதியில் யாவும் தாங்கள் அறிந்ததே தற்பொழுது என்றுமில்லாதவாறு முன்னைய முகாமைகளைப் போல் அன்றி இரவு பகலாக ஊழியர்களுடன் ஊழியர்களாக இருந்து சபையை வளர்க்கின்ற பிரதான பிராந்திய முகாமையாளர் எமக்கு கிடைத்துள்ளார்.

இந்த பக்க பலத்தின் காரணமாக ஊழியர்களாகிய தங்களது தியாக சிந்தனையுடன் கூடிய மக்கள் சேவையினால் இலங்கையிலேயே முதல் தர பிராந்தியமாக சிறந்த பிராந்தியமாக வடக்கு திகழ்கின்றது.

அதற்கு காரணமானவர்கள் தாங்களோ தங்களது தியாக சிந்தனையுடன் கூடிய சேவைக்கு ஈடாக எதுவும் இருக்க முடியாது. எமது பிராந்தியத்தில் எந்த உயர் அதிகாரி எந்த இனத்தை சேர்ந்தவராக இருந்தாலும் அவர் தன் முயற்சியினால் எமது சபையை வளர்க்க முடியுமே யொழிய எமது வட பிராந்திய நிதி எதனையும் வேறு எங்கும் கொண்டு செல்ல முடியாது.

இதன் மூலம் நாம் எமது வளத்தினைபெருக்கிக்கொள்ள வேண்டும்.

ஆனால் எம்மிடையே உள்ள ஒரு சிலர் தமது கடந்த காலங்களைப் போன்று தங்களது தவறுகளை மூடி மறைக்கவும் மிகவும் கஷ்டப்பட்டு கடமையாற்றி அவர்கள் கொண்டு வரும் வருமானத்தில் சம்பளம் பெற்றவர்கள் தற்பொழுது அந்த நிலையில் தம்மை பாதுகாக்க முடியாத சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதால் அப்பாவி ஊழியர்களை தமக்காகவும் தமது சுய நலனிற்காகவும் பலிக்கடாக்களாக முனைகின்றனர். இவர்களது கடந்த கால நடவடிக்கைகள் தங்களுக்கு நன்று தெரிந்திருக்கும் என நினைக்கின்றேன்.

எனவே எமது ஊழியர்கள் ஆகிய தாங்கள் இவ்வாறான செயல்களுக்கு துணை போகாது எமது சபையையும் வருங்கால சமூகத்தினையும் பாதுகாக்க நல் எண்ணத்துடன் செயற்படுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன் என இ.போ.ச. (வட) யாழ். சாலை முகாமையாளர் செ. குலபாலசெல்வம் அறிவித்துள்ளார். (இ

## தற்கொலைப்படைத் தாக்குதலில் சிக்கி 29 பேர் உயிரிழப்பு; 27 பேர் படுகாயம்

(பாக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் இருந்து 320 கி.மீ தொலைவில் உள்ளது திகர் மாகாணம். இங்கு உள்ள நெடுஞ்சாலையில் அமைந்துள்ள உணவு விடுதிக்குள் புகுந்த தற்கொலைப் படை தீவிரவாதி ஒருவன் தனது உடலில் கட்டி கொண்டு வந்திருந்த சக்தி வாய்ந்த வெடிகுண்டுகளை வெடிக்க செய்தான். இதில் 14 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 27 பேர் படுகாயம் அடைந்தனர்.

அதே நேரம் பஸ்ரா என்ற நகரில் வர்த்தக பகுதியில் தீவிரவாதி ஒருவன் வெடிகுண்டுகள் நிரப்பிய காரை ஓட்டி வந்து அதை வெடிக்க செய்தான். இந்த சம்பவத்தில் 5 பேர் உடல் சிதறி பலியாகினர். 10 பேர் படுகாயம் அடைந்தனர். முன்னதாக பாக்தாத்தின் வடகிழக்கில் உள்ள புறநகர் பகுதியில் உள்ள சோதனைச் சாவடி மீது தீவிரவாதி வெடிகுண்டு நிரப்பிய காரை மோதி வெடிக்க செய்ததில் ராணுவ வீரர்கள் 6 பேர் கொல்லப்பட்டனர். 13 பேர் காயம் அடைந்தனர்.

அதே போல் பாராளுமன்ற பாதுகாப்புபடை வீரர்களின் தலைமையகம் முன்பு நடந்த கார் குண்டுவெடிப்பில் சிக்கி 4 பேர் உயிரிழந்தனர். (இ-5)

## மாலைதீவில் கருத்துச் சுதந்திர ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைப்பு

மாலைதீவில் கருத்துச் சுதந்திரத்திற்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களை கலைக்க பொலிஸார் மிளகுப்பொடி தூவி இருப்பதோடு 16 பேரை கைது செய்துள்ளனர்.

தலைநகர் மாலேவில் ஜனாதிபதி அப்துல் யாமினின அலுவலகத்திற்கு வெளியிலேயே நேற்று முன்தினம் இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றுள்ளது. இதில் ஊடகவியலாளர்களே பெரும்பாலும் பங்கேற்று இருந்தனர்.

மாலைதீவு அரசு அறிமுகப்படுத்தி இருக்கும் புதிய அவதூறு குற்றவியல் சட்டம் தொடர்பிலேயே அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது. இந்த சட்டம் தனியார் ஊடகங்கள் மற்றும் அரச எதிர்ப்பாளர்களுக்கு எதிராக பயன்படுத்தப்படும் என்று அச்சம் வெளியாகியுள்ளது.

எனினும் பாதுகாப்பு வலயத்திற்குள் ஆர்ப்பாட்டம் நடத்தியதாலேயே ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைக்கப்பட்டதாக அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்.

மாலைதீவின் முதலாவது ஜனநாயக தலைவரான முஹமது நஷீட் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் பதவி கவிழ்க்கப்பட்டது தொடக்கம் அங்கு அரசியல் பதற்றம் நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தீவிரவாதம் தொடர்பான குற்றச்சாட்டில் நஷீடுக்கு கடந்த ஆண்டு சிறைத்தண்டனை வழங்கியது கடும் கண்டனத்திற்கு உள்ளானது. அவர் தற்போது மருத்துவ சிகிச்சை பெற பிரிட்டனில் இருக்க அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-5)

## நேரக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர்களுக்கு நாளை 7ஆம் திகதி தொடக்கம் 13.04.2016 வரை நேரக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. அத்தோடு 10.04.2016 ஞாயிற்றுக்கிழமை சிகை ஒப்பனை நிலையங்களை திறந்து மக்களுக்கு சேவையாற்றுமாறும் 14.04. 2016 முதல் வழமைபோன்று நேரக்கட்டுப்பாடு விடுமுறை நாட்கள் அமுலில் இருக்கும். 04.04. 2016 அன்று யாழ். மாவட்டத்திலுள்ள சிகை ஒப்பனை நிலையங்களுக்கு யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவு சங்கங்களின் ஒன்றியத்தின் கண்காணிப்பு குழுவினரின் அதிரடி நடவடிக்கை மூலம் நேரக்கட்டுப்பாட்டை மீறி செயற்பட்ட தொழில் நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம். சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 24.04.2016 ஞாயிற்றுக்கிழமை யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி நடை பெறவுள்ளதாகவும் யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவு சங்கங்களின் ஒன்றியச் செயலாளர் அறிவித்துள்ளார். (இ

## 108 சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மாவுதிடல் 9ஆம் வட்டாரம் புங்குடுதீவு கிழக்கு ஸ்ரீ காத்தவராயர் ஆலய 12ஆம் ஆண்டு கும்பாபிஷேக விஞ்ஞாபனம் நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணி முதல் சங்காபிஷேகம் நடைபெற்று விசேட ஆராதனையும், வீதி உலாவும் நடைபெறவுள்ளது.

மேலும் யாழ்ப்பாணம் சாந்தன் குழுவின் இன்னிசைக் கச்சேரி மாலை 4.00 மணிக்கு நடைபெறும். (இ

## அப்துல் கலாமுக்கு நிரந்தர நினைவு சின்னம்!

(சென்னை)

இராமேஸ்வரத்தில் இருந்து கலாமின் பொருட்களை எடுத்து வந்து டில்லியில் அவருக்கு நிரந்தர நினைவு சின்னம் அமைக்க உள்ளதாக டில்லி கலாசார அமைச்சர் கபில் மிஸ்ரா தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் மறைந்த பிறகு டில்லியில் அவர் தங்கி இருந்த இல்லத்தில் இருந்து அவருடைய பொருட்கள் ராமேசுவரத்துக்கு எடுத்து செல்லப்பட்டன. இந்த நிலையில் இராமேசுவரத்தில் இருந்து கலாமின் பொருட்களை எடுத்து வந்து டில்லியில் அவருக்கு நினைவு சின்னம் அமைக்க உள்ளதாக டில்லி கலாசார அமைச்சர் கபில் மிஸ்ரா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் நேற்று முன்தினம் மேலும் கூறியதாவது,

அப்துல் கலாம் இறந்த பிறகு அவருடைய பொருட்களை மத்திய அரசு ராமேசுவரத்துக்கு அனுப்பி விட்டது. நான் அந்த பொருட்களை கொண்டு வருவதற்காக ராமேசுவரம் செல்ல இருக்கிறேன். கலாம் பயன்படுத்திய புத்தகங்கள், வீணை உள்ளிட்ட இசைக்கருவிகள், மூக்கு கண்ணாடிகள் போன்ற அவருடைய பொருட்கள் அனைத்தையும் லொரி மூலம் டில்லிக்கு எடுத்து வர இருக்கிறோம்.

அவை அனைத்தும் டில்லி சட்டசபைக்கு கொண்டு வரப்படும். பின்னர் டில்லியில உள்ள தில்லி ஹாட் மார்க்கெட் பகுதியில் கலாமுக்கு நிரந்தர நினைவு சின்னம் கட்டப்பட்டு அவருடைய பொருட்கள் அனைத்தும் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## ஹெரோயின் கடத்தியவருக்கு 14 நாட்கள் விளக்கமறியல்

ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட தும்பளையைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பெருமாள் சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை மதியம் பருத்தித்துறையிலிருந்து வியாபாரத்திற்காக எடுத்துச் செல்லப்பட்ட 185 கிராம் ஹெரோயினை மதுவரித் திணைக்களத்தினர் கைப் பற்றியதுடன் இளைஞரை கைது செய்தனர். அவரை நேற்று செவ்வாய்க்கிழமை பருத்தித் துறை நீதிமன்றில் முற்படுத்திய போதே 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (செ-60)

## பெருஞ்சாந்தி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆனைக்கோட்டை நாரவராக்காடு புக்கை தின்னி பிள்ளையார் கோவில் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.20 மணி முதல் 10 மணிக்குள் நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு எண்ணெய்க்காப்பு சாத்துதல் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை நடைபெறவுள்ளது. (இ

ஜனுதாஸ் சதம்

# கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ணம் -2016 யாழ்.சென்றலை வென்றது

## கொக்குவில் கே.சி.சி.சி.



கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ணத்திற்காக கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக்கழகம் 23 வருடகாலமாக நடத்திவரும் 30 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் 2 ஆவது சுற்றில் 8 ஆவது போட்டி கடந்த சனிக்கிழமை (02/04/16) காலை 8.30மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் கே.சி.சி.சி.அணி, யாழ்.சென்றல் அணியை 93 ஓட்டங்களால் வெற்றி பெற்று கால்இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.முதலில் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி. அணி 30ஓவர்களில் 6இலக்குகளை இழந்து 291 ஓட்டங்களை பெற்றனர்.

ஜனுதாஸ்-109,(23 வருடகாலமாக நடைபெற்று வரும் இத்தொடரின் முதல் சதம் என்பது குறிப்பிடத்தக்கது) சசிகரன்-89,ராகுலன்-11, உத்தமன்-13,ஆதி ஆட்டமிழக்காது 17 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் யாழ்.சென்றல் அணியை சார்ந்த சுபாதீஸ்-01,மனோச்-01, மில்லர்-01,திருக்குமார்-01,காலெப்-01 இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் அணி 27 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 198 ஓட்டங்களை பெற்றனர். றஜீவ் குமார்-76, சுதர்ஸன்-33, பாலேந்திரா-16,சுபாதீஸ்-14,திருக்குமார்-11ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் கே.சி.சி.சி. அணியை சார்ந்த சாம்பவன்-03,சத்தியன்,உத்தமன் தலா 62,சிலோஜன்-01 இலக்கினை கைப்பற்றினர். இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு கே.சி.சி.சி.அணி 7.84 புள்ளிகளையும் யாழ்.சென்றல் அணி 2.58 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர்.

இப்போட்டியில் வெற்றிபெற்ற கே.சி.சி.சி.அணி,09.04.16 சனிக்கிழமை அன்று ஓல்ட்கோல்ஸ் அணியுடன் கால் இறுதிப்போட்டியில் கலந்து கொள்ளவுள்ளது. (கு)

















# கொக்குவில் A, B விளையாட்டுக்கழக வடமாகாண ரீதியிலான துடுப்பாட்டம்

## இணுவில் கலைஒளி சம்பியன்

கொக்குவில் AB விளையாட்டுக் கழகத்தினால் வடமாகாண ரீதியாக நடத்தப்பட்ட அணிக்கு 11பேர் 16 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டித் தொடரின் இறுதிப்போட்டியில் குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழகத்தை வெற்றிபெற்று சம்பியன் ஆனது இணுவில் கலைஒளி விளையாட்டுக்கழகம். மேற்படி போட்டி கடந்த 03.04. 2016 ஞாயிற்றுக்கிழமை இணுவில் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.




நாணய சுழற்சியில்வெற்றி பெற்ற கார்மேல் போய்ஸ் விளையாட்டு கழக அணித்தலைவர் பந்துவீச தீர்மானித்தார்.அந்த வகையில் முதலில் துடுப்பாட்டத்தை மேற்கொண்ட இணுவில் கலைஒளி விளையாட்டுக்கழகம் 15.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 121 ஓட்டங்களை பெற்றது. அணிக்காக மோகன்ராஜ் 40,ஶ்ரீதர்சன் 26, சனந்தன் 20, வாமணன் 15 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தனர்.

122 என்ற வெற்றி இலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாட களமிறங்கினர் கார்மேல் போய்ஸ் விளையாட்டு வீரர்கள். ஆரம்பத்தில் தொடர்ந்து இலக்குகளை பறிகொடுக்க தொடர்ந்து களமிறங்கிய கார்மேல் போய்ஸ் வீரர் அனோஜன் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய போதும் 50ஓட்டங்களை பெற்றபோது சனந்தனின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து இலக்குகளை இழந்து கார்மேல் போய்ஸ் விளையாட்டு கழகம் இறுதியில் 12.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 89 ஓட்டங்களை பெற்றது.

மேற்படி சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டநாயகனாக மோகன்ராஜ் (கலைஒளி),தொடர் ஆட்ட நாயகனாக பிரதீஸ்(கலைஒளி), இறுதிப் போட்டியின் சிறந்த பந்து வீச்சாளராக சனந்தன்(கலைஒளி),சிறந்த துடுப்பாட்ட வீரராக அனோஜன் (கார்மேல் போய்ஸ்),அதிகூடிய ஓட்டங்கபை பெற்ற வீரராக மோகன்ராஜ் (கலைஒளி),அதிகூடிய இலக்குகளை பெற்ற வீரராக பிரதீஸ்(கலைஒளி), அதிகூடிய ஆறு ஓட்டங்களை பெற்ற வீரராக அயன்(கார்மேல் போய்ஸ்), அதிகூடிய நான்கு ஓட்டங்களை பெற்ற வீரராக விதுசன்(கார்மேல் போய்ஸ்) தெரிவாகினர். (கு)

## இன்றைய போட்டி

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் நடப்பு வருடத்துக்கான காற்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் இன்று புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறும் போட்டியில் மன்னார் கில்லறி அணியை எதிர்த்து கரணவாய் மத்தி விளையாட்டுக்கழகமும் தொடர்ந்து மாலை 4மணிக்கு நடைபெறும் போட்டியில் இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)

# சதுரங்கச் சம்மேளனத்தின் 2016 ம் ஆண்டுக்கான இளையோர் சதுரங்கப்போட்டிகள் கிளிநொச்சியில்

இலங்கை சதுரங்கச் சம்மேளனத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான தனியாள் சதுரங்கப் போட்டிகளின் மாவட்ட மட்டப் போட்டிகள் முதல் முறையாக கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச் சதுரங்கச் சங்கத்தின் வேண்டு கோளுக்கமைய கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தின் ஒழுங்குபடுத்தலில் இப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 9 ஆம், 10ஆம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இப்போட்டிகள் 8 வயதின் கீழ், 10 வயதின் கீழ், 12 வயதின் கீழ், 14 வயதின் கீழ், 16 வயதின் கீழ், 18 வயதின் கீழ் என்ற வயதுப்பிரிவுகளில் ஆண், பெண் பிரிவுகளாக நடைபெறவுள்ளன. வயதுகள் 2016-01-01 இல் உள்ளவாறாக கணிப்பிடப்படும்.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் தேசிய மட்ட இளையோர் போட்டிகளில் பங்குபற்ற தகைமை பெறும் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும். தேசிய மட்ட இளையோர் போட்டிகளுக்குத் தகைமை பெறும் போட்டியாளர்களது எண்ணிக்கை தொடர்பான விடயங்கள் போட்டி ஆரம்பத்தில் அறிவிக்கப் படும்.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை மாணவர்களது பெயர் விபரம் அடங்கிய விண்ணப்பங்களை பொறுப்பாசிரியர் எதிர்வரும் 8 ஆம் திகதி கரைச்சிக் கோட்டக் கல்வி அலுவலகத்தில் உரிய பதிவுக் கட்டணங்களைச் செலுத்தி நேரடியாக சமர்ப்பித்தல் வேண்டும் எனவும், வருகை தரும் போது குறித்த மாணவர்களது வயதினை உறுதிப்படுத்துவதற்காக அவர்களது பிறப்புச் சான்றிதழ்களையும் கொண்டு வருதல் வேண்டும் எனவும் கிளிநொச்சி மாவட்டச் சதுரங்கச் சங்கத் தலைவர் தி.சிவரூபன் அறிவித்துள்ளார்.

விண்ணப்பப்படிவங்கள் உரிய பாடசாலைகளுக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு 077 699 1078 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## சோபித தேரரை...

ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

குற்றங்களில் இருந்து தப்பிப்பதற்காக எந்த சூழ்நிலையிலும் அனுமதி இல்லாமல் ஒருவருடைய பெயரை பயன்படுத்தக்கூடாது. ஆனால் தம்மாலோக்க தேரர், சோபித தேரரின் பெயரை பயன்படுத்துவது மிகவும் கண்டிக்கத்தக்க விடயமாகும் என சுமங்கள தேரர சுட்டிக்காட்டினார்.

யானைக்குட்டிகள் தொடர்பான குற்றம், மற்றும் தன்மேல் சுமத்தப்பட்டுள்ள ஏனைய குற்றங்களில் இருந்து தப்பிப்பதற்காக தம்மாலோக தேரர் மிகவும் சூட்சுமமான முறையில் செயற்பட்டு வருவதாக சுமங்கள தேரர் தெரிவித்தார்.

தம்மாலோக தேரர் தொடர்பான அனைத்து குற்றங்களுக்கும் தம்மிடம் ஆதாரங்கள் இருப்பதாகவும் இதன்போது அவர் கூறினார்.

அதுமட்டுமன்றி தற்போதைய அரசாங்கம் சோபித தேரரை கொலை செய்துள்ளதாக தம்மாலோக தேரர் குற்றம் சுமத்தி வருகின்றார். இது முற்றிலும் பொய்யான விடயமாகும். உண்மையில் சோபித தேரரை கொலை செய்ய மகிந்த அரசே முயற்சித்தது.

சோபித தேரர் தலதா மாளிகைக்குச் சென்ற வேளையில், அவரை லொறி ஒன்றினால் மோதி விபத்துக்குள்ளாக்கி கொலை செய்வதற்கு கடந்த அரசாங்கம் முயற்சி செய்தது. அந்த சந்தர்ப்பத்தில் சோபித தேரர் தனது வாகனத்தை மாற்றியதால் உயிர் தப்பினாரென சுட்டிக்காட்டிய சுமங்களே, உடுவே தம்மாலோக தேரர், தனது குற்றங்களை மறைப்பதற்கு ஊடகங்களின் முன் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார். (செ-12)

## கூட்டணியிலிருந்து...

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பமான நிலையில், ஒழுங்குபபிரச்சினை ஒன்றை முன்வைத்து கேள்வி எழுப்பிய போதே விமல் வீரவன்ச இவ்வாறு கோரிக்கை விடுத்தார். அவரது கோரிக்கையினை செவிமடுத்த சபாநாயகர் இது குறித்து கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடியதன் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் கூறினார்.

நேற்றைய நாடாளுமன்ற அமர்வின் போது, ஒழுங்குபிரச்சினை குறித்து கோரிக்கை முன்வைத்த விமல் வீரவன்ச தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

எமது கட்சியான தேசிய சுதந்திர முன்னணியானது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து விலகி எதிரணியில் சுயாதீன குழுவாக செயற்பட்டுவருகிறது.

எனவே எம்மை தனியொரு குழுவாக ஏற்றுக்கொண்டு நாடாளுமன்றில் ஒரு கட்சிக்கு வழங்கப்படும் சிறப்புரிமைகளை வழங்குமாறு ஐந்து உறுப்பினர்களின் கையொப்பத்துடன் கடிதமொன்றை கையளித்துள்ளேன். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என விமல் வீரவன்ஸ தெரிவித்தார். (செ-12)

## பள்ளிவாசலை...

கில் சென்ற ராவணா பலய அமைப் பினர் பிரதேசவாசிகளால் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தின் பலாங்கொடை பிரதேசத்தில் அமைந்துள்ள கூரகல கிராமத்தில் ஆயிரம் வருடங்கள் பழைமையான முஸ்லிம் பள்ளிவாசல் ஒன்றுள்ளது. இதற்கு அண்மித்ததாக புத்த விகாரை ஒன்றும் உள்ளது.

இந்நிலையில் குறித்த பள்ளிவாசல் அதன் அருகில் இருக்கும் விகாரை நிலத்தை ஆக்கிரமித்து நிர்மாணிக்கப்பட்டதாக கூறி அதனை இடித்து தகர்க்குமாறு பொதுபல மற்றும் ராவணா பலய ஆகியன கடந்த ஆட்சி தொடக்கம் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றன.

இந்நிலையில் கூரகல பள்ளிவாசலை இடித்துத் தகர்க்கும் நோக்கில் ராவணா பலய திட்டமிட்டு வருவதாக கடந்த சில நாட்களாக ஒரு பதற்றம் நிலவி வந்தது.

இதற்கிடையே நேற்றைய தினம் கூரகல பளளிவாசலை உடைக்கும்நோக்குடன்வருகை தந்த ராவணா பலய அமைப்பிரை அப்பிரதேசத்தின் சிங்கள மக்களே விரட்டியடித்துள்ளனர்.

மேலும் ராவணா பலய அமைப்பின் இனவாத செயல்களைக் கண்டித்து பிரதேசவாசிகள் பதாதைகளை வைத்திருந்ததோடு பொலிசாரும் பிரதேசவாசிகளுடன் ஒத்துழைத்து இனவாத ராவணா பலய அமைப்பினரை விரட்டியடிப்பதற்கு உதவியுள்ளனர்.

இதன்போது ராவணா பலய மற்றும் சிங்ஹல ராவய அமைப்பினரின் வாகனங்கள் வந்த பாதையில் பிரதேச மக்கள் டயர்களை வைத்து தடங்கலை ஏற்படுத்தி இடைவழியிலேயே அவர்களைத் திருப்பியனுப்பியுள்ளனர்.

பிரதேச மக்கள் இங்கே இனப் பிரிவினையை உண்டாக்க வேண்டாம் என ராவணா பலய பிக்குகளிடம் வலியுறுத்தியிருந்ததுடன், நாம் இலங்கையர்கள், இனவாதத்தை சிங்கள முஸ்லிம் பிரிவினையை உருவாக்கும் சக்திகளுக்கு எமது அனுதாபங்கள் என பதாகையொன்றும் ஏந்தி நின்று இனவாத ராவணா பலய அமைப்பினரை திருப்பி அனுப்பியிருந்தனர். (செ-12)

## இந்திய மீனவர்கள்...

கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம் ஆகிய மாவட்டங்களில் உள்ள நீரியல் வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

குறித்த மீனவர்கள் அந்தந்த மாவட்ட நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டு 3 மாத காலமாக அவர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டிருந்த நிலையில் அவர்கள் அனைவரையும் விடுதலை செய்வதற்கு நேற்றைய தினம் சட்டமா அதிபர் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

அந்தவகையில் யாழ்.மாவட்ட சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 32 மீனவர்களில் 24 மீனவர்கள் ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றினாலும் 8 மீனவர்கள் மல்லாகம் நீதவான் நீதிமன்றினாலும் நேற்றையதினம் விடுதலை செய்யப்பட்டுயாழ் மாவட்ட நீரியல்வளத்துறை அதிகாரிகளால் யாழ் இந்திய துணைத்தூதரக அதிகாரி களிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை மன்னார் மாவட்டத்தில் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த 44 இந்திய மீனவர்களும் புத்தளம் மாவடடத்தில் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த 23 இந்தியமீனவர்களும் அந்தந்த மாவட்ட நீதிமன்றங்களினால் இன்றைய தினம் விடுதலை செய்யப்படவுள்ளதாக தெரியவருகிறது. (செ-9)

## அரசியலமைப்பு...

மன்றம் அரசியலமைப்பு பேரவையாக மாற்றப்பட்டதாக பேரவையின் முதலாவது அமர்வில் பேசிய தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்தல், புதிய தேர்தல் முறையொன்றை உருவாக்குதல் ஆகிய முக்கிய விடயங்கள் புதிய அரசியல்யாப்பின் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

இந்நடவடிக்கைகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை பெற்றுக் கொள்வதற்காக நாடாளுமன்றம் அரசியலமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்டதாகவும் பேரவையின் தலைவரும் சபாநாயகரு மான கரு ஜயசூரிய தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து அரசியலமைப்பு நிர்ணய சபையின் துணைத் தலைவர்களாக எழு நாடாளுமன்ற உறுப்பினர்களை அவர் நியமித்தார்.

# சட்டவிரோத மின்சாரம் இருவருக்கு எதிராக வழக்கு

சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்ற இருவருக்கு எதிராக மல்லாகம் மாவட்ட நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக மானிப்பாய் பொலிஸார் நேற்றையதினம் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் இருந்து வருகை தந்த மின்சார சபையின் அதிகாரிகளும் மானிப்பாய் பொலிஸாரும் இணைந்து திடீர் சுற்று நடவடிக்கையினை கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது ஆனைக்கோட்டை பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற இருவர் கைது செய்யப்பட்டனர்.

மின்மானியின் பற் சுழற்சியினை குறைத்து மின்சாரம் பெற்றஒ ருவரும் சுழற்சி வேகத்தை குறைத்து மின்சாரம் பெற்ற ஒருவருமாக இவ் இருவரும் கைது செய்யப்பட்டிருந்தனர். சந்தேக நபர்கள் இருவரையும் நேற்று முன்தினம் மல்லாகம் மாவட்ட நீதிவான் ஏ.யூட்சன் முன்னிலையில் முற்படுத்தியபோது,

இருவரையும் தலா 50ஆயிரம் ரூபா ஆட்பிணையில் விடுவித்த நீதவான், குறித்த வழக்கினை எதிர்வரும் மே மாதம் 11ஆம் திகதிக்கு தவணையிட்டுள்ளார். (செ-9)

இதன்படி துணைத் தலைவர்களாக திலங்க சுமதிபால, செல்வம் அடைக்கலநாதன், கபிர் ஹசிம், சுதர்ஷனி பெர்ணான்டோபுள்ளே, திலக் மாரப்பன, மஹிந்த யாப்பா அபேவர்த்தன மற்றும் நலிந்த ஜயதிஸ்ஸ ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

அரசியலமைப்பு பேரவையின் நிறைவேற்று குழு உறுப்பினர்களாக 21 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

இக் குழுவின் தலைவராக பிரதமர் விக்கிரம சிங்கவின் பெயரை ஆளுங்கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் கயந்த கருணாதிலக பிரேரித்தார்.

நடவடிக்கை குழுவின் ஏனைய அங்கத்தவர்களாக,.

01) லக்ஷ்மன் கிரியெல்ல
02) நிமல் சிறிபால டி சில்வா
03) ரவூப் ஹக்கீம்
04) விஜேதாச ராஜபக்ஸ
05) சுசில் பிரேமஜயந்த
06) ரிஷார்ட் பதியுதீன்
07) சம்பிக்க ரணவக்க
08) டி.எம். சுவாமிநாதன்
09) மனோ கணேசன்
10) மலிக் சமரவிக்கிரம
11) எதிர்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன்
12) எதிர்கட்சியின் பிரதம கொறடா அனுரகுமார திசாநாயக்க
13) டிலான் பெரேரா
14) தினேஷ் குணவர்தன
15) ஜயம்பதி விக்கிரமரட்ன
16) எம்.ஏ. சுமந்திரன்
17) துசித்த விஜேமான்ன
18) பிரசன்ன ரணதுங்க
19) டக்ளஸ் தேவானந்தா
20) பிமல் ரத்னாயக்க

இவர்களின் பெயர்களும் ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவினால் பிரேரிக்கப்பட்டது.

இந்த உறுப்பினர்களின் பெயர்களை அரசியலமைப்புச் சபை ஏகமனதாக அங்கீகரித்தது.

இதன்போது எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினராலும் இந்த பிரேரணைக்கு ஆட்சேபனை தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் புதிய அரசியல் அமைப்புத் தொடர்பாக மக்களின் கருத்துக்களை பதிவு செய்யும் விசேட குழுவின் அறிக்கை இம்மாத இறுதிக்குள் வழங்கப்படும் என்று அந்தக் குழு அறிவித்துள்ளதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும் அமைச்சருமான லகஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இந்த குழுவின்அறிக்கை கிடைத்த பின்னர் அரசியல் அமைப்பு பேரவையின் குழுக்கள் நியமிக்கப்படுமென்றும் அமைச்சர் கிரியெல்ல மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து அரசியலமைப்பு பேரவையின் நடவடிக்கைகள்இன்றைய தினம் வரை ஒத்திவைக்கப்பட்டது. (செ-12)

## ஒவ்வொருவர்...

கொழும்பில் நேற்று ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இந்த அரசாங்கமும் கடந்த அரசாங்கத்தைப் போலவே ஊழல் மோசடிகளில் ஈடுபடுகின்றது.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட பலரும் இன்று அரச நிறுவனங்களில் பணிபுரிகின்றனர். அவர்களுக்கு எதிராக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அண்மையில் சாவகச்சேரி பகுதியில் கண்டெடுக்கப்பட்ட தற்கொலை அங்கி தொடர்பில் பலரும் கருத்து வெளியிடுகின்றனர். ஆனால் கடந்த ஆட்சியின் போது, இவ்வாறான அங்கிகள் மற்றும் யுத்த ஆயுதங்களைப் பற்றி யாரும் பேச முன்வரவில்லை.

தற்போது நாட்டில் இடம்பெறும் ஊழல்கள் பற்றி அவதானத்தை செலுத்தும்போது கூட்டு எதிர்க்கட்சி போலியான பிரசாரங்களை மேற்கொள்வதாக இதன்போது, குறிப்பிட்டுள்ளார்.

நமது நாட்டு வங்கிகளில் அதிகமான மோசடிகள் இடம்பெறுகின்றன. ஆனாலும் அதனுடன் தொடர்புடையவர்கள் இதுவரையிலும் கைதுசெய்யப்படவில்லை ஊழல்வாதிகள் தொடர்ந்தும் பதவியில் உள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

இத்தகைய காரணிகளினாலேயே நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ளது. இந்த நிலையில் நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் செலுத்த வேண்டிய கடன் தொகை 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது மிகவும் பாரதூர மான விடயமாகும்.

, ஒருவர் ஒரு ரூபாயை வருமானமாக பெற்றால் அதனை நாட்டுக்கு இரண்டு ரூபாயாக கடனாக செலுத்த வேண்டிய நிலையில் இருப்பதையே இது காட்டுகின்றது என ஊழலுக்கெதிரான முன்னணி அமைப்பின் ஏற்பாட்டாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார். (செ-12)

## முற்றுகை...

பகுதியை முற்றுகையிட்ட 500க்கும் அதிகமான முல்லைத்தீவு மீனவர்கள் வெளி மாவட்டத்தோரின் தடைசெய்யப்பட்ட தொழில் பாவனையையும் உறுதிப்படுத்தினர்.

வடமாகாணசபை உறுப்பினர் துரைரசா ரவிகரனிடம் முன்னர் முறையிட்டிருந்த மீனவர்கள்நேற்று அவரையும்அழைத்துக்கொண்டே குறித்த சாலைப்பகுதிக்குச் சென்று தென் பகுதி மீனவர்களின் தடைசெய்யப்பட்ட தொழில பாவனையை உறுதிப்படுத்தியுள்ளனர்.

முல்லைத்தீவின் மாத்தளன், இரணைப்பாலை, அம்பலவன்பொக்கணை, ஆனந்தபுரம், வலைஞன்மடம், சுதந்திரபுரம், தேவிபுரம், கல்லாறு உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த சுமார் ஐந்நூறுக்கு மேற்பட்ட மீனவர்களுடன் முல்லை. சாலைக்குச்சென்ற ரவிகரன் குறித்த முறைப்பாட்டின் உண்மைத் தன்மையை உறுதிசெய்தார்.

வெளி மாவட்ட மீனவர்கள் முன்னிலையில் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதை சுட்டிக்காட்டிய முல்லை. மாவட்ட மீனவர்கள், தடைசெய்யப்பட்ட தொழில்களை இங்கு செய்து எமது வயிற்றில் அடிக்காதீர்! உங்களுடைய இடத்திற்குச்செல்லுங்கள் என்று அழுத்தமாக தெரிவித்துள்ளனர்.

பதற்றம் நிலவிய இச்சூழலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த வடமாகாணசபை உறுப்பினர் வெளிமாவட்ட மீனவர்களுக்கு இடர் சூழ்நிலையை அழுத்தமாக கூறி மீனவர்களுடன் கரை திரும்பியுள்ளார். (செ-15,281)

## தேர்தல்களை பிற்...

சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படுவதாக கூறி உள்ளூராட்சித் தேர்தல்கள் மாதக்கணக்கில் பிற்போடப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதற்கு வேறு பல காரணங்களும் முன்வைக்கப்படுகின்றது.

தேர்தல் தொகுதி எல்லை மறுசீரமைப்பு பணிகள் கடந்த ஜனவரி, ஏப்ரல் என கால எல்லை நீண்டுகொண்டு போய், தற்போது ஓகஸ்டில் முடிவடையும் என்று தெரிவிக்கப்படுகின்றது. எனினும் இதற்கான உறுதியான கால எல்லை குறிப்பிடப்படவில்லை.

அரசாங்கம் உண்மையில் ஜனநாயகத்தை மதிக்கும் ஒன்றாக இருக்குமானால் தொகுதி எல்லை சிக்கல்கள் இல்லாத உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்களையேனும் முதலில் நடத்தியிருக்க வேண்டும். ஏனைய மன்றங்களின் தேர்தல்களை பின்னர் நடத்தியிருக்க முடியும்.

கட்டம் கட்டமாக தேர்தல்களை நடத்துவது ஜனநாயகத்தை பாதிக்கும் என்ற போதிலும், தேர்தல்களை பிற்போடுவது அதனைவிட ஆபத்தானது. பொதுமக்களின் ஜனநாயக உரிமைகளை உத்தரவாதப்படுத்துவது தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

எனவே இதனை வலியுறுத்தும் வகையில் தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபடும் ஏனைய அமைப்புகளின் முக்கியஸ்தர்களுடன் இணைந்து தேர்தல்கள் ஆணையாளரை சந்தித்து, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தவுள்ளோம் என்றும் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார். (செ-12)

## ஆணைக்குழுவில்...

சாய ஆராய்ச்சி நிறுவனத்தில் இடம்பெற்றதாக கூறப்படுகின்ற அனுமதியின்றி வாகனங்களை பயன்படுத்தியமை மற்றும் மேலும் இரண்டு குற்றச்சாட்டுக்களுக்காக இவரிடம் விசாரணைகள் முன்னெடுககப்பட்டு வாக்கு மூலம் ஒன்றை பெற்றுக் கொளவதற்காகவே அழைக்கப்பட்டிருந்தார். (செ-12)

## வடக்கு ஆளுநர் மன்னார்...



வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று காலை மன்னார் ஆயர் இல்லத்திற்கு சென்றிருந்தார்.

இதன்போது வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயிற்கும் மன்னார் மறை மாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் வணக்கத்திற்குரிய ஜோசப் கிங்சிலி சுவாமிப்பிள்ளைக்கும் இடையில் விசேட சந்திப்பு இடம்பெற்றது. இதன்போதே குறித்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

குறித்த சந்திப்பில் வடமாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன், ஆயரின் செயலாளர் அருட்தந்தை ஏ.முரளிதரன் அடிகளார், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்றது. இந்தச்சந்திப்பின் போது மன்னார் மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்து வடமாகாண ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதோடு.

மன்னார் மாவட்டத்துக்கு ஆளுநர் மாதத திற்கு ஒரு தடவை வருகை தந்து மாவட்டத்தின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யுமாறு மன்னார் ஆயர் இல்லம் சார்பாக கோரிக்கை விடுக்கப்பட்டது.

தொடர்ந்து வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே மன்னார் மறைமாவட்டத்தின ஓய்வுபெற்ற முன்னாள் ஆயர் வணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசேப்பு ஆண்டகையையும் சந்தித்து ஆசி பெற்று அங்கிருந்து விடைபெற்றிருந்தார். (செ-12-15-281)

## மின்...

மாலை ஏற்பட்ட மின்னல் தாக்கம் காரணமாக குளித்துவிட்டு வந்த சிறுவன் மரணமடைந்துள்ளார்.

இலங்கேஸ்வரன் துலக்சன் (வயது 15) என்ற சிறுவனே சம்பவத்தில் மரணமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள். (செ-12)


2மணித்தியாலத்தில் கணினி திருத்தம்
உங்களது வீடுகள் அலுவலகங்களுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள் 0779086737
கணினி திருத்தக் கட்டணம் 500/- Computer Repair
லப்டொப் டெஸ்க்டொப் கணினிகள் திருத்தம்
கணினிகள் விற்றல் பாவித்தகணினிகள் வாங்குதல்
GUNA BEST PC
CCTV Camera Sale Installation etc.
50/12, Hospital Road, Vairavar Kovil Lane, Jaffna.
கணினி பயன்பாட்டின் உச்ச அனுகூலங்களை எமது மக்கள் பெறவேண்டும் என்பதற்காக நிபந்தனையுடனான சேவைகளை வழங்குகிறோம். (4115)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.


அழையுங்கள் - 077 29 31 062
CNR World wide Express
No.401 Clock tower road, Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
(C-4218)

ECONOMICS HALL
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
A/L 2017, 2018
PhysicS
(for maths, Bio Students)
by: கிறிஸ்தோப்பர் ரஞ்சித்குமார்
(Engineering Lecturer) Resorce Person for Electronics, Electrical and Mechanical Drawing}
ஆரம்பம்: 09.04.2016 (சனி) காலை 9.00
தொடர்பு: 0776624387
(4118)

புதுவருடத்தை முன்னிட்டு ஏசியன் தளபாடத்தின்
மாபெரும் மலிவு விற்பனை


இல: 230, நாவலர்வீதி,
(இலுப்பையடி - ஆனைப்பந்தி சந்திக்கு இடையில்)
T.P 077 831 4201
077 358 3879
(சி-4221)

A/L பொருளியல்
வினாவிடை 5+
சர்வதேசப் பொருளியல்
ரூபா. 250/-
முழுவிடயங்களும் புதிய சென்மதி நிலுவையும் அடங்கிய புதிய வெளியீடு
2015 A/L பரீட்சையில் 99 புள்ளிகள் பெறவைத்த மற்றும் பொருளியல் நூல்கள்
ஆசிரியர் :
வே. கருணாகரன்
பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை

நான்காம் ஆண்டு நினைவில்

மலர்வு 02.02.1946
உதிர்வு 12.02.2012
சின்னத்துரை கணபதிப்பிள்ளை

ஆறாம் ஆண்டு நினைவில்

மலர்வு 30.08.1982
உதிர்வு 13.04.2010
பிறேமலோஜினி பிரபாகரன்

பதினெட்டாம் ஆண்டு நினைவில்

மலர்வு 03.05.1981
உதிர்வு 08.04.1997
கணபதிப்பிள்ளை பிரதீபன்

அன்பிலே உருவாகி எம் நெஞ்சிலே நிறைந்திட்ட, எம் உயிர் செல்வங்களே! ஆண்டுகள் பல ஓடி
மறைந்தாலும் உம் நினைவுகள் எம் நெஞ்சை விட்டு அகலாது!
சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.
(சி-4226)
உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# தரம்-5 மாணவர்களுக்கான
# புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-05

பகுதி-I

## தமிழ்க் கல்விக் கழகம்


நேரம்:- 45 நிமிடங்கள்

1ஆம் 2ஆம் வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குரிய பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

01) 


1. 
2. 
3. 

02) 


1. 
2. 
3. 

3 ஆம் 4ஆம் வினாக்களில் முதலில் உள்ள படத்திற்கு மிகவும் பொருத்தமான படத்தை தெரிவு செய்க.

03) 

1. 
2. 
3. 

04) 

1. 
2. 
3. 

கோலத்திற்கு ஏற்ப 5 ஆம் 6ஆம் வினாக்களுக்கான பொருத்தமான எண்ணை தெரிவு செய்க

| | | | | |
|---|---|---|---|---|
| 50 | 70 | 38 | A | 49 |
| 37 | 59 | 25 | 52 | B |

05) A யின் பெறுமானம்


1) 25 2) 94 3) 63

06) B யின் பெறுமானமானது

1) 36 2) 13 3) 62

07) இவ் உருவில் உள்ள முக்கோணிகள், சதுரங்கள் முறையே

1) 5,16 2) 12,5 3) 16,5



➢ பின்வரும் தகவல்களை கொண்டு 8,9,10ஆம் வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

| | | |
|---|---|---|
| கொய்யா-1<br>ரம்புட்டான்-1 | ரம்புட்டான்-3 | கொய்யா-2<br>அப்பிள்-1 |
| ரூபாய் 10 | ரூபாய் 18 | ரூபாய் 30 |

08) கொய்யாப்பழம் இரண்டினது விலை

1.ரூபாய் 12.00 2.ரூபாய் 4.00 3.ரூபாய் 8.00


09) அப்பிள் ஒன்றினது விலை

1.ரூபாய் 18.00 2.ரூபாய் 22.00 3.ரூபாய் 8.00

10) கொய்யாப்பழம் இரண்டினதும் ரம்புட்டான் இரண்டினதும் விலை

1.ரூபாய் 20.00 2.ரூபாய் 28.00 3.ரூபாய் 16.00


11)




இந்த நான்கு சம சதுரத்தில் மூன்று சம சதுரமாக மாற்ற எந்தப் பக்கத்தை நீக்க வேண்டும்

1.W 2.R 3.M

➢ சதுர கட்டங்களின் மீது P,Q,R,S என நிறந்தீட்டப்பட்டுள்ள வடிவங்கள் வரையப்பட்டுள்ளன.





12) பரப்பளவு கூடிய வடிவம்

1.P 2.Q 3.R

13)பரப்பளவு குறைந்த வடிவம்

1.S 2.P 3.Q

14) மரக்கறி, பழங்கள், ரம்புட்டான் இவற்றைக் குறிக்கும் வரைபடம் உள்ளது. இதில் ரம்புட்டான் என்பதை குறிக்கும் ஆங்கில எழுத்து




1.A 2.B 3.C

15) □+○ = 7, □+△ = 9, △+○ = 10 எனின் ○+□+△ = ? பெறுமானம் யாது?

1) 13 2) 14 3) 15

16) ஈசான மூலைக்கு எதிரான திசை

1.அக்கினிமூலை 2.நிருதிமூலை 3.வாயுமூலை

17)



இம் மரத்துண்டை ஒரு துண்டாக வெட்ட ரூபாய் 28 செலவாகும்.5 துண்டுகளாக வெட்ட செலவாகும் பணம்.


1.ரூபாய் 140.00 2.ரூபாய் 112.00 3.ரூபாய் 150.00

18) இன்று புதன்கிழமை 14 ஆம் திகதி எனின் நாளை மறுதினம், திகதி, கிழமையாக அமைவது?


1.வெள்ளி 15 ஆம் திகதி 2. வெள்ளிக்கிழமை 16 ஆம் திகதி 3. வியாழன் 17 ஆம் திகதி

➢ தரப்பட்ட கோலத்திற்கு ஏற்ப அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்து கோடிடுக.


19)




1.




2.




3.




20)




1.




2.





3.




21) கீழேயுள்ள சமபக்க முக்கோணிக்கு சமமான சுற்றளவு கொண்ட உருவம்.




1. 


2. 


3. 



➢ தப்திக்கு மூத்த சகோதரன் இருவரும் சகோதரி ஒருவரும் இளைய சகோதரன் ஒருவரும் இருக்கிறார்கள்.

22) தப்தியின் குடும்பத்தில் உள்ள பிள்ளைகள் எத்தனை?

1) 2 2) 5 3) 3

23) தப்திக்கு உள்ள சகோதரர்கள் எத்தனை?

1) 3 2) 5 3) 4

24) 


நிறந்தீட்டப்பட்ட பகுதியை பின்னமாக்குக.


1) 1/6 2) 1/2 3) 1/4


25) 2017 வருடம் எத்தனையாம், நூற்றாண்டு எத்தனையாம் தசாப்தமாகும்

1) 21ஆம் நூற்றாண்டு 1ஆம் தசாப்தம்
2) 20ஆம் நூற்றாண்டு 2ஆம் தசாப்தம்
3) 21ஆம் நூற்றாண்டு 2ஆம் தசாப்தம்


26) பின்வரும் கடிகார முகங்களின் கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான கடிகார முகத்தை தெரிவு செய்து கோடிடுக.







1. 

2. 

3. 

➢ முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது மாற்றமின்றிக் காணப்படும் உரோமன் எண்ணாக அமைவது

27) 1.IXX 2.XIV 3.XIX

28) 1.LX 2.XX 3.XIII

➢ கோயினுக்கு 75m கிழக்கு திசையில் பாடசாலையும் பாடசாலைக்கு 150 m தெற்கு திசையில் வைத்தியசாலையும் வைத்தியசாலைக்கு 75m மேற்கு திசையில் மைதானமும் அமைந்துள்ளது.

29) மைதானம் உள்ளது கோயிலுக்கு எத்திசையில்

1.வடக்கு 2.தெற்கு 3.மேற்கு

30) கோயிலுக்கும் மைதானத்திற்கும் இடையிலான தூரம்

1) 175 m 2) 75m 3) 150m

➢ வாகன தரிப்பிடத்தில் துவிச்சக்கரவண்டியின் மும்மடங்கு மோட்டார்சைக்கிள் நிறுத்தப்பட்டுள்ளது. இருவாகனங்களின் மொத்த எண்ணிக்கை 36ஆகும்.

31) மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை

1) 9 2) 8 3) 27

32) துவிச்சக்கரவண்டிகளின் எண்ணிக்கை

1) 18 2) 9 3) 16

33) 18 ▲ 2= 72 ♦ 2 எனும் கணிதச் செய்கையின் ▲, ♦ குறியீடுகள் குறிக்கும் கணித குறியீடுகள் முறையே

1) ÷,× 2) × ,+ 3) ×,÷

34) 15$9∆ 8= 14 எனும் கணிதச் செய்கையின் $,∆ குறியீடுகள் குறிக்கும் கணிதக் குறியீடுகள் முறையே

1) −,× 2) +,- 3) −,+

35) அதிவேகப் பாதையில் பேருந்து ஒன்று ஒரு மணித்தியாலத்திற்கு 80Km வேகத்தில் செல்லுமாயின் அது 45 நிமிடங்களில் செல்லும் தூரம் யாது?

1) 240Km 2) 60Km 3) 20Km

➢ பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க


36) அதிகாரம் குறைந்து செல்லும் ஒழுங்கு முறையில்


1.அதிபர், மாணவத் தலைவர், ஆசிரியர், மாணவன்
2.அதிபர், உப அதிபர், ஆசிரியர், மாணவத் தலைவன்
3.அதிபர், ஆசிரியர், மாணவத் தலைவன், உதவி அதிபர்


37) நிலப்பரப்பின் படி அதிகரித்து செல்லும் ஒழுங்கு முறையில்

1.பிரதேசசபை, மாவட்டம், மாகாணம், கிராமம்
2.நாடு, மாகாணம், மாவட்டம், கிராமம்
3.கிராமம், மாவட்டம், மாகாணம், நாடு


38) 3 சதுரங்கள் 5 முக்கோணங்கள் 2 வட்டங்கள் கொண்ட உருவமாக அமைவது


1.



2.


3.


39) □ = 6, △ = 2, ○ = 3 கொண்டமைந்த உருவமாக அமையாதது

1.


2.


3.


40) பிழையான கோவையை தெரிவு செய்க

1) $10 \times 10 \times 100 = 10000$
2) $10 \times 10 \times 100 \times 0 = 100000$
3) $100 \times 1000 \times 10 = 1000000$

இவ் வினாக்களுக்குரிய விடைகள்
நாளை வியாழக்கிழமை
(07.04.2016)
வலம்புரி பத்திரிகையில் பிரசுரமாகும்.

◆◆◆

தமிழ்க் கல்விக் கழகத்தின் ஆசிரியர் குழாம்
★யோகராசா - துஷ்யந்தன் (இயக்குநர்)
★அ.நிமலகாந்தன் (யா/இணுவில் மத்திய கல்லூரி)
★றோ.சிவபுத்திரன் (யா/கோப்பாய் மகாவித்தியாலயம்)
★G.மோகன்ராஜ்
(ISA வலயக்கல்விப் பணிமனை, நுவரெலியா)
★K.L.M.நபீல்
(ஹ/ஸாஹிரா தேசிய பாடசாலை, ஹம்பாந்தோட்டை)
★I.முபாரக் (பொ/அல்றிபாய் முஸ்லிம் மகா வித்தியாலயம், பொலநறுவை)